


ஈரோடு

கலைமகள் கல்வி நிலைய நிறுவனர்

திரு. சீ. மீனாட்சிசுந்தரனார்

அவர்களின்

பாராட்டு விழா மலர்





பாராட்டு விழாக் குழுவினர் வெளியீடு



“ விண்மறைக்கும் கோபுரத்தை
விணைமறைக்கும் ஆலயத்தை
கண்போல நினைந்திடுவார்
கருணைநிறை நம்ஐயா ”



திருமிகு சீ. மீனாட்சிசுந்தரனார் அவர்கள்

பாராட்டு விழா மலர்

22-8-1970

வெளியீடு

பாராட்டு விழாக் குழுவினர், ஈரோடு



கலைமகளின் தந்தை

திரு. சி. மீனாட்சிசுந்தரனார், பி. ஏ., எல். டி. அவர்கள்

பாராட்டு விழா, வெள்ளி விழாக் குழு

அலுவல் உறுப்பினர்கள்

தலைவர் : திரு. வி. எம். கைலாசம், இயக்குநர், சக்தி சர்க்கரை ஆலை

துணைத்தலைவர்கள் : திரு. எஸ். ஆர். பி. ராஜப்பா, தலைவர், ஈரோடு நகர் மன்றம்
திரு. மு. சின்னசாமி, எம். எல். ஏ., தலைவர், எழுமாத்தூர் ஊராட்சி

செயலாளர்கள் : திரு. எஸ். பி. வெங்கடாசலம், நகர்மன்ற உறுப்பினர்
,, ப. ச. விசுவநாதன், நகர்மன்ற உறுப்பினர்
,, என். கே. ரத்தினம்

பொருளாளர் : திரு. எஸ். இராமலிங்கம்

அமைப்பாளர்கள் : திரு. வி. எம். கைலாசம், நிதிக் குழு
,, கே. வி. மாரிமுத்து, பி. ஏ., எல். டி., இயக்குநர் குழு
,, ஜான் சுந்தரராஜ், பி. ஏ., பி. டி., மலர்க் குழு
,, சி. அம்பாயிரம், நகர்மன்ற உறுப்பினர், விழா அமைப்புக் குழு
செல்வி எம். முத்தையா, பி. ஏ., பி. டி., தலைமையாசிரியை
புலவர் செ. இராசு, பதிவுச் செயலாளர்

மலர்க் குழு

தலைவர் : திரு. ஜான் சுந்தரராஜ், பி. ஏ., பி. டி.

உறுப்பினர்கள் : செல்வி எம். முத்தையா, பி. ஏ., பி. டி
திரு. கே. வி. மாரிமுத்து, பி. ஏ., எல். டி.
,, ஏ. பெரியசாமி, பி. எஸ்சி., பி. ஏ., பி. டி.
,, புலவர் இரா. சி. சென்னியப்பன்
,, எஸ். பி. வெங்கடாசலம், நகர்மன்ற உறுப்பினர்
,, த. விசுவநாதன்
,, புலவர் செ. இராசு

மலர் மணம் நுகருமுன் .....

'அறிவாலயம்' என்றும், 'கலைக்கோயில்' என்றும் சான்றோர்களாலும், பொதுமக்களாலும் பாராட்டப்படும் பெருமையுடையது ஈரோடு கலைமகள் கல்வி நிலையம். 1955 ஆம் ஆண்டு 77 குழந்தைகளைக் கொண்டு ஐயா **திரு. சி. மீனாட்சிசுந்தரனார்** அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட பள்ளி இன்று ஓங்கி உயர்ந்து வளர்ந்து 3,500 மாணவ மாணவிகளைக் கொண்டு விளங்குகிறது. அதன் வளர்ச்சி போற்றிப் புகழத்தக்கது.

ஒழுக்கத்திலும், கல்வித் தரத்திலும், பிற கலைத் துறைகளிலும் அனைத்துப் பள்ளிகட்கும் கலைமகள் எடுத்துக் காட்டாகத் திகழ்கிறது. இதற்கெல்லாம் மூல காரணமாக விளங்குபவர் ஆன்றவிந் தடங்கிய கொள்கைச் சான்றோராம் நம் ஐயா அவர்களே!

ஐயா அவர்கள் மிகச்சிறந்த ஆசிரியராக, கல்வித் தொண்டாற்றிய தலைமையாசிரியராக, ஆசிரியர்களிடம் அன்புகாட்டும் நிருவாகியாக, பண்பட்ட அரசியல் வாதியாக, பயனுள்ள நகரசபைத் தலைவராக, நேர்மையான வணிகராக, தன்னலம் கருதாப் பொதுநலத் தொண்டராக நம் நகரில் வாழ்ந்து நமக்கெல்லாம் வழி காட்டி வருகிறார்கள். அவரால் இந்நகர் பெருமையடைகிறது என்பதை நாம் அறிவோம்.

அன்னார் தொடங்கிய **கலைமகள் கல்வி நிலையம் இருபத்தைந்து ஆண்டுகள் முடிந்து தன் வெள்ளி விழாவினைக்** கொண்டாடுகிறது.

இந்நன்னாளில், தம் 72 ஆம் வயதிலும் தளராது கல்வித் தொண்டாற்றும் ஐயா அவர்களைப் பாராட்டுவது





நம் கடமை என்பதை உணர்ந்து அவருக்குப் பாராட்டு விழா எடுக்கின்றோம். அதனையொட்டிச் சிறப்பு மலரும் வெளியிடுகின்றோம்.

மலருக்கு எழுத்தோவியங்களை அனுப்பிச் சிறப்பித்த சான்றோர்க்கு விழாக் குழுவின் சார்பில் நன்றி!

விழா முயற்சிகளுக்கு எனக்கு வேண்டிய ஒத்துழைப்பை நல்கிய கலைமகள் தலைமையாசிரியை செல்வி. M. முத்தையா, பி. ஏ., பி. டி., செயலாளர்கள் திருவாளர்கள் S. P. வெங்கடாசலம், எம்.சி., ப. ச. விசுவநாதன், எம்.சி., N. K. ரத்தினம், K. V. மாரிமுத்து, பி.ஏ., எல்.டி., ஜாண் சுந்தரராஜ், பி.ஏ., பி. டி, புலவர் செ. இராசு, ஆகியோர்கட்கும் மலரை விரைவில் அச்சிட்டுதவிய கோவை கலைமணி அச்சகத்தாருக்கும் குழுவின் ஏனைய உறுப்பினர்கட்கும், பொதுமக்கட்கும், பெற்றோர்கட்கும், கலைமகள் மாணவ, மாணவிகட்கும் என் நன்றி.

இந்த எளிய மலரை ஏற்றருளிய ஐயா அவர்களுக்குக் குழுவினரின் நன்றி உரியதாம். ஐயா அவர்கள் நீண்ட நெடுங்காலம் வாழ்ந்து நமக்கும், நம் நாட்டுக்கும் வழிகாட்ட வேண்டும் என்று இறைவனை மனமொழி மெய்களால் இறைஞ்சுகின்றேன்.

ஈரோடு.
22—8—'70

அன்புள்ள,

வி. எம். கைலாசம்,

தலைவர்,

திரு. சீ. மீனாட்சிசுந்தரனார் பாராட்டு விழாக் குழு.

மலர்

Press Secretary to the President of India,
RASHTRAPATHI BHAVAN,
NEW DELHI-4

Dear Shri Kailasam,

The President has asked me to thank you for your letter of the 24th September, 1969, informing him that the Kalaimagal Kalvi Nilayam, Erode, will celebrate its Silver Jubilee in 1970 and that Shri S. Meenakshisundaram Mudaliar will be felicitated on this occasion. While conveying his greetings to Shri Mudaliar, the President sends his best wishes for the success of the Jubilee celebrations.

Yours Sincerely,

(Sd.) A. M. Abdul Hamid

"GIRIJA"
30, EDWARD ELLIOT ROAD
MYLAPORE, MADRAS-4

Dear Sri Kailasam,

Dr. S. Radhakrishnan sends his good wishes to the Kalaimagal Kalvi Nilayam on the occasion of its Silver Jubilee and wishes Sri S. Meenakshisundaram Mudaliar many more years of useful service.

Yours Sincerely,

(Sd.) P. S. to Dr. S. Radhakrishnan

V. K. R. V. RAO
EDUCATION MINISTER, INDIA
NEW DELHI

I was happy to learn that Kalaimagal Kalvi Nilayam, Erode, will be celebrating its Silver Jubilee and also felicitating Shri S. Meenakshisundaram. Shri Meenakshisundaram is a veteran educationist and a great Tamil scholar who has dedicated his life to the cause of education in our country and, even at the age of 72, is still actively inspiring teachers and students with his vision and tireless pursuit of knowledge. I join his friends and admirers in this felicitation function and wish him good health and long life to serve the cause of education still further.

(Sd.) V. K. R. V. Rao

மு. கருணாநிதி
முதலமைச்சர்

தமிழக அரசு
தலைமைச் செயலகம்
சென்னை-9

வருங்காலத் தலைமுறையின் கல்வி வளத்தைப் பெருக்கு வதையே தனது வாழ்வின் லட்சியமாகக் கொண்ட ஈரோடு திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் அந்த லட்சியத்தில் பெற்றுள்ள வெற்றிக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்வது ஈரோட்டிலுள்ள கலைமகள் கல்வி நிலையம். அப்பள்ளியின் சீரிய நிர்வாகம், சிறந்த போதனா முறை, மாணவிகளிடையே ஏற்பட்டுள்ள குடும்ப உணர்வு பற்றி பலர் என்னிடம் பாராட்டிக் கூறியதுண்டு.

நாட்டுப்பற்று - மொழிப்பற்று, குழந்தைகளின் கல்வியில் மிகுந்த அக்கறை உணர்வு ஆகியவற்றைப் பெற்றுள்ள திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் கல்வித் துறைக்குச் செய்துவரும் பல நற்பணிகளைப் பாராட்டி விழா எடுப்பது எனக்குப் பெரு மகிழ்ச்சி அளிக்கிறது.

விழா இனிது நடந்தேற எனது நல்வாழ்த்துக்கள்.

(ஒ-ம்) மு. கருணாநிதி

இரா. நெடுஞ்செழியன்
கல்வி - நலத்துறை அமைச்சர்

தமிழக அரசு
தலைமைச் செயலகம்
சென்னை-9

கல்வியைப் போற்றி, கல்வியைப் பரப்பி, கல்வியோடு வாழும் கல்விச் செல்வர் திரு. சீ. மீனாட்சிசுந்தரம் அவர்களின் பணிகளையும், அவரது பணியினால் தழைத்து வளரும் ஈரோடு கலைமகள் கல்வி நிலையத்தின் சிறப்பினையும் தமிழ் கூறு நல்லுலகம் நன்கு அறியும்.

41 ஆண்டுக்காலம் பணியாற்றி இன்றும் எடுத்துக்காட்டாக விளங்கும் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்களுக்குப் பாராட்டு விழாவும் கலைமகள் கல்வி நிலைய வெள்ளி விழாவும் நடைபெற இருப்பது அறிந்து மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

கல்வித்துறை அறிஞர் பெருமக்கள், அலுவலர்கள், பொது மக்கள் அனைவரும் புது ஊக்கம் பெறும் வகையில் விழா அமைய வேண்டும் என்று விரும்புகிறேன். விழா மலர் முயற்சிக்கு என் நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்கள்.

(ஒ-ம்) இரா. நெடுஞ்செழியன்

எம். பக்தவத்சலம்

'மல்லிகா'
15, வாரன் ரோடு, சென்னை-4

அன்புள்ள தலைமை ஆசிரியை அவர்களுக்கு,

தங்கள் கல்வி நிலையம் கால் நூற்றாண்டு சீரிய தொண்டு புரிந்திருப்பதைப் பாராட்டும் விழாவோடு, இதற்கு மூலகாரணமானவரும், 41 ஆண்டுகள் கல்வித் துறையில் அற்புதமான சேவை புரிந்திருக்கிறவருமான ஐயா திரு. மீனாட்சி சுந்தரனாரின் சாதனைகளைப் பாராட்டும் விழாவும் நடைபெறுவது பற்றி மிக்க மகிழ்ச்சி. கலைமகள் கல்வி நிலையம் இன்று தலைசிறந்த நிலையமாக விளங்குகிறது. மாணவிகள் அறிவிற் சிறந்தவர்களாக விளங்குகின்றனர். 7 ஆண்டுகளாக எல்லா மாணவிகளும் இறுதிப் பரீட்சையில் தேறிவருவது வரலாறு காணாத சாதனை. இந்தப் பெருமை பெரும்பாலும் முதல்வரையே சாரும். அவர்களுக்கும், உங்கள் எல்லோருக்கும் என் வாழ்த்துக்கள்.

அன்புள்ள,

(ஒ-ம்) எம். பக்தவத்சலம்

பெரியார் ஈ. வெ. ராமசாமி

பெரியார் மாளிகை,
திருச்சிராப்பள்ளி - 17

அன்புள்ள,

அய்யா வணக்கம். தங்களின் கடிதம் கிடைக்கப்பெற்றது மகிழ்ச்சி. தாங்கள் திரு. சீ. மீனாட்சிசுந்தரம், பி.ஏ.,எல்.டி. அவர்கள் கல்வித் துறைக்குச் செய்துவரும் பணிகளைப் பாராட்டவும், சிறப்பு மலர் வெளியிடவும் இருப்பது அறிய மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

பாராட்டிற்குரிய திரு. மீனாட்சிசுந்தரம், பி.ஏ., எல்.டி. அவர்களுக்கு பாராட்டு விழா நடத்துவதும், சிறப்பு மலர் வெளியிடுவதும் மிகப்பொருத்தமும், சிறப்பும் உடையதாகும். விழா சீரும் சிறப்புமாக நடைபெற வேண்டுமென்று ஆசைப்படுகின்றேன்.

தங்களன்புள்ள,

(ஒ-ம்) ஈ. வெ. ராமசாமி

கு. காமராஜ்

8, திருமலைபிள்ளை ரோடு,
தி. நகர், சென்னை-17

அன்புடையீர்,

தங்கள் கடிதம் கிடைத்தது. கலைமகள் கல்வி நிலையத்தின் வெள்ளி விழாவும், திரு. சீ. மீனாட்சி சுந்தரம் அவர்களுக்கு பாராட்டு விழாவும் நடைபெற இருப்பது அறிந்து மகிழ்ச்சி.

கல்வித் துறையில் அக்கறை கொண்டு "கலைமகள் கல்வி நிலையம்" என்ற பெயரில் பள்ளியை நிறுவி சேவை புரிந்து வரும் திரு. சீ. மீனாட்சி சுந்தரம் அவர்கள் நீண்ட நெடுநாள் வாழ இறைவன் அருள்புரிய வேண்டுகிறேன்.

தங்களன்புள்ள,

(ஒ-ம்) கு. காமராஜ்

N. D. SUNDARAVADIVELU,
VICE - CHANCELLOR
UNIVERSITY OF MADRAS

அன்புடையீர்,

ஏறத்தாழ அரை நூற்றாண்டு காலமாகக் கல்விப் பணியாற்றி வரும் திரு. சி. மீனாட்சிசுந்தரம், பி. ஏ., எல். டி., அவர்கள் செய்து வரும் பணிகள் பாராட்டுக்குரியன. மூத்தவர்கள் செய்யும் நல்ல தொண்டுகளைப் பாராட்டுவதன் மூலம்தான் இளைய தலைமுறைகளையும் ஆக்கப் பணிகளிலே, நல்ல தொண்டுகளிலே திருப்பிவிட முடியும். இதை உணர்ந்து ஈரோட்டுப் பெருமக்கள் திரு. சீ. மீனாட்சிசுந்தரம் அவர்களுக்குப் பாராட்டு விழா எடுத்து அவ்வமயம் சிறப்பு மலர் வெளியிட ஏற்பாடு செய்வது போற்றுவதற்குரியது. விழா சீரோடும் சிறப்போடும் நடைபெறுவதாக. சிறப்பு மலர் நறுமணம் வீசுவதாக.

திரு. மீனாட்சிசுந்தரனார் அவர்களின் கல்வித் தொண்டின் சிகரமாய் விளங்குவது கலைமகள் கல்வி நிலையம். அந்நிலையம் தொடர்ந்து ஏழு ஆண்டுகளாக பொதுத் தேர்வில் 100% தேர்ச்சி பெறுவதைப்போல வருங்காலத்திலும் அந்த உன்னத நிலையிலே விளங்க என் நல்வாழ்த்துக்கள்.

பாராட்டுதலுக்குரிய திரு. சீ. மீனாட்சிசுந்தரம் அவர்களுக்கு என் வணக்கமும் அன்பும்.

தங்கள் அன்புள்ள,

(ஒ-ம்) நெ. து. சுந்தரவடிவேலு

சை. வே. சிட்டிபாபு
பள்ளிக் கல்வி இயக்குநர்
சென்னை-6

அன்புடையீர்,

ஈரோடு, கலைமகள் கல்வி நிலையத்தின் நிறுவனர், உயர்திரு மீனாட்சிசுந்தரனார் அவர்களின் கல்வித் தொண்டினை யாரே அறியார்? இயற்கையிலேயே ஆற்றல் மிக்க ஆசிரியராகிய அவர் கல்வியின் வளத்திற்கும் தரத்திற்கும் அரும்பாடுபட்டு வரும் பெரியாருள் மிகச் சிறந்த ஒருவர் ஆவர்.

25 ஆண்டுகளுக்கு முன் 77 குழந்தைகளுடன் தொடங்கிய அவரது இலட்சிய ஒளியாகத் திகழும் கலைமகள் கல்வி நிலையம், இன்று மூவாயிரம் மாணவியர்களைக் கொண்டு விளங்குவது போற்றற்குரியது.

பள்ளியிறுதித் தேர்வில் கலைமகள் கல்வி நிலையத்து மாணவியர் கடந்த ஏழு ஆண்டு காலமாகத் தொடர்ந்து 100 சத விகித வெற்றியைக் கண்டிருப்பது கல்வி வரலாற்றிலேயே மிகச் சீரிய சாதனை ஒன்றாகும். தாங்களும், தங்களைச் சார்ந்த ஆசிரியப் பெருமக்களும் அத்தகைய வெற்றிக்கு எடுத்துக்கொள்ளும் பெருமுயற்சிகள் ஏனைய கல்வி நிறுவனங்களுக்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளன. இதையொட்டி உங்களனைவரையும் ஊக்குவித்து உற்சாகப்படுத்தி உங்களது பண்பட்ட திறன்களை திட்டமிட்டுப் பயன்படுத்திவரும் நண்பர் மீனாட்சிசுந்தரனாரை கல்வித்துறையே பாராட்டக் கடமைப் பட்டுள்ளது.

தனது சீர்மல்கு கல்விப் பணியின் வெள்ளி விழாக் காணும் ஈரோடு, கலைமகள் கல்வி நிலையத்தின் நிறுவனர் என்ற பெருமைக் குரிய தோழர் மீனாட்சிசுந்தரனார் அவர்கள் பல்லாண்டு வாழ்ந்து கல்வித் துறைக்கும் தமிழ் நாட்டிற்கும் தொடர்ந்து பெருந் தொண்டாற்ற எனது இதயங்கனிந்த வாழ்த்துக்கள்.

தங்கள் அன்புள்ள,

(ஒ-ம்) சை. வே. சிட்டிபாபு

V. T. TITUS, M. A., M. Litt., B. T.,
Director of Collegiate Education
MADRAS-6

Thiru S. Meenakshisundara Mudaliar is a remarkable man in many ways.

I have known him intimately for many years and we have had so many discussions.

He has made a mark in various fields of activity. He has played a prominent part in public and political life and has been a distinguished Municipal Chairman. He has been a successful yarn merchant also and made his pile. As a scholar, orator, social reformer and leader, he is famous. But as the founder of a fine high school, as a teacher-head master and as an educationist he had attracted me most. He has rendered great services. He deserves all respect and honour.

May he live many more years and give the right leadership !

(Sd.) V. T. Titus

Dr. SUSHILA NAYAR
MEMBER PARLIAMENT

1, Balwantray Mehta Lane
(CURZON LANE)
NEW DELHI

I am glad to know that the citizens of Erode are going to celebrate the Silver Jubilee of Kalaimagal Kalvi Nilayam. It is creditable that this institution has been having 100% results for the last seven years in the SSLC Public Examination. The credit for the success of this type for any institution must go primarily to its staff. It is remarkable that Shri Meenakshi-sundaram is still active in teaching at the age of 72 and he has been not only instructing and inspiring the teachers but also the public roundabout with his ideals of education for a new era. I send my greetings to him and my congratulations to the institutions on what it has achieved along with my good wishes for greater achievements in the next 50 years.

(Sd.) Sushila Nayar

ஒருவர் தமது வாழ்விலே செய்யக் கூடிய பணி தாமாக விரும்பி எடுத்துக் கொண்டதாக இருக்கும்; இல்லையேல் அஃதாக வந்து அமைவதாக இருக்கும்.

ஈரோடு திரு. மீனாட்சிசுந்தர முதலியார் அவர்கள் தமது வாழ் நாட்களை ஆசிரியராகப் பணி செய்து கழித்தார். ஆசிரியர் வேலையைத் தாமாக விரும்பி எடுத்துக் கொண்டாரா அல்லது அவ்வேலை அவரை வந்தடைந்ததா என்று உறுதியாகச் சொல்வதற்கில்லை.

ஆனால் ஒன்று மட்டும் திண்ணமாகச் சொல்லமுடியும். அவர்கள் ஒரு சிறந்த ஆசிரியராகவும், வெற்றி மிகுந்த தலைமை ஆசிரியராகவும் பணி செய்து விட்டு ஆசிரியப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.

ஆனால் விட்டால்தானே! கல்வி அவரைப் பின்னும் கவ்விக் கொண்டது!! ஓய்வுடன் வாழக்கூடிய வாழ்நாளின் பிற்பகுதியை ஒரு சிறந்த கல்விக் கட்டுக்கோப்பாக மாற்றி அமைத்து விட்டார்.

இருபத்தைந்து ஆண்டுகளிலே குழந்தைக் கல்வி, தொடக்கக் கல்வி, நடுத்தரக் கல்வி, உயர்தரக் கல்வி ஆகிய நான்கு படிகளிலே சுமார் இரண்டாயிரம் பெண் குழந்தைகளுக்கு நல்ல கல்வி தரும் நான்கு ஸ்தாபனங்களை இணைத்து அணைத்து உருவாக்கியுள்ளார். இது ஒரு பெரிய காரியம்.

72 வயதாகியும், இன்னும் மண்வெட்டி எடுத்துத் தோட்ட வேலை செய்யும் மனப்பான்மை கொண்டுள்ளார். இதிலிருந்தே கலைமகள் கல்வி நிலையக் குழந்தைகளும் ஆசிரியர்களும் எப்படி இருப்பார்கள் என்று தெரிந்து கொள்ளலாம்.

திரு. மீனாட்சிசுந்தர முதலியார் அவர்களுக்கு எனது மனப் பூர்வமான பாராட்டு! கலைமகள் கல்வி நிலையத்திற்கு எனது இனிய வாழ்த்துக்கள்!!

(ஒ-ம்) நா. மகாலிங்கம்

P. கக்கன்

தலைவர்,

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி

அன்புடையீர்,

வணக்கம். தாங்கள் அனுப்பிவைத்த கடிதம் கிடைத்தது வெள்ளி விழா, பாராட்டு விழா நடைபெறுவதை அறிந்து மிக்க மகிழ்ச்சி அடைந்தேன்.

தங்கள் ஸ்தாபனம் பல்லாண்டு காலமாக கல்விக்காக செய்து வரும் அரிய பணி போற்றத்தக்கது. இதற்கு முக்கிய காரணம் நிறுவனர் உயர்திரு சீ. மீனாட்சிசுந்தரம் அவர்களும் அவர்களுடன் உடன் இருந்து பணியாற்றிய இதர அன்பர்களும் ஆசிரியப் பெருமக்களும் ஆவர். ஒரு முறை தங்கள் கல்வி நிலையத்திற்கு வந்து பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. பார்த்துப் பரவசமுற்றேன். இப்பள்ளியில் படித்து வெளியேறிய மாணவர்களும், மாணவியர்களும் தெய்வ பக்தியோடும், தேசப்பக்தியோடும் சென்று இருப்பார்கள். அவர்களும் தாங்கள் படித்த பள்ளிக்கு எந்தவிதமான ஒத்தாசையும் உதவியையும் செய்வார்கள் என்றும் நம்புகிறேன்.

திரு. சீ. மீனாட்சிசுந்தரம் அவர்கள் இன்னும் பல்லாண்டுகள் நல்ல தேக சுகத்தோடு வாழ்ந்து கல்விக்கு அதிகம் பாடுபட எல்லாம் வல்ல பரம்பொருளை பிரார்த்திக்கிறேன்.

விழா சீரும் சிறப்புமாக நடைபெறவும், சிறப்பு மலர் நன்கு வெளிவந்து மாணவர்களுக்கு உபயோகப்படும்படி இருக்கும் என்று நம்புகிறேன்.

தங்களன்புள்ள.

(ஒ-ம்) பி. கக்கன்

G. R. GOVINDARAJULU

PEELAMEDU
COIMBATORE-4

Dear Selvi Muthiah,

I am glad that you are getting up a function to honour Thiru S. Meenakshisundara Mudaliar, the Founder of your School on his completing forty years of service in the cause of Education.

Private agencies in the field of education is passing through a time of stress. Aspersions are being cast on their integrity. So it is befitting that we remember the services of one who, by his selfless devotion and honest, sincere work has brought into existence a number of private institutions noted for their excellence, fostering love for children and character-building. A few such institutions lay the standard for all schools to follow.

Thiru Mudaliar has devoted himself heart and soul to his institutions. Under his benevolent personal care, these institutions have grown from strength to strength and are now pinnacles of glory.

It is really creditable that Kalaimagal Kalvi Nilayam has produced cent per cent passes at the S. S. L. C. Public Examination for seven years in succession. It speaks volumes of the fine team-work exhibited by the teachers. I congratulate the Headmistress and her staff on this splendid record.

I wish and pray that Thiru S. Meenakshisundara Mudaliar is spared for some more years so that, not only the institutions under his direct and personal care but teaching fraternity in general, benefit by his noble ideals.

I wish all the institutions under him all success.

Yours sincerely,

(Sd.) G. R. Govindarajulu

K. SUNDARAM, M. P.

RASAKONDALU
Circuit House Road
COIMBATORE

I am extremely happy that the Public of Erode are taking steps to celebrate in April 1970 the services rendered by Thiru S. Meenakshisundara Mudaliar, B. A., L. T., affectionately known as 'AYYAH' and to commemorate his services in many ways, one of them being through a Souvenir to be released on the occasion. It is but fitting and proper that the public of Erode have decided to do so. I commend their efforts and wish them success.

Thiru 'IYYA' is a public servent 'par excellence', whether it was in the field of Municipal administration or in the field of Secondary or Elementary Education or any other, for that matter, he strove for high standards and brought to bear on their problem his maturity of thought and the full weight of his personality. His labours in the various committees were of a piece with his work in daily life and by lending the full force of his personality he lent distinction to them.

Of course, his chosen field is Education in which he is a beacon light and serves to spread the light of knowledge far and wide. His lasting contribution to education will be the famous Kalaimagal Kalvi Nilayam which, incidentally, will be celebrating its Silver Jubilee. An institution which has sent up brilliant sets of pupils year after year and for seven years in the run secured the coveted cent percent results at the S. S. L. C. Public Examination must have the core of excellence in an extreme measure. It is evident 'Iyyah' has helped the Headmistress and her staff into rising to heights of purposful activity and missionery zeal in their daily routine of effort and endeavour.

It is remarkable that even now at the advanced age of 72 he retains fitness of physique and enthusiasm of spirit for work which are the envy of persons far his juniors. The secret, of course, is his love for work and devotion to duty on behalf on the 3,000 and old children in his school complex.

I am proud to know 'Iyyah' and to have been associated with him in the Coimbatore District Aided School Managements' Association to whose work he has made telling contributions. I wish him many more years of active service in his chosen fields and in his beloved school. Such men are rare and they are the salt of the earth.

He deserves our gratitude and I wish him many, many years of happy life.

I remain,
(Sd.) *K. Sundaram*

ஈரோடு ஸ்ரீ சீ. மீனாட்சி சுந்தர முதலியார் கல்விக்குச் செய்திருக்கும் சேவை பெரிது. அவரே மிக நல்ல ஆசிரியர். நல்ல ஆசிரியருக்கு வேண்டிய குணாதிசயங்கள் அனைத்தும் அவரிடம் நிறைந்திருக்கின்றன. பிள்ளைகளிடம் அன்பு, அவர்கள் முன்னேற்றத்தில் அக்கறை, கல்வி முறையில் வல்லமை, கல்வி போதிப்பதில் ஒரு மகிழ்ச்சி. அவை எல்லாவற்றிற்கும் மேலாக கல்விப் பணியில் ஒரு மட்டற்ற இன்பம். இவையாவும் அவரிடத்தில் நிரம்பியிருக்கின்றன.

அதனால் தான் ஒரு ஆசிரியராக இருந்ததோடு மட்டும் அவர் நிற்கவில்லை. ஆசிரியர் பள்ளியைத் துவங்கி நெடுநாள் செவ்வனே நடத்திய பெருமை அவருடையது. அதன் பிறகு கலைமகள் கல்வி நிலையத்தைத் தோற்றுவித்தார். அதை மிகுந்த உற்சாகத்துடன் கால் நூற்றாண்டுகள் நடத்தி வருகிறார்.

அவருக்கு குழந்தைகளிடத்தில் இருக்கும் பேரன்பும், கல்வி போதிப்பதில் இருக்கும் உற்சாகமும் அவரை கலைமகள் கல்வி நிலையத்திற்சென்று பார்த்தவர்கள் தான் உணர முடியும். பள்ளியின் ஒவ்வொரு பகுதியிலும் அவர் கவனம் சென்று சுத்தமாக இருக்கிறது. செய்யவேண்டிய ஒவ்வொரு காரியமும் அவர் உள்ளத்தைக் கவருகிறது. பிள்ளைகளிடம் காண்பிக்கும் பரிவும், அன்பும் அப்பள்ளிக்கு அடிப்படையாக இருந்து அப்பள்ளியை நம்நாட்டில் மிகச்சிறந்த பள்ளியாகச் செய்திருக்கிறது.

நாடு சிறக்க, மக்கள் உய்ய அவர் இன்னும் நெடுநாள் வாழ்ந்து கல்விப் பணியில் தொடர்ந்து ஈடுபடுவாராக.

(ஒ-ம்) தி. சு. அவினாசிலிங்கம்

சாந்தலிங்க இராமசாமியடிகள், பேரூராதீனம்,

பேரூர், (அஞ்சல்) கோயமுத்தூர்-10

தமிழ்நாட்டில் கல்வியும், ஒழுங்கும் பேணப்படும் கல்வி நிறுவனங்களில் தலைசிறந்து விளங்குவது கலைமகள் கல்வி நிலையம். இங்கு பெண் கல்வி சிறந்த முறையில் வளர்ந்து வருகிறது. சமய உணர்வு தழைப்பதற்குரிய வாய்ப்புக்களைப் பெரிதும் நல்குவது இக்கல்வி நிலையம். தமிழகத்தின் தெய்வீக நெறியே வாழ்வின் விளக்கம்; அதனை ஒவ்வொருவரும் பின்பற்றவேண்டுமென்பது இக்கல்வி நிலையத்தின் குறிக்கோள். ஆதலின் பெண்களின் ''சாதம் படைக்கும் கை தெய்வச்சாதி படைக்கும் கை''யாக மிளிர வேண்டும் என்று ஆயிரக்கணக்கான சிறுமிகளின் உள்ளுணர்வை வளர்த்து வருகிறது. நூற்றுக்கு நூறு தேர்வில் வெற்றி பெறுகின்றனர் மாணவியர்.

இவ்வாறு திறம்பட இக்கல்வி நிலையம் நடைபெறக் காரணம் சைவத்திரு எஸ். மீனாட்சி சுந்தர முதலியார் அவர்களது அயராமுயற்சியாகும். திரு. முதலியாரவர்கள் இருமொழிக் கொண்டல், சமய நூலகம்; நடமாடும் கலைக்கழகம் என்று பலரும் போற்றும் முறையில் வாழ்பவர். சமயம் வீறுபெற முழங்கும் அருள் நெறித் தளபதி. தன்னினம் சமய உணர்வில் பின் தங்கிவிடக்கூடாது என்ற ஏக்கமும் அதனைப் போக்கி ஆக்கந்தரும் வீர உணர்வும் ஒருங்குடையவர். ஓயாதுழைப்பவர். தாமாக முயன்று பெரிய நிறுவனத்தை உருவாக்கி, கண்போலக்காத்து நடத்திவரும் கலைமகள் கல்வி நிலையத்திற்கு வெள்ளி விழா நடப்பது குறித்துப் பெரிதும் மகிழ்கின்றோம். வெள்ளிவிழாக் காணும் இந்நிலையம் மீனாட்சி சுந்தர முதலியாரவர்களது உயரிய நோக்கத்திற்கேற்ப, பெண்கள் கல்லூரியையும் பெற்று நெடிது பணியாற்றித் திகழச் சாந்தலிங்கப் பெருமான் தண்ணருள் புரிவாராக. திரு மீனாட்சி சுந்தர முதலியார் அவர்கட்கும், விழாக்குழுவினர்க்கும் எமது வாழ்த்துக்கள்.

(ஒ-ம்) சாந்தலிங்க இராமசாமியடிகள்

டாக்டர். K. குழந்தைவேல்.
M.A., M.A., (OHIO) Ph.D.,
முதல்வர்,

ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் வித்யாலயா
ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி.

அன்புடையீர்,

வணக்கம்.

திரு. சி. மீனுட்சிசுந்தரம் அவர்கள் செய்துவரும் சிறப்பான கல்விப் பணியை தமிழ்நாடே நன்கு அறியும். அப்பணியின் சின்னமாகக் கலைமகள் கல்வி நிலையம் விளங்குகிறது. கல்வித் தரத்திலும் ஒழுக்கத்திலும் கலைமகள் பள்ளி சிறப்பாக இருக்கின்றது என்ருல் அதற்கு திரு. மீனுட்சிசுந்தரம் அவர்களது லட்சியங்களும் அயராத முயற்சியுமே காரணம்.

திரு. மீனுட்சிசுந்தரம் அவர்கள் கலைமகள் கல்வி நிலையத்தில் இயங்கும் முறையை சிலமுறை நான் நெருங்கிக் கவனித்திருக்கிறேன். அவர்கள் சாதாரணமான தாளாளராகவோ, நிறுவுனராகவோ இருப்பதில்லை. குழந்தைகள் பள்ளிமுதல் உயர்நிலைப்பள்ளிவரை எல்லா வகுப்புகளுடனும் நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கிருர். குழந்தைகள் பள்ளியிலும், ஆரம்பப் பள்ளியிலும் தானே வகுப்புகளும் எடுத்துக் கொள்ளுகிருர். அவர் வகுப்புகளுக்குச் செல்லுமுன் தயார் செய்யும் போதனை உபகரணங்களையும், புத்தகங்களையும் பார்த்து மிகவும் அதிசயித்தேன். மாணவர்கள் மனதில் ஆர்வத்தைத் தூண்டுவது என்பது எளிதான காரியமல்ல. அதற்கு ஆசிரியருக்கு ஆர்வம் இருக்கவேண்டும். தேவையான தயாரிப்புடன் அவர் போதிக்கவேண்டும். இவ்விரண்டும் திரு. மீனுட்சிசுந்தரம் அவர்கள்பால் எல்லையற்று விளங்குகின்றன. அதன் பிரதிபலிப்பாகத்தான் கலைமகள் கல்வி நிலையம் பேரும் புகழும் பெற்று வளர்ந்து வருகிறது.

அவரிடம் கொஞ்ச நேரம் பேசினுல் எத்தனை கருத்துக்களைக் கூறுகிருர்! எவ்வளவு உயர்ந்த குறிக்கோளை நம் கல்வி நிலையங்கள் அடைய வேண்டுமென விரும்புகிருர்! இவ்வளவு கல்வி ஆர்வமும் முயற்சியும் கொண்ட பெரியவர்களைக் காண்பது மிக அருமை. அதிலும் தனது 72-வது வயதிலும் இவர் காட்டும் ஊக்கமும் உழைப்பும் இளைஞர்களுக்கு ஒரு பெரிய எடுத்துக்காட்டு. இவர் வழியைப் பின்பற்றி மற்ற ஆசிரியர்களும், கல்விச் சேவை செய்பவர்களும் நம் நாட்டை முன்னேற்றவேண்டும்.

திரு. மீனுட்சிசுந்தரம் அவர்கள் இன்னும் பல்லாண்டு இச்சீரிய சேவையை ஆற்ற ஆண்டவன் அவருக்கு உடல் நலத்தையும் உற்சாகத்தையும் அளிக்க ஆண்டவனை வேண்டுகிறேன். தொடர்ந்து பல ஆண்டுகள் எல்லா மாணவிகளையும் பள்ளியிறுதிப் பொதுத்தேர்வில் வெற்றிபெற வைப்பதோடு அவர்களுக்குச் சிறந்த பன்முகக் கல்வியை அளித்துவரும் கலைமகள் கல்வி நிலையம் வெள்ளிவிழாவென்ன பொன்விழா, வைரவிழா, நூற்ருண்டுவிழா எனப் பல விழாக்களைக் கொண்டாடி நாட்டில் கல்வி ஒளி பரப்ப ஆண்டவன் அருள்புரிவாளுக.

தங்களன்புள்ள,
குழந்தைவேல்.

Mrs. RAJAMMAL P. DEVADAS
M. A., M. Sc., Ph. D. (Ohio State)
PRINCIPAL

Sri Avinashilingam Home Science College,
COIMBATORE-11.

Dear Miss Muthaiya,

We have noted with great pleasure and pride that the Silver Jubilee of Thiru Meenakshisundaram Avl., Founder, Principal and Correspondent of the Kalaimagal Kalvi Nilayam, Erode will be celebrated during the last week of August 1970. It is an excellent idea to release a brochure during the celebrations as a befitting momento to mark the yeomen services rendered by the Founder towards the cause of education. The famous KASH he used to present in the form of knowledge, attitude, skilfulness and habit to every pupil who had benefitted within the portals of "Kalaimagal" will help any alumnus to shine in her life.

We send our best wishes and prayers for long life to this unique educationist. May he live long to further his noble mission and ideas in the field of education and social service.

With regards,

Yours sincerely,

(Sd.) RAJAMMAL P. DEVADAS

A. J. TODMAN (Rev)
ASIA SECRETARY
C. C. W. M.

CONGREGATIONAL COUNCIL FOR WORLD MISSION,
Livingstone House-11, Carteret Street, London,
S. W. I, England.

I have very great pleasure in sending my sincere greetings to the Kalaimagal Kalvi Nilayam on the occasion of its Silver Jubilee, and to the founder of the school, Sri S. Meenakshisundaram Mudaliar B. A. This will be a great occasion in which you with many others will be celebrating twenty five years of excellent service to the community through this well known school, and you will be extending the felicitations of the public to Sri S. Meenakshisundaram Mudaliar by whose vision, drive and wise guidance this school has been maintained. I am glad to have this opportunity of sharing in this small way in these celebrations.

During my years of residence in Erode, I had the pleasure of knowing Sri S. Meenakshisundaram Mudaliar and I remeber him with affection. He is a man of vision, who has been able to see that vision realised in the great school that he has developed. With the devoted assistance of the Headmistress, Miss M. Muthiah and of the loyal staff of the school, an educational institution of high quality and good repute has been built up. This institution is more than a school. It is a place of training for life, and it sets for the whole of South India, a very noble example of high educational standards. I trust that this Silver Jubilee will not merely be a time of thanksgiving and felicitation, but also the starting point for new developments and for greater adventures in the pursuit of education for the girls of India. I pray also that it will not be only a place of learning but a centre for spiritual development and the strengthening of the moral character of the girls in the days to come.

With kind regards,

Yours sincerely,

(Sd.) A. J. Todman

லெனின்கிராட்,
ரஷ்யா.

பேராசிரியர். செம்பியன்,

தமிழ்நாட்டிலேயே பெயரும் புகழும் பெற்ற 'கலைமகள் கல்வி நிலைய'த்தின் வெள்ளிவிழா கொண்டாடப்படும் நாட்களில் அச் சிறந்த பள்ளிக்கூடத்தைச் சேர்ந்த எல்லோருக்கும் எனது மனமுவந்த வாழ்த்தும் பாராட்டும் உரித்தாகுக!

சிறப்பாக, அப்பள்ளியை நிறுவியவரும் பல்லாண்டுக்காலமாக நடத்திவருபவரும் தமிழகத்தில் நற்கல்வி பரவுமாறு போற்றத்தக்க இன்னும் பலவற்றையும் செய்து வருபவரும் ஆகிய உயர்திரு. சீ. மீனாட்சி சுந்தரம் அவர்களுக்கு என் பணிவான நல்வாழ்த்துக்களையும் உளமார்ந்த நல்விழைவுகளையும் கூறிக் கொள்கிறேன்.

1966-ல் அங்குப் போய், அங்குள்ள ஆசிரியர்களோடும் மாணவிகளோடும் கலந்துபேசி மகிழ்ந்த நினைவுகள் என் உள்ளத்தில் என்றும் பசுமையாக உள்ளன.

'கலைமகள் கல்வி நிலையம்' இனியும் பல வெற்றிகளை அடையப் போகிறது என்னும் திட நம்பிக்கையுடன்

அன்புள்ள

(ஒ.ம்.) 'செம்பியன்'

Dr. M. ARAM
Director

PEACE CENTRE, KOHIMA,
NAGALAND.

Sri S. Meenakshisundaram Mudaliar is an impressive and unique figure in the educational world of Tamilnadu. His personality is a happy synthesis of bhakti, gnana and karma. He combines in himself ancient wisdom and modern science. His long and devoted service to the cause of education is a source of inspiration to one and all. My fervent prayers and very best wishes for his long life, health and vigour.

(Sd.) M. ARAM

தவத்திரு. சித்பவானந்த சுவாமிகள்

ஸ்ரீ இராமகிருஷ்ண தபோவனம்,
திருப்பராய்த்துறை.

தனக்கென வாழாது பிறர்க்கென வாழும் பெரு மக்கள் உலகில் மிகச் சிலரே உளர். செயற்கரிய செயல்களை உலக நன்மையின் பொருட்டு அன்னவர்களே செய்து சாதிக்கின்றனர். அத் திருக்கூட்டத்தில் திரு சீ. மீனாட்சிசுந்தரம் பி. ஏ., எல். டி. இனிது இடம் பெறுகிறார். அவரது தந்நலம் கருதா திருத்தொண்டுக்கு எடுத்துக்காட்டாயிருப்பது ஈரோடு கலைமகள் கல்வி நிலையம். இறைவன் அருளால் திருவாளர் சீ. மீனாட்சிசுந்தர முதலியார் அவர்கள் இன்னம் பல்லாண்டு உடல் திட்பத் துடனும் மன ஊக்கத்துடனும் வாழ்ந்திருந்து மக்களுக்கு அரும்பணி யாற்றி வருவாராக.

(ஒ.ம்.) சித்பவானந்த

R. NARAYANAN SERVAI, M.A.,L.T.
Former Headmaster & Correspondent.

RAJAH'S HIGH SCHOOL,
SIVAGANGA.

Dear Sir,

It is with pleasure and pride that I hasten to send a message on the occasion of the celebration to commemorate the services of Thiru S. Meenakshisundaram, B. A., L. T., Founder of the Kalaimagal Kalvi Nilayam at Erode. He is a born teacher and a great educationist. I had the pleasure of working under him as an Assistant, when he came to Sivaganga as Headmaster, Rajah's High School, Sivaganga in 1928 and during the four years he was here he had transformed the school into an abode of social activity, service and usefulness. His participation in Sports and Games, his eloquence at Public meetings, his entertaining conversation at Rajah Doraisingam's parties with friends and his inspiring and awe striking personality made his presence at Sivaganga an ennobling example for others to follow. I joined as an Assistant fresh from Teachers' College, Saidapet on the same day as he joined as Headmaster and I have taken him as my example to do service in my own town to my Alma Mater as he had done to his birth place Erode. To start an educational institution is fraught with difficulties and to start several institutions single-handed and maintain them efficiently and with such credit at examinations require great talents. Our Thiru S. Meenakshisundaram is a great talented educationist, who in every way richly deserves the commemoration celebration the people of Erode had thought of. May he live long and in good health to see his great institutions grow more and more.

Yours sincerely,

(Sd.) R. NARAYANAN SERVAI

திருமதி. சரோஜினி வரதப்பன்
'மல்லிகா'

15, வாரன் ரோடு,
சென்னை-4.

கலைமகள் கல்வி நிலையத்திற்கு 25 ஆண்டுகள் நிறைந்த வெள்ளி விழாவும், ஐயா அவர்களுக்குப் பாராட்டு விழாவும் நடக்க இருப்பது கேட்க மிக்க மகிழ்ச்சி.

ஐயா அவர்களின் தன்னலமற்ற சேவையின் சின்னமாகக் கலைமகள் கல்வி நிலையம் சென்ற 25 ஆண்டுகளாக ஆற்றியுள்ள பணிகள் நம் வார்த்தைகளுக்கு அடங்காதவை. கலைமகளின் இருப்பிடமாகவே இந்தப் பள்ளி அமைந்திருப்பதற்கு சிறந்த சான்று, சென்ற ஏழு ஆண்டுகளாக S. S. L. C. பரீக்ஷையில் அது பெற்றுள்ள நூற்றிற்கு நூறு சத விகித வெற்றியே யாகும். எழுபத்திரண்டு வயதைத் தாண்டிய ஐயா அவர்கள் 27 வயது இளம் வாலிபர் போல் ஓடி ஆடி துடிப்புடன் பள்ளியின் பால் காட்டும் பரிவுதான் இதன் வளர்ச்சி உயர்ந்த தரம் இவைகளுக்கு காரணம் என்று சொன்னால் அது மிகையாகாது. காந்திஜியின் உயர்ந்த லட்சியங்களையும் கருத்துக்களையும், நடைமுறையில், இளம் சிறுர்களின் உள்ளங்களில் பசுமரத்தாணி போல் பதியவைக்க எடுத்துள்ள சாதனை பாராட்டுதற்குரியது. வருங்கால யுவதிகளுக்கு இது ஒரு கலைக்கூடமாக, ஆலயமாக அமைந்துள்ளது. இதில் பணியாற்றும் ஆசிரியைகளின் ஒத்துழைப்பு பாராட்டுதற்குரியது. தலைமை ஆசிரியையின் சேவைகளைக் குறிப்பிடாமல் இருக்க முடியாது. இத்தகைய கல்வி ஸ்தாபனங்கள் ஏராளமாகப் பெருகி நம் மக்களை சான்றோர்களாக்க ஆண்டவன் அருள் புரியவேண்டும். இதன் சிறந்த சேவைகளை நேரில் காணும் வாய்ப்பு பெற்றதை நான் எனது பெரும் பாக்கியமாக கருதுகின்றேன். இங்கு ஒரு முறை சென்று வந்தால் அதுவே ஒரு சிறந்த படிப்பினையாகும்.

விழாக் குழுவினருக்கு என் நல்வாழ்த்துக்களும், பாராட்டுக்களும்.

(ஒ.ம்) சரோஜினி.



சுழற்குழுக் கூட்டத்தில் ஐயா



'மக்கள் தலைவர் காமராஜருக்கு மாலை சூட்டுகிறார் ஐயா'



கல்வியமைச்சர் மாண்புமிகு இரா. நெடுஞ்செழியன் அவர்களுடன் கலைமகள் ஐயா



அமைச்சர் மாண்புமிகு மா. முத்துசாமி அவர்களுடன் ஒரு நிகழ்ச்சியில் ஐயா

ஐயா — குழந்தைகளுக்குள் குழந்தை

பெ. தூரன்

இன்று கலைமகள் கல்வி நிலையத்திலே நூற்றுக்கணக்கான குழந்தைகள் படிக்கிறார்கள். அவர்களெல்லாம் இந்த நிறுவனத்தை அரும்பாடுபட்டுப் போற்றி வளர்த்த திரு. மீனாட்சிசுந்தரம் முதலியார் அவர்களை "ஐயா" என்று அன்போடு அழைக்கிறார்கள். எனக்கும் அவர் "ஐயா". இவ்வாறு பெருமையோடு சொல்லிக்கொள்ள உரிமை எனக்கு உண்டு. ஏனென்றால் நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பே நானும் அவரிடம் கல்வி கற்கும் வாய்ப்பைப் பெற்றிருந்தேன். கதர் உடை அணிந்த உயரமான அவருடைய தோற்றப் பொலிவே எங்களுக்கு அவரிடத்திலே விவரிக்க முடியாத ஒரு பக்தியை உண்டாக்கியது. அப்பொழுது அவர் மகாஜன உயர்நிலைப்பள்ளியில் ஆசிரியராக இருந்தார். நான் அப்பள்ளியில் படித்த மாணவன்.

அன்று ஆசிரியராக இருந்த ஐயா வேறு; இன்று கலைமகள் கல்வி நிலையத்தின் நிறுவனராகவும் வழிகாட்டியாகவும் இருக்கும் ஐயா வேறு. அந்த நிறுவனத்திலேயே அவர்தம் நாட்களை அதன் வளர்ச்சிக்காக சீரிய முறையிலே அர்ப்பணம் செய்து வருகிறார். அன்று நாங்கள் கண்ட ஐயா மாணவர்களின் உள்ளங்களைக் கவரக்கூடிய ஓர் ஆசிரியர். இன்று இருக்கும் ஐயாவோ குழந்தைகளோடு குழந்தையாகவே பழகி அவர்களுடைய உள்ளத்தைக் கவரும் ஐயாவாகும்.

அந்த நாட்களிலே திரு. மீனாட்சிசுந்தர முதலியார் அவர்கள் பல மேடைகளிலே பேசும்போது கேட்டிருக்கிறேன். ஆவேசமாகப் பேசி எல்லோருடைய உணர்ச்சியையும் தூண்டுவார். பேச்சிலே தெளிவு, கருத்தாழம், சிந்தனையைத் தூண்டும் எண்ணங்கள் எல்லாம் ஆச்சரியமாகக் கலந்திருக்கும். பேச்சின் வேகமோ செஞ்சொற்கொண்டல் என்று கூறும்படியாக முழங்கும்.

இன்று குழந்தைகளோடு பழகும்போது இவையெல்லாம் பின்னணிக்குச் சென்று குழந்தைகளுக்குப் புரியும்படியான சொற்கள் — அவர்கள் விளங்கிக் கொள்ளும்படியான எளிய எடுத்துக்காட்டுகள் — பேச்சிலே அமைதி — என்ற இவைதான் மேலோங்கியிருக்கின்றன. தமது உணர்ச்சிகளையெல்லாம் கடிவாளம் இட்டுப் பிடித்துக்கொண்டு சாந்தமயமாக அவர் விளங்குகிறார்.

அண்மையிலே நான் கலைமகள் கல்வி நிலையத்திற்குச் சென்றிருந்தபோது குழந்தைகளுக்கு அவர் பேசுவதைக் கேட்கும் வாய்ப்புக் கிடைத்தது. ஒரு பொருளைக் குழந்தைகள் நன்கு புரிந்துகொள்வதற்கும், ஆர்வத்தோடு கேட்பதற்கும் ஒரு சிறந்த

எடுத்துக்காட்டாக அவருடைய பேச்சு அமைந்திருந்தது. குழந்தைகளுடனே பழகி அவர்களின் உள்ளத்தை நன்கு அறிந்துகொண்டதோடு குழந்தைகளோடு ஒன்றிப் போயிருக்கும்படியான தன்மையினுல்தான் இந்த அருமையான விளக்கக் கலை அவருக்குக் கைவந்திருக்கிறது. இது ஒரு பெறும்பேறு. எல்லோருக்கும் வந்து விடாது. குழந்தைகளின் வளர்ச்சியிலே உண்மையான ஆர்வம் கொண்டிருப்பவர் களுக்குத்தான் முயற்சியாலும் அனுபவத்தாலும் இது அமையும். குழந்தைகளோடு குழந்தையாகவே மாறுவதாலேயே இந்தக் கலை அவருக்கு வசப்பட்டிருக்கிறது.

கலைமகள் கல்வி நிலையத்திலே பலவிதமான கல்விச் சோதனைகள் நடை பெறுகின்றன. அவற்றை நேரில் அறிந்துகொண்டபோது நான் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தேன். இத்தனைப் பரிசோதனைகளுக்கிடையிலும் சென்ற ஏழு ஆண்டுகளாக உயர்நிலைப்பள்ளி இறுதித் தேர்விலே நூற்றுக்கு நூறு சதவிகிதம் மாணவிகள் தேர்ச்சி பெற்றிருக்கிருர்கள் என்பதும் இந்தக் கல்வி நிலையத்திற்குத் தனிப் பெருமையை அளிக்கிறது. அந்த இறுதித் தேர்வு முடிந்த பிறகு மாணவிகள் ஆசிரியர்களிடமிருந்து விடைபெற்றுக் கொள்ளுவதற்காக வருவார்கள். அதற்கென்று திருவிளக்கு விழா ஒன்று எங்கும் காணுத முறையிலே அங்கு நடைபெறுகின்றது. திரு. ஐயா அவர்கள் ஒரு குத்துவிளக்கை ஏற்றிவைத்துக் கையிலே தாங்கிக் கொண்டிருப்பார். ஒவ்வொரு மாணவியும் ஒரு குத்துவிளக்கைக் கொண்டுவந்து ஐயாவின் விளக்கிலிருந்து ஒளி ஏற்றிக்கொண்டு செல்லுவார்கள். ஐயாவிடம் பெற்ற அந்த ஒளியைப்போல் என்றும் ஒரு மாணவியின் வாழ்வும் ஒளிபெற்றும், கல்வி நிலையத்திலே பெற்ற அறிவு ஒளி என்றும் சுடர்விட்டுக் கொண்டிருக்கவேண்டும் என்பதும் இந்த விழாவின் அடிப்படைக் கருத்தாகும். அப்படிக் குத்துவிளக்கினை ஏற்றிக்கொண்டு செல்லுகின்ற மாணவிகள் தாங்கள் படித்துவந்த அந்த நிறு வனத்தைப் பிரிய வேண்டியிருக்கிறதே என்று கண்ணீர் விட்டு அழுவதைப் பலரும் கண்டிருக்கிருர்கள்.

நானும் ஐயாவும் கலைமகள் கல்விநிலையத்தைப் பார்வையிட்டவாறே ஓரிடத் திலிருந்து மற்ருெரு இடத்திற்கு சென்றுகொண்டிருந்தோம். புதிய குழந்தைகளை எடுத்துக்கொள்ளும் சமயம் அது. இளங்குழந்தைகளின் வகுப்பிலே ஆண் குழந்தை களையும் எடுத்துக்கொள்ளுவார்கள். ஐந்தாம் வகுப்புவரை அவர்கள் அங்கு கல்வி கற்கலாம். அப்படிக் கல்வி கற்க வேண்டுமென்று விரும்பி ஒரு பையனை அழைத்துக் கொண்டு யாரோ ஒருவர் வந்தார். நாங்கள் அந்தப் பையனை நேராகப் பார்க்கக் கூட இல்லை. ஆனல் அவன் ஐயாவைக் கண்டதும் அழத் தொடங்கிவிட்டான். "பார்த்தீர்களா? நமது பெற்ருேர்களில் பலர் குழந்தைகளை எப்படி வளர்க்கிருர்கள் என்பதற்கு இது ஒரு சான்று. இந்தப் பையன் அழுவதிலிருந்தே இதைத் தெரிந்து கொள்ளலாம். வீட்டிலே அவன் துருதுருவென்று ஓடியாடி விஷமம் செய்து கொண்டிருப்பான்; அப்படி இருப்பதுதான் குழந்தையின் இயல்பு. அது தாயாருக்கு சிறிது இடைஞ்சலாக இருக்கும். அதனல் "நீ இவ்வாறு செய்தால் பள்ளிக் கூடத்திற்கு அனுப்பி விடுவேன்" என்று சொல்லிப் பலமுறை தாய் அச்சங்காட்டி யிருப்பாள். அதனல்தான் இந்தக் குழந்தை நம்மைக் கண்டதும் அழத் தொடங்கி

யிருக்கிறது. சில குழந்தைகள் கல்வி நிலையத்தில் நுழைகின்றபோதே 'கோ' என்று கத்தத் தொடங்கிவிடும்" என்று அமைதியாக அவர் சிரித்துக்கொண்டே சொன்னார்.

இவ்வாறான பக்குவம் ஏற்படுவதற்கு பல நாள் ஆகி இருக்கவேண்டும். இப்பொழுதோ அவர் தமது எழுபத்திரண்டாம் வயதில் உள்ளம் கனிவுபெற்ற நிலையை அடைந்திருக்கிறார் என்று நான் மகிழ்ச்சியோடு கண்டேன். கீதையின் போதனையாகிய பற்றற்றுப் பணி செய்யும் தன்மையும் ஆருயிர்களுக்கெல்லாம் அன்பு செயல் வேண்டும் என்ற வள்ளலாரின் ஆர்வமும் அவரிடத்திலே பொருந்தி இருக்கின்றன.

புதிய தலைமுறையை உயர்ந்த நோக்கோடு வளர்க்கத் துணை புரிகின்றவர்கள் அனைவரும் எல்லோருடைய மதிப்பிற்கும் உரியவராகின்றார்கள். புதிய தலைமுறைகளின் போக்கைக் கொண்டே இந்த நாட்டின் தலைவிதி தீர்மானிக்கப்படும். அவர்கள் உயரிய எண்ணங்களோடும் நல்ல குறிக்கோள்களோடும் வளர வேண்டும். அதற்கு உதவிபுரிவதைவிடச் சிறந்த பணி வேறொன்றுமில்லை. ஒரு கல்வி நிலையத்தைத் தோற்றுவித்து அதை மேலும்மேலும் வளர்ப்பதென்பது எவ்வளவு சிரமமான காரியம் என்பதை நான் அறிவேன். அத்தகைய காரியத்தை ஐயா அவர்கள் செய்துகொண்டிருக்கின்றார்கள். கலைமகள் கல்விநிலையம் இருபத்தைந்து ஆண்டுகள் பணிசெய்து இப்பொழுது வெள்ளிவிழாக் கொண்டாடும் நிலையை அடைந்திருக்கிறதென்றால் அதற்கு ஐயாவின் பெரிய சேவையே அடிப்படையாகும். வாழ்க கலைமகள் கல்வி நிலையம். வாழ்க ஐயா; வாழ்க பல்லாண்டு.

ஐயா....

அன்பின் உருவமா
ஆண்மையின் அழகா
இளமையின் துடிப்பா
ஈடிலாத் திறனா
உண்மையின் வடிவமா
ஊக்கமிகு ஆற்றலா
எண்ணத் தூய்மையா
ஏற்றமார் நடையா
ஐம்பொறிச் சிறப்பா
ஒளிதரும் விளக்கா
ஓர்ந்துசொல் லிடுவீர்!

— எஸ். ஆர். லட்சுமி

The Beacon Light of Kalaimagal



Miss. M. Muthiah, B. A., B. T.,
Headmistress, Kalaimagal Kalvi Nilayam, Erode

Our Iyyah, fondly called so by all the people of Erode, is the Beacon Light of Kalaimagal, scattering his beams far and wide, guiding the helpless and the down-trodden, leading many a ship safe ashore from the perils and dangers all round.

His life is a standing example of hard and sincere work. Being very pious and God-fearing, he never forgets to do his daily Puja and silent meditation. Light will be burning in his room even at 3.0'clock early in the morning. Himself a strict disciplinarian, he can never tolerate idleness, frivolity, insincerity and slipshod work. He expects orderliness and beauty even in trivialities. He is an intellectual giant and a voracious reader. He reads about modern scientific methods of teaching in foreign countries like Japan, America and Russia and tries to implement them in his own compound.

His experiments with hostel children begins at 5.30 in the morning. He wants 'Kalaimagal' to be a Research Laboratory where all experiments on education should be carried out successfully. He trains and guides his assistants to be efficient and worthy heads wherever they go.

Children are attracted by his simplicity and smiling face. Montessori kids crowd round him and entertain him with their childish prattle. His soft heart never bears to see anyone in sorrow. If a hostel child falls ill, he becomes restless and worried until he hears from the doctor that there is no need to worry. Once I saw him kneeling beside the bed of a four-year old sick child, patting him gently to sleep. I wonder whether even a mother could do it at that age.

Teachers residing in the hostel, know more of his paternal care and affection. In the evenings, he advises them to go out for a walk or play games to maintain their health. Quite often, on festival days, he takes them out in the school bus to nearby temples or river for a picnic.

Iyyah often conducts special faculty board meetings and suggests new ways and means of teaching English, Tamil and other subjects also. He often tells the teachers, "Living souls are sitting before you, not dolls". He is thorough with the syllabus of each class in each subject and teachers can never escape from him. His wonderful and extraordinary momory power is quite astonishing. Teachers and children listen to him dumbfounded while he quotes from Milton and Shakespeare, Thiruvalluvar, Kambar and from many other poets and writers. He advises the children to get by heart such beautiful passages while reading. He never allows children to be ignorant of current events and every-day happenings around them. He creates a thirst in them to read widely as he aften repeats, 'Reading maketh a full man'. He is saturated with noble thoughts and high ideals which he tries to impart to them little by little.

We feel Kalaimagal, a Home with Iyyah as our Father, Mother and Guide well-combined in one. A few years back, when Mrs. Karpagam, one of our Montessori, Teachers fell ill, he took her to Vellore. Never once did he think that he was the Correspondent. When she was brought back to Erode, he admitted her in the C. S. I. hospital and made us all to be with her till she breathed her last. He often says, "I cannot be peaceful until I put up the Montessori building. I must keep up my promise to Mrs. Karpagam". She donated Rs. 9000/- for the construction of a building for Montessori.

I still remember my interview in Kalaimagal, when I first met 'Iyyah' It was Tamil New Year's Day in 1955. My friend and I had lunch with him on that day. He treated us as a father - not as a Correspondent. He said, "If God spares me for another ten years, I will erect pucca buildings for the children and the teachers". He was then the Chairman of Erode. We could hardly meet him or see him. He used to be under the neem tree, giving away his office room for the hostel. His dream has come true in fifteen years.

His greatness lies in mingling with both educated and the illiterates, grown-ups and the children, rich and the poor. He has spared no pains to convert the desert-like site into a lovely attractive garden where birds of different religions, caste and creed come for refuge.

His nobility excels his magnanimity which in turn surpasses his generosity and simplicity. Long live our noble Iyyah, kindling all the candles and torches around him and may he hold aloft his beacon light brightening every dark corner and sending out the bright rays of his search light far and near for many more years to come.

பாராட்டுக்குரிய தொண்டர்

ந. நல்ல சேனாபதி சர்க்கரை மன்றாடியார்
பழைய கோட்டைப் பட்டக்காரர்

"ஐயா" என அனைவராலும் அன்புடன் அழைக்கப்பட்டுவரும் உயர்திரு சீ. மீனாட்சிசுந்தரனார் பி. ஏ., எல். டி. அவர்கள் கல்வித்துறைக்கு ஆற்றிவரும் அரிய பணிகளைப் பாராட்டும் பொருட்டு ஈரோட்டு பெருமக்கள் விழாவெடுத்துப் பாராட்டவும், சிறப்புமலர் வெளியிடவும், முன்வந்தது கண்டு இவ் வெள்ளிவிழா பாராட்டுக் குழுவினரைப் பாராட்டுகின்றேன். இச் சிறப்புமலரில் பங்குகொண்டு அன்னாரைப் பாராட்டுவதற்கு மிக்க மகிழ்வு கொள்ளுகிறேன்.

மக்களினம் சிறப்புற அவர் தம் அறிவே காரணமாகும். அத்தகைய அறிவு விளங்கக் காரணமாகிய கல்விக்கு திரு. மீனாட்சிசுந்தரனார் அவர்கள் ஆற்றிய தொண்டு பாராட்டுக் குரியது. ஈரோட்டில் மகாஜன உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியராகவும், தலைமை ஆசிரியராகவும் பொறுப்பேற்று பணியாற்றி வந்தபோது அப் பள்ளியின் பெருமையினை மாநிலம் அறியச் செய்து உள்ளார். மகாஜன உயர்நிலைப் பள்ளியினின்று நீங்கிய பின் பெண்களின் கல்வி முன்னேற்றத்தில் கருத்துக்கொண்டு "கலைமகள் கல்வி நிலையத்தை" உருவாக்கினார். ஒரு சிறிய ஆரம்பப் பள்ளியாக உருவெடுத்து பின் மாண்டிசோரி, பிரப்பரேட்டரி, ஆங்கிலப் போதனாமுறை தொடக்கப் பள்ளி, ஆங்கிலப் போதனாமுறை உயர்நிலைப் பள்ளியாக பல்கிப் பெருகி தற்போது கலைமகள் கல்வி நிலையமாக தமிழகத்திலேயே உயர்தனிப் பள்ளியாக கல்வியின் தரத்தில் உயர்ந்தோங்கித் திகழ்கிறது. இப் பள்ளியில் பயிலும் மாணவிகள் அரசினர் நடத்தும் பள்ளி இறுதித் தேர்வில் தொடர்ந்து ஏழு ஆண்டுகளாக நூற்றுக்கு நூறு பேர் வெற்றிபெற்று வருவதோடு, நிறைந்த மதிப்பெண்களும் பெற்றுத் தேர்ந்து வெளிவருவது கண்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். இத்தகைய அரியமுயற்சியில் ஆசிரியப் பெருமக்களை ஈடுபடுத்திச் செயல்படும் திரு. மீனாட்சிசுந்தரனார் அவர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும். மாநிலத்தில் முன்னணியில் நிற்கும் கலைமகள் கல்வி நிலையத்தார் பெருமையினை அறிஞர் பெருமக்களும், அரசியல் துறைத் தலைவர்களும், பத்திரிக்கைகளும், பாராட்டுவது ஒன்றே அன்னாரின் சீரிய முயற்சிக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். அன்னாரின் அறிவுப் பயனை அரசியலாரும், மற்றவரும் பயன் படுத்திக்கொண்டனர். டாக்டர்

ஆர் எம். அழகப்பசெட்டியார் தலைமையில் அமைந்தஆரம்பக் கல்வி ஆய்வுக்குழு உறுப்பினராக இருந்து அரும்பணி ஆற்றியுள்ளார். தமிழ் வளர்ச்சிக் கழகத்தில் சிறந்த நூல்களை தேர்ந்து எடுத்துப் பரிசளிக்கும்குழுவில் ஒருவராக செயல்பட்டுள் ளார். தற்போது தமிழக அரசு நிறுவியுள்ள தனியார் பள்ளியின் ஆய்வுக்குழு உறுப்பினராக திகழ்கிருர். நாட்டில் தெய்வவழிபாடு குன்றிவரும் வேளையில் அருள் நெறித் திருக் கூட்டத்தைத் தோற்றுவித்து கோவில்களில் பைந்தமிழ் மணமும் திருநெறி சைவ மணமும் கமழப் பாடுபட்டு வரும் இவரது செயல் பாராட்டுக்குரிய தாகும். இவ்வளவு சிறப்பு மிக்க ஒருவர் எல்லோரிடத்தும் மிக அடக்கமாகவும், அன்பாகவும் இருந்துகொண்டு மற்ருேரும் அவரைப் பின்பற்றி நடக்க வழிகாட்டுகிருர் என்பதே ஒரு தனிச் சிறப்பு.

"என் கடன்பணி செய்து கிடப்பதே" என்ற வாக்கினை நினைவு படுத்தும் திரு. மீனுட்சிசுந்தரனர் இன்னும் நீண்ட நாள் நல்ல உடல் நலத்துடனும் மகிழ் வோடும் வாழ்ந்து கல்விக்கும் நாட்டிற்கும் அரிய தொண்டினை ஆற்ற இறைவன் அருள்புரிவாஞக.

பெருமை என்னுரைப்பேன் !

குடம்விட்டுக் கடல் நாடும் குடகுமலைப் பெண்ணவளின்
குளிர்நோக்கில் குளிர்கின்ற கோவைய் ரோடதனில்
தடம்விட்டு வயல்நாடும் தாழ்கதிரோன் தருங்கதிரில்
தழைத்தாடும் கழனியெலாம் கதிர்வாயால் தானழைக்க
நடம்விட்டுத் தில்லையவர் நலம்நாடி வருவதனுல்,
நாரணரும் நாடுவதால், நான்முகனும் மனையாளும்,
இடம்விட்டு இங்குகலை மகள்நிலையத் துறைவதனுல்
இதன்பெருமை என்னுரைப்பேன், எழில்முத்துச் சுந்தரமே!

எங்கள் தந்தை

L. பிரபாவதி

சீவக சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி என்னும் ஐம்பெருங்காப்பியங்களையும் அணிகலன்களாக அணிந்தவள் நம் தமிழன்னை. அத் தமிழன்னை பெற்ற அருந்தவப் புதல்வர், புதல்வியர் நாம். ஒரு தோட்டத்தில் மலரும் கண்கவர் மலர்களெல்லாம் ஒரே காரியத்துக்குப் பயன்படுவதில்லை. யாவ ராலும் போற்றப் பெறும், எழிற்கழலணிந்த கடவுளர்க்கு அர்ச்சிக்கப் படும் பேறு பெற்ற மலர்கள் சில. அஞ்சனந்தீட்டிய, காதளவோடிய நயனங்களை உடைய, வனப்பு மிகு மங்கையரின் கூந்தலில் அமரும் பேறு பெற்றன சில. ஆதவனின் கரம் பட்டு செடி, கொடிகளிலேயே துவளும் மலர்கள் சில. மீளா நித்திரையில் ஆழ்ந்திருக்கும் அமைதித் தெய்வங்களுக்குப் படைக்கப்பட்ட மலர்கள் சில. பிணி வருங்காலத்து பிணி நீக்கும் மூலிகையாய்த் திகழ்பவை சில. இவ்வாறே உலகம் என்னும் எழிற்காவில் தமிழகம் என்னும் கொடியில் பூத்த பல மணமிக்க மலர்களுள் பிறர்க்குப் பயன்படும் மலராகத் தோன்றிய பேறு பெற்றவர் '**எங்கள் தந்தை**'

எங்கள் தந்தை கலைகளின் அரசியின் பெயரால் அமைந்த கலைக் கோயி லின் தந்தை. மழலை மொழி பேசும் மக்கட் செல்வங்களிலிருந்து அம் மதலையர் களின் பெற்றோர் வரை, தெரிந்தவர், தெரியாதவர் அனைவருக்கும் அவர் அன்புத் தந்தை. பெற்ற தாயையும், பிறந்த பொன்னாட்டினையும் நற்றவ வானைவிட நனி சிறந்தனவாகக் கொண்டவர். தோற்றத்தில் முதியவர். உள்ளத்தாலும், உடலாலும், செயலாலும் இளைஞர். அன்பு செலுத்துவதில் குழந்தை. தாம் பெற்ற இன்பத்தை இவ் வையக முழுமைக்கும் வாரி வழங்கத் துடிக்கும் பாரி. குறை கண்டவிடத்து கண்டித்துத் திருத்தி, நிறை கண்டவிடத்து நிறைந்த மனத்துடன் பாராட்டும் தலைவர். அண்ணல் பிறந்த நாட்டில் தோன்றி, அவரை வழிகாட்டியாகக் கொண்டு, அவருடன் உய்ந்த அரும் பெரும் வழித் தோன்றல். 'An idle mind is the Devil's Workshop' என்பதை மனத்திற்கொண்டு ஏற்றமுடன் உழைக்கும் பாட்டாளி. பாட் டாளிகளின் வெற்றியைப் பாரின் வெற்றியாகக் கொண்டவர். வெற்றியே உலகின் உன்னதச் சிகரமாகக் கொண்டவர்.

'வருங்கால இந்தியா இன்றைய குழந்தைகளின் கையில் இருக்கிறது. அவர்கள் சமுதாயச் சிற்பிகள்' என்றார் மனிதருள் மாணிக்கம். அதை வாயார, உளமார வரவேற்பவர் எங்கள் தந்தை. மதலையரிடம் பேசுங்கால் அவரது மகிழ்ச்சி 'அடுத்தது காட்டும் பளிங்குபோல்' பிரதிபலிக்கும். தமது குழந்தைகளின் ஐயப் பாட்டினைத் தீர்க்கும் இணையற்ற ஆசான். ஆசிரியைகளின் குறைதீர்க்கும் ஆசிரியர். கல்விக் கோயிலாம் கலைக்கூடத்தை வெற்றிப் பாதையில் வழி நடத்தும் இலட்சியவாதி.

இத்தகு சிறந்த குணங்கள் பெற்ற எங்கள் தந்தையின் தோற்றம் கற்பனைக் கெட்டாத அற்புதம் வாய்ந்தது. பெரும் ஸ்தாபனத்தின் நிர்வாகியான அவர் ஆடம் பரமாக இருப்பவர் அல்லர். நெடிதுயர்ந்த தோற்றம், சிவந்த மேனி, தீட்சண்யமும் அறிவுக் களையும் தவழும் கண்கள், அமைதி நிலவும் முகம். சதா சிந்திக்கும் குறியைக் காட்டும் நெற்றிச் சுருக்கங்கள். அவரது கற்றை மீசை புதிதாகப் பார்ப் பவர்க்கு 'இவர் முரட்டுக் குணம் படைத்தவரோ?' என்ற ஐயப் பாட்டினை எழுப்பும். ஆனால் பழகினவர்க்கோ — 'என்னே, இவரது மெழுகு போன்ற மனம்' எனப் பரவசமடையச் செய்யும் எண்ணம். ஏற்றத்தினை எடுத்துக் காட்டும் கைத்தடி. அறிவினை, அதன் அளவை அளக்கும் மூக்குக் கண்ணாடி. தலையில் கற்றை முடி இல்லையேல் அண்ணலவர்களின் நினைவு நம் மனத்தில் மின்னலெனப் பளிச்சிடும்.

இப் புவியில் உள்ள ஓரறிவுப் பொருட்கள் முதல் ஆறறிவு உயிரினங்கள் ஈறாக அனைத்துமே இவரது மக்கள். குடங் குடமாக, வாளி வாளியாக செடி கொடிகளுக்கு நீர் பாய்ச்சும் கருணை உள்ளம் கொண்டவர். தொழிலாளிகளிடம் சென்று அவர்களது இன்னல் தீர்ப்பவர். ஒவ்வொரு வகுப்பினுள்ளும் நுழைந்து மாணவியரின் தராதரத்தை அறிபவர். அவர்களுக்குக் கல்வி போதிக்கும் முறையை ஆசிரியர்களுக்குப் போதிப்பவர். தமது எண்ணங்களைப் பல புத்தகங்களின் வாயி லாக அறிவிப்பவர். எங்கள் தந்தை எங்கள் தலைவர் மட்டுமல்ல. பல சங்கங்களின் தலைவர், இந் நகரின் உற்ற நண்பர், தமிழகத்தின் தலைசிறந்த கல்விமான். இவற்றை யெல்லாம் நினைவு கூர்ந்தால் பாரதியாரின் கூற்றுப் படி அவர் நண்பராய், மந்திரி யாய், நல்லாசிரியருமாய், பண்பிலே தெய்வமாய்,... பார்வையிலே சேவகராய்த் திகழ்பவர். 'கற்றது கைம்மண்ணளவு, கல்லாதது உலகளவு' என்னும் ஆன்றோரின் வாக்கின்படி பற்பல நூல்களையும் நித்தம் நித்தம் படிக்கும் மாணவர்.

இங்ஙனம் ஒரே சமயத்தில் குழந்தையாய், சிறுவனாய், சிறுமியாய், இளைஞ னாய், யுவதியாய், தந்தையாய், தனயனாய், நிர்வாகியாய், மாணவனாய், பாட்டாளியாய் மந்திரியாய், அரசனாய்த் திகழும் "எங்கள் தந்தை" பல்லாண்டு காலம் கவினுறவாழ எல்லாம் வல்ல, சர்வேசுவரனை இறைவனை இறைஞ்சுவோமாக.

நிலையமிது வாழியவே!

ஆழ்கடலில் அமிழ்ந்தெடுத்த அழகுமுத்து அசைவுபெற
ஆதவனின் கதிர்பாய்ந்து ஒளிர்ந்தாடும் அழகைப்போல்
சூழ்கடலாம் கல்வியருட் கண்ணணைய நல்முத்தில்
சுடர்கின்ற ஒளியாவும் சுந்தரமாய்ச் சூழ்ந்திங்கு
வாழ்கடலில் வளரறிவில் வளந்தேடும் சிறுமுத்தில்
வண்ணத்தோ டிசைந்திடவே வளர்மனமும் இருளென்னும்
பாழ்கடலில் வீழாமல் பகுத்தறிவில் விளைந்துவரப்
பாயும்பே ரொளிவிளக்க நிலையமிதும் வாழியவே!

"நல்லவர்தாம் வாழ்க நயந்து"

தவத்திரு. சுந்தரசுவாமிகள்
ஆதீனகர்த்தர்
கௌமார மடாலயம், சின்னவேடம்பட்டி.

செந்தமிழ்நாட் டிற்சீர் திகழும் ஈரோட்டினிடை
விந்தைக் குணப்பண்பார் மீனாட்சி – சுந்தரனார்
செய்துவரும் கல்வித் திருப்பணியும் நற்சமயம்
எய்துபணி யும்பெரிய தே.

நாற்பத்தொன் றாண்டாக நல்ல பணிகள்செய்து
சீர்ப்பெற்ற மீனாட்சி சுந்தரனார் – ஏற்படுத்தும்
ஈரோட்டுக் கல்வி இயக்கம் தனைப்பெரிதும்
பாராட்டி வாழ்த்திடுகிற் பாம்.

கவினார் கலைமகள் கல்வி நிலையம்
புவியிலுளோர் போற்றிப் புகழ – நவில்ஏழாண்
டெல்லாரும் தேர்வுவெற்றி எய்திடுதல் எஸ்மீயின்
வல்லமையி னாலாகு மால்.

கற்கும் சிறுவர் கவினும் மணிகளென
உற்றொளிரப் பண்பாட் டுயர்கல்வி – நற்றகைமை
எல்லாம் வளரும்வகை ஏற்றமுறச் செய்கின்ற
நல்லவர்தாம் வாழ்க நயந்து.

எழுபதின் மேலீராண் டெய்தியும்நற் கல்வி
வழுவாத வண்ணம் வளமாய் – செழுமைப்
பணிசெய்யும் மீனாட்சி சுந்தரனார் பல்லாண்டு
அணியாக வாழ்க வாழ்க.

மிக்க செயற்றிறமார் மீனாட்சி சுந்தரனார்
தக்க உடல்நலங்கள் சார்ந்திருந்து – மக்களுக்குத்
தொண்டுசெய்து பல்லாண்டு தூய்நெறியில் வாழ்ந்திடுக
அண்டர்பணி வேலனரு ளால்.

உழைப்பின் உருவம்

தமிழ்ப் பெரும் புலவர்
மு. ரா. பெருமாள் முதலியார்,
எம். ஏ., எல். டி.,
'தொடுவானம்' திருவண்ணாமலை

கல்விப் பணியில் திரு. மீனாட்சிசுந்தரனாரின் பங்கு மிகப் பெரியது. அவர் பிறக்கும்போதே சிறந்த ஆசிரியர்க் குரிய இயல்புகளோடு பிறந்தவர். நாளாக நாளாக அவ்வியல்புகள் வளர்ந்து அவரை ஓர் இலட்சிய ஆசிரியராகச் செய்துவிட்டன. "குழந்தைகளுக்காகக் குழந்தைகளோடு வாழ்வோம்" என்பது அவர் பின்பற்றும் அடிப்படைக் கோட்பாடு. குழந்தைகளுக்குப் பாடம் சொல்வதிலும் அவர்கள் நல்ல குடிமக்களாக வளர்வதற்கு உதவுவதிலும் அவருக்குள்ள ஆர்வம் ஒப்பற்றது; ஏனைய ஆசிரியர்கள் உணர்ந்து பின்பற்றத்தக்கது.

தம் வாழ்நாள் முழுவதையும் கல்விப் பணிக்கே மனமுவந்து அளித்து விட்டவர் திரு. மீனாட்சிசுந்தரனார். 1943-ஆம் ஆண்டில் அவர் ஆசிரியத் தொழிலினின்று விலகி வாணிபத்தில் சில காலம் ஈடுபட்டார். ஆனால் எவ்வளவு வருவாய் தரக் கூடியதாக இருப்பினும் ஆசிரியத் தொழிலிலுள்ள நிறைவு வாணிபத்தில் இல்லையென் பதையுணர்ந்த திரு. மீனாட்சிசுந்தரனார் கலைமகள் கல்வி நிலையத்தைத் தோற்றுவித்து மறுபடியும் கல்விப் பணியில் தம்மை ஈடுபடுத்தி, இழந்த இன்பத்தை மீண்டும் காணத் தொடங்கினார். பாசத்தின் பகட்டில் மயங்கிய ஆன்மாவும், இப்படித்தான் சிலசமயத்தில் இறைவனை மறக்குமென்றும், ஆனால் இறைவன் மீண்டும் ஆன்மாவுக்கு அருள் புரிந்து ஆட்கொள்ளுவான் என்றும் மெய்யுணர்வுடையோர் கூறுகின்றனர். திரு. மீனாட்சி சுந்தரனாரும் தமக்கு உள்ளநிறைவும் ஒப்பற்ற இன்பமும் தருகின்ற கல்விப் பணியை விட்டுச் சிலநாள் வாணிபத்தில் ஈடுபட்டார். ஆனால் கல்விப் பணியே அவர்தம் உயிர் மூச்சு. அதனைத் துறந்து அவரால் வாழமுடியாது. எனவேதான் மீண்டும் கல்விப் பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்ட திரு. மீனாட்சிசுந்தரனார் இன்றளவும் குழந்தை களின் கல்வி முன்னேற்றத்திற்காக "ஓயுதல் செய்யோம் தலைசாயுதல் செய்யோம்" என்று பாரதியார் கூறியதுபோல இடையறாது உழைத்து வருகிறார். அவர்தம் உழைப்பின் பயனாக இன்று கலைமகள் கல்வி நிலையம் தமிழகத்தில் தலைசிறந்த கல்வி நிலையமாக விளங்குகிறது. அந்நிலையத்தின் தொண்டு மேலும் சிறக்குமாக! திரு. மீனாட்சிசுந்தரனார் இன்னும் பல்லாண்டு வாழ்ந்து கல்விப் பணி புரிவாராக!

............"மீ. சு. ஐயா"


கவி. யோகி. சுத்தானந்த பாரதியார்
யோக சமாஜம், அடையாறு, சென்னை.

சிங்கமே யனைய தோற்றம்
சீரிய கல்வி யாற்றல்
தங்கமே யனைய உள்ளம்
தமிழுடன் சைவம் மேவும்
வங்கமே யனைய மூளை
வாலிபம் கனிந்த காளை
எங்கள் சார் மீ. சு. ஐயா
பெருமையை என்ன சொல்வோம்

பாசத்தோ டன்பு செய்யும்
பள்ளிமா மணிகட் கெல்லாம்
நேசத்தோ டுதவு கின்ற
நேரிய பெரும்பே ராசான்
மிசையைத் திருகிவிட்ட
மீசுவின் வாய் திறந்தால்
ஆசையோ டமர்ந்து கேட்போம்
அறிவினை உயர்த்து வோமே!

அளக்கரும் அறிவை யெல்லாம்
அள்ளிமா ணவர்க் களிக்கும்
உளப்பெரும் குலபதிக் கிங்கு
ஊரெல்லாம் கூடி நல்ல
வளப்பமும் பரிசும் வாரி
வழங்குவோம் முழங்க நாளும்
மிளிர்ப்பமும் புதிய வீரர்
மீன்விழி யழகர் சீரே!

சீரோடும் சிறப்பி னோடும்
செங்குந்த மணியெம் மீ. சு.
காரொடும் கற்ற வீரர்
கட்டியங் கூற வாழ்க
ஈரோடை கலைக்கல் லூரி
இந்தியா முழுதும் போற்றப்
பேரோடும் புகழி னோடும்
பீடுற வாழ்க மாதோ!



'கல்லூரி மாணவராக ஐயா'

Iyya as an Educationist

N. Chinnaswami Naidu, M. A., L. T.,
Headmaster, Mani High School, Coimbatore

It is my privilege to know IYYA since the year 1933. In June of that year I was posted as an untrained Secondary Grade Teacher in the District Board High School (now Municipal High School) at Erode. There were only three High Schools at Erode then. The Government Secondary and Training School for girls, The Board High School for Boys and the Mahajana High School. These three schools represented the three important agencies which shouldered the responsibility to provide Secondary Schooling then as now but in different proportions. They are the Government Department of Education, the quasi-governmental Local Board (The District Board) and the private aided (Mission or Non-Mission) management. All these three agencies provided quality education in increasing proportion. To-day it is different.

I do not remember who the Headmistress of the Government School was. The Headmasters of the two boys schools were two eminent men. They were not mere teachers and administrators; they were educationists. They both were learned and cultured; they were famous for their oratory. They had reputation as great headmasters. One was the late lamented V. Rajagopal Ayyar of revered memory and the other was our revered Iyya (Thiru S. Meenakshisundaram Mudaliar). I had the rare opportunity of serving under the former and the good fortune to know the other.

Way back in 1933 I was new to the field of education. Though I had spent one year in a High School near Coimbatore as teacher, I had not taken interest in the affairs of school for like every starter I had more than one foot elsewhere. So, no wonder, if I had not seen nor heard of the Headmaster of the other school. One forenoon I was rushing along on my bicycle to the school; I saw a gentlemen passing me in the opposite direction on a cycle. His personality was arresting. I slowed down to see, to observe a helfty six-footer of athletic build, distinguished looking, immaculately dressed. I had a hunch it was the other headmaster; enquiries confirmed it. A few days later curiosity took me to the local club. I saw him again on the Tennis Court, impeceably dressed.

The two headmasters were great speakers as I have already said. As long as I was in Erode I missed no opportunity of hearing them. My headmaster was indeed a great orator, brilliant scintillating, master of the apt phrase and choice (in English) word. During the speech you will gape and after it feel dazed but not any the wiser. He was a great conversationalist, truly Johnsonian in dimensions; but not a scholar for he had no time to read! But Mr. Meenakshisundaram was different. He was as great a speaker in Tamil as in English and a great scholar to boot. I have never seen him without a book in hand. It is rich scholarship that distinguishes him and marks him out from the rest.

Years after (in June 1947) I was posted to Perundurai as headmaster of the District Board High School there. The proximity of Perundurai to Erode provided me opportunities of seeing and hearing Iyya frequently. By then he had started the Kalaimagal Kalvi Nilayam. It was only a few years old; but it was already attracting attention. It was a few weeks after the dawn of Independence which we had celebrated with eclat, I had a memorable visit from Iyya. He came to address a public meeting. (For meetings in Perundurai the venue was, of course, the High School in those days!). He came hours before the meeting was scheduled to begin. This gave me occasion to spend those hours in his company with profit. He was as usual book in hand and often vouchsafed to tell me and even discuss with me. In the evening the meeting began. In the course of his speech he quoted from a foreign (English!) political thinker saying "Whoever commands the Kashmir, holds the key to the plains below. We lose Kashmir and we lose everything". How true! All these years we have been fighting at so many levels to retain Kashmir. Retain it we must.

Close on my shifting to Coimbatore as Headmaster of Mani High School in 1954 I had occasion to preside over the Diwan Bahadur Memorial Day celebrated under auspices of the Old Boys' Association of Sarva Jana High School. The main speaker of the day was Iyya! Imagine my plight. Iyya could easily sense my trepidation. He generously put me at ease and gave me the cue for my speech. He advised me to talk more on the late Dewan Bahadur P. S. G. R. whom I knew personally and intimately. Thus he helped me to tide it over!

I can, of course, reel off such instances; but let me be content with these few telling occasions and proceed to look at Iyya as a teacher and as an educationist for Iyya is both.

Who is a teacher? The Great Tamil Sage Pavananthi who gave us 'Nannool' has given the definition for all time. His classic definition is: [நல்லாசிரியனிலக்கணம்]

"குலனருள் தெய்வங் கொள்கை மேன்மை
கலைபயில் தெளிவு கட்டுரை வன்மை
நிலமலை நிறைகோல் மலர்நிகர் மாட்சியும்
உலகிய லறிவோ டுயர்குண மணியவும்
அமைபவன் நூலுரை யாசிரி யன்னே."

Iyya conforms to this definition. He has love, generosity, 'Bhakthi', culture, refinement, learning, capacity to speak and write, fairness, etc., etc., in an abundant measure.

(What exacting standard has the Tamil Sage of old stipulated for a teacher! Did he visualize such standards or did he find men who conformed to such standards in his day? If in each college we had a teacher of this stature to-day! Alas, what a great expectation it has become? Men who can measure up to this definition have become rare, very rare indeed).

Pavananthi does not stop here. He goes one step further to amplify what he expects in his teacher. He wants:

"தெரிவரும் பெருமையும் திண்மையும்"

immeasurable and rare scholarship and capacity to stand his own in disputations;

"அளக்க லாகா வளவும் பொருளுந்
துளக்க லாகா நிலையும் தோற்றமும்"

deep learning coupled with rich experience and far-famed personality.

'Iyya' has these. Of all teachers I know it is only Iyya who comes to my mind when I think of Pavananthi's requirements in a teacher.

Pavananthi visualises in his definition not merely a teacher in the ordinary sense of the term; but something more than a teacher. That something more in a teacher makes a man an educationist. Who is an educationist? In a modern sense he is one who brings up (young persons); gives intellectual and moral training to them; provides schooling for them. Iyya has done these all these forty years. In the schools under his care before he established his famous institution (the Kalaimagal Kalvi Nilayam) he did these; he has been doing these again in the great school under his care. In his present school he brings up thousands of children as his own; he gives them proper intellectual and moral training; he provides them with schooling of the highest order.

In the month of March 1969 I had a taste of the high standards obtaining in his school. At a Seminar of English Teachers conducted in Kalaimagal Kalvi

Nilayam I had the chance of giving a demonstration lesson in teaching English Composition. I had asked for an average class and the Headmistress obliged by sending, for the purpose, a set of girls of the ninth standard of ordinary ability. These girls responded so well and the class was so lively that I was really elated and my lesson was a great success. With such high standards in the pupils it is no wonder that year after year his school (for seven years in the run) has secured cent percent success at the S. S. L. C. Public Examination. Already it is an all time record. At this rate for years to come it would be possible for this school to maintain this standard and make all girls who take their examination pass with ease and credit and create a record which can never be approached by any other school. It is not merely the percentage of passes that count with them. It is their real standards which bring them medals and prizes and National Scholarships. It is not for these that the children are trained; but the children of that school take these plums in their stride.

I remember a few years ago a Seminar directed by Iyya in my school (Mani High School). The Seminar had as its purpose: "How to produce cent percent results?" In his introductory speech he was at pains to impress on the members of the Seminar that producing cent percent results should not descend to providing cynical pleasure through the exercise of the saddistic method of mere cram. It should be achieved by raising real standards through systematic and regular teaching — learning processes with modern enlightened methods. Many left the Seminar doubting. But Iyya has put the recommendations into practice in the spirit and we see how rich have been the fruits thereof. With him, we find, there is no gap between theory and practice.

Another definition of the term educationist is: "A person who is a specialist in the theory and practice of education". Iyya exemplifies in himself this requirement also. He has studied methods of teaching. He attends Seminars, Workshops and Conferences in and on education. He learns and he contributes. He keeps an open mind and allows fresh ideas to enter him. In fact he is a learner. Capacity to learn is a characteristic of youth. It is a marvel how at the advanced age past the biblical three score and ten he is capable of learning. It is truer to say he is 72 years 'YOUNG' rather than 72 years old. And what he learns, if he is convinced that it is worthwhile adapting, he, without hesitation, puts into practice and that too forthwith. (But, of course, he must be convinced that it is worthwhile). That is why I have said afore that there is no gap between theory and practice with him; the theoretician and the practitioner meet (or shall I say blend) in him.

But do these only make him an educationist? No, not at all. He is not merely an educationist in the ordinary sense. He is much more. He is a leader of men. He is also an educational leader. It is this leadership that marks him out from the common run of teachers and educationists.

What is leadership? Different people have different concepts of it. It is that indefinable something which is present in most of us but not to the degree needed to make us leaders. According to Field Marshall Montgomery, the world famous soldier, it is the capacity and will to rally men and women to a common purpose and I am sure a noble one at that, whatever it is. When we think of leadership, we are apt to conclude that only in the field of 'Politics' we have it. No, we need it too. This unfortunate mix up has led to bankruptcy of leadership in other fields for it presumes leadership is not needed in the various other walks of life. We need it in all departments of life and at all levels. We need leaders among clerks, tailors, tinkers, spinners, weavers, smiths, traders, etc., as much as among officers, teachers, doctors, engineers, etc. We need leaders in families as much as in offices, in class-rooms as much as in workshops and so on. As a matter of fact we need leaders in every department of activity where more than one man or woman get together for a common or collective purpose, public or private.

What are the qualities that make up leadership? According to that great soldier, General Mark Clark, the characteristics that seem fundamental to leadership are: Confidence, energy, timing, charity, magnetism, concern, morality, faith, etc. We will certainly agree with him and say with him that to be a leader one must have these qualities in a great measure. A leader must have reliability, steadiness, resourcefulness and friendliness. Above all he must have vision and the capacity to take the initiative (salted with courage!)

A great Indian soldier of modern times has listed a few desirable attributes which will mark out a leader from others. They are worth over consideration: they are: sense of duty, selflessness, sense of responsibility, purposefulness in everything he does, loyalty, value of time, dignity of labour, strength of character to accept criticism, sound common-sense, spirit of give more and take less, giving his sweat, not being a decitful hypocrite, not taking credit for others doings, team spirit, practising what he preaches, being kind but firm, choosing the right men for his team and not 'yes' men, not using one's authority, public property and public funds for personal advantages, being calm and collected when things go wrong, showing no partiality, etc. I will add another important attribute to this list. It is the capacity to write and speak clearly what one has to say. A formidable list of attributes indeed!

Though this list of attributes is imposing most of them stem from a few which form the core. They are unselfish living, nobility of purpose, having a vision, capacity to take the initiative, ability to think, speak and write clearly. Iyya has these attributes. In fact I know of no person who has these in greater measure than Iyya. Iyya, therefore, is a leader 'par excellence'.

Years and years ago he brought the schools of Erode together; this association of teachers has made the schools in Erode reach high standards of excellence. The Headmasters' Association and Councils, the District Teachers' Guilds, the Elementary Teachers' Unions owe very much to his hospitality, and much more indeed to his generous and enlightening participation. He has helped the Departmental Officers to organise school improvement conferences, distribution of uniforms and the like by the score.

Iyya reads, observes, discusses and thinks — he passes on his findings to others through Conferences, Seminars and Workshops. He attends them in various places; he convenes or stages them in his school. He excels in organisation of these. I have attended many and many of them. During the past year itself I had occasion to visit his school on three occasions: Once for a Seminar of English Teachers, second occasion, a visit to this school with my staff (Inter-School Visit) and again with our revered Vice-Chancellor who distributed 'Seerudai' All the three were so differently but so excellently arranged that they not only benefited the participants but also delighted them. He has a genius for organisation.

His help, co-operation and advice are always at the disposal of whoever approaches him for a worthy cause. No wonder even the Government turns to him for help when they institute Committees of Enquiry at the highest level and indent on his services as when it formed the Alagappa Chettiar Committee or the Aided School Management's Enquiry Committee, etc.,

I am happy to find that a celebration is being arranged to felicitate Iyya who has for over forty years worked hard and unceasingly to bring about new thinking in the field of education and it is but meet that a Souvenir should commemmorate his services.

The great Educational Institution which bears the name of Kalaimagal Kalvi Nilayam is Iyya's handiwork and his lasting contribution to the field of education. It will be very rare to find the like of it throughout the length and breadth of this country. It excels. In making it a great institution Iyya has had the good fortune to have in Selvi M. Muthiah a headmistress who has nursed the institution with tender care, done a round the clock job day after

day and put the ideas and ideals of the revered Iyya into practice and thus demonstrated that Iyya is not a mere dreamer and idealist but also a realist. They have made this school a place of pilgrimage for the teachers and educationists. This school will celebrate completion of twenty-five years of SERVICE to the community (of how many schools can we say this?) and also the magnificent achievement of having secured cent percent success at the S. S. L. C. public Examination for seven years at a stretch. These must be proud moments for Iyya. They will be proud moments to the headmistress and her devoted staff. They will indeed be proud moments for us who know Iyya and his school.

May the Lord grant to Iyya many more years of life to render service!

புதுக்கோயில்!

திங்கள்மேல் கண்வைத்துச் செவ்வாயில் விளையாடும்
அற்புதமாந் தமிழியலின் கவியாழங் காணாமல்
பொங்கும்நல் வெள்ளிதனைப் பூசனியிற் தேடுகின்ற
புதுப்பழமைத் தமிழர்தமைப் புதிதாக்கும் பாரதியும்
எங்கெவரும் ஞாயிற்றின் இடந்தேட வேண்டுமெனில்
இங்கேயே பள்ளிதனில் இளஞ்செல்வர் மனந்தன்னில்
பொங்கிவரும் அருள்கூடும் புதுக்கோயில் தனிற்காட்டும்
புதுப்பாட்டின் இலக்கணமாய்ப் பொலிவுபெறும் நிலையமிதே!

சீரோடு வாழ்க செழித்து

சா. கணேசன். எம். எல். சி.
காரைக்குடி

செந்திருவாழ் ஈரோடைச் செல்வன் – சீ. மீனுட்சி
சுந்தரனைப் பாராட்டும் தூயோரே! – நுந்தம்மை
நெஞ்சார வாழ்த்துகிறேன், நீரெடுத்த நற்பணிதான்
எஞ்சாத வாறிலங்க என்று.

ஏழுபத் தீராண் டெழிற்கல்வித் தொண்டாற்றிச்
சூழுபுகழ் மீனுட்சி சுந்தரனுர் – வாழுகவே,
பல்லாண்டு பல்லாண்டு பாருலகில் நல்லவர்கள்
எல்லாரும் ஏத்த இனிது.

ஆக்கும் பணிகண்டும், ஆழ்ந்த மதிகண்டும்,
வாக்குநயம் கண்டும், மணமகிழ்ந்தோம்; – ஊக்கமிகு
ஈரோடை மீனுட்சி சுந்தரனே! எஞ்ஞான்றும்
சீரோடு வாழ்க செழித்து.

விஞ்ஞான நூல்நெறியே விந்தை பலவுணர்த்தி
மெய்ஞ்ஞானம் தன்னை விளக்கிநிதம் – அஞ்ஞானம்
சுட்டெரிக்கும் மீனுட்சி சுந்தரனுர் தோற்றியவை
மட்டின்றி வாழ்க வளர்ந்து.

வாயார, நல்ல மனமினிக்க, எல்லோமும்
ஓயாமல் வாழ்த்தி உவந்திடுவோம், – தாயாய்க்
கலைமகள் கல்விநிலை கண்டளித்தான் தன்னை,
நிலையான தொண்டை நினைந்து.

கண்ணுய்க் கலைமகள் கல்வி நிலையத்தை
எண்ணிப் புரக்கின்ற ஏந்தலவன் - மண்ணுலகில்
பொன்னி நதியும் பொதிய மலையும்போல்
மன்னிப் பொலிக மகிழ்ந்து.

அன்பு நிரம்பினனுல், ஆசிரிய னுனவனுல்,
இன்பம் பணியென் றிருப்பவனுல், - என்பனடிச்
சிந்தையனுல், நட்பிற் சிறந்தவனுல் மீனுட்சி
சுந்தரனை வாழ்த்தலுமோர் தொண்டு.

வாழி, கலைமகள் கல்வி நிலையவளம்;
வாழி, அதைவளர்க்கும் மாண்பினர்கள்; - வாழியரோ,
கம்பனுடன் வள்ளுவனும், காந்தித் திருநெறியும்
உம்பரின்மேல் உம்பர் உயர்ந்து.



“ உயர்கல்விப் படங்களை உற்று நோக்குகிறார் ”



காந்தீயத் தொண்டர் ஐயா



'ஆசிரிய ஐக்கிய சங்கக் கட்டிடக் கால்கோள் விழா'



'ஆசிரிய ஐக்கிய சங்கத்தில் ஐயாவின் படத்திறப்பு'

ஐயா ஆற்றிய அரும் பணிகள்

—எம். பி. நாச்சிமுத்து முதலியார், பி. ஏ., பி. எல்.—

'தோன்றிற் புகழொடு தோன்றுக' என்னும் வள்ளுவர் வாய்மொழிக்கிணங்கப் புகழ் மணக்க இவ்வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து, எழுபத்திரண்டாண்டகவை எய்திய பெருந்தகையாளர் திரு. சீ. மீனாட்சிசுந்தர முதலியார் அவர்களின் தொண்டு பாராட்டிப் போற்றப்பட வேண்டியதொன்றாகும்.

இன்று தமிழ்நாட்டில் தலைசிறந்து விளங்கும் ஒரு சில கல்வி நிலையங்களில் ஈரோடு கலைமகள் கல்வி நிலையம் முதலிடம் பெறத்தக்கதென்பது மிகையன்று. கடந்த ஏழாண்டுகளாகப் பள்ளியிறுதிப் பொதுத்தேர்வில் தொடர்ந்து நூறு விழுக்காடு (100%) வெற்றியினை அந்நிலையம் பெற்று வருவதொன்றே அதன் இணையற்ற பெருமைக்குப் போதிய சான்றாகும். இத்தகு பெருமையினை அந்நிலையம் எய்துவதற்குக் காரணமாயமைந்த, அந்நிலையத்தின் நிறுவனரும், முதல்வரும் தாளாளருமாகிய பெருந்தகையாளர் திரு. சீ. மீனாட்சிசுந்தர முதலியார் அவர்களுடைய சீரிய தொண்டினை எண்ணும்போது அவர் தம் மாண்பு மலையினும் மாணப் பெரிதாகத் தோன்றுகின்றது.

இவ்வாறு தொண்டு மலையாக, இன்று சான்றோர் போற்றச் சிறப்புற்று விளங்கும் பெரியார் அவர்கள், அத்தொண்டுத் துறைக்குப் பயிற்சியே போன்று இளமை முதல் ஆற்றிய அரும்பணிகளின் வரலாற்றுக் குறிப்புக்கள் என் நினைவில் தோன்றுகின்றன.

"அறையில் ஆடிப்பயின்று பின் அம்பலத்தில் ஆடவரவேண்டும்" என்னும் பழமொழிக்கேற்ப, இன்று அனைத்து மக்களுக்குமான தொண்டில் ஈடுபாடு கொண்டுள்ள பெரியார் அவர்கள் தொடக்கத்தில் தாம் பிறந்த சமூகத் தொண்டில் ஈடுபாடு கொண்டார்.

1929-ஆம் ஆண்டு சனவரித் திங்கள், 19-20 ஆம் நாட்களில் ஈரோட்டில் தென்னிந்திய செங்குந்தர் முதலாவது மாநாடு நடைபெற்றது. அம் மாநாட்டில் முப்பதாண்டினை ஞராகவும், உயர்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியராகவும் இருந்த திரு. மீனாட்சிசுந்தரனார், பி. ஏ., எல். டி., அவர்கள் தொண்டர்படைத் தலைவராயமைந்து அரிய முறையில் தொண்டாற்றி மாநாட்டினைப் பொலிவுறச் செய்தார். அம் மாநாட்டில் ஓர் இராணுவத் தளபதிபோல் அவர் வீறுடன் செயலாற்றிய திறம், அனைவரையும் இறும்பூது கொள்ள வைத்தது. பொதுவாழ்வில் முதல் முதல் தொண்டர்படைத்

தலைவராக நுழைந்ததே அவர்தம் பிற்காலத் தொண்டு வாழ்க்கைக்கு ஓர் அறிகுறி போல் தோன்றிற்று. அப்பொழுதே சமூகப் பெரியார்கள் பலர் திரு. மீனாட்சி சுந்தரனாரை எதிர்காலச் சமூகத் தலைவராக மனக்கண்ணில் கண்டு மகிழ்ந்தார்கள். அக்கனவு பலித்தது.

1931-ஆம் ஆண்டு காஞ்சிபுரத்தில் நடைபெற்ற தென்னிந்திய செங்குந்தர் இரண்டாவது மாநாட்டில் திரு. மீனாட்சிசுந்தரனார் இளைஞர் மாநாட்டுத் தலைவரானார். மிகுவேகங்கொண்ட பகுத்தறிவு வாதியாகச் சீர்திருத்தக் கருத்துக்களை அழுத்தமான முறையில் வெளியிட்டார்.

1939-ஆம் ஆண்டில் திருச்சி மாவட்டம் திருவானைக்காவில் நடைபெற்ற தென்னிந்திய செங்குந்தர் மாநாட்டில், சமூக மாநாட்டுத் தலைவரானார். சமூக முன்னேற்றத்திற்கான புதுமைக்கருத்துக்கள் பலவற்றைப் புரட்சிகரமாக எடுத்துரைத்தார்.

1939-ஆம் ஆண்டு பிற்பட்ட வகுப்பினர் பட்டியலிலிருந்து செங்குந்தர் இனம் விலக்கப்பட்டது. அதனை எதிர்த்துச் சென்னையில் நடைபெற்ற மாநாட்டிற்குத் திரு. மீனாட்சிசுந்தர முதலியார் அவர்களே தலைமை தாங்கினார்கள். அம் மாநாட்டின் பிரதிநிதிகளின் தலைவராக திரு. மீனாட்சிசுந்தர முதலியார் அவர்கள் கவர்னரை நேரில் சந்தித்துப் பேசினார். அப்பேச்சின் விளைவாகச் செங்குந்தர் இனம் மீண்டும் பிற்பட்ட வகுப்பினர் பட்டியலில் இடம் பெற்றது.

இவ்வாறு மாநாடுகளின் மூலம் சமூகத் தொண்டாற்றியதுடன் நில்லாமல் 27—12—1940 முதல் 26—5—1947 வரை ஏழாண்டுக் காலம் தென்னிந்திய மகாசன சங்கத்தின் அமைச்சராகவும் பணிபுரிந்துள்ளார்.

இவ்வாறெல்லாம் தமது சமூகத்தவரோடு கலந்து பழகியதின் காரணமாகத் தமது சமூகத்தவர் உலக மக்களோடு ஒருங்கியைந்து உயர்வடைவதற்குக் கல்வி இன்றியமையாததென்பதை உணர்ந்தார். அதன் பொருட்டு அரும்பாடுபட்டு 1944ல் ஈரோட்டில் செங்குந்தர் உயர்நிலைப் பள்ளியை நிறுவி அதன் நிருவாகியாகப் பணியாற்றினார்.

ஈரோட்டில் திரு. மீனாட்சிசுந்தரனார் செங்குந்தர் உயர்நிலைப்பள்ளி நிறுவியதின் தூண்டுதலாகச் சேலம் மாவட்டம் தாரமங்கலத்திலும் ஓர் செங்குந்தர் உயர்நிலைப்பள்ளி தோன்றுவதற்கான சூழ்நிலை ஏற்பட்டது. அச்சூழ்நிலையை நன்கு உருவாக்கி அங்கும் செங்குந்தர் சார்பில் ஓர் உயர்நிலைப்பள்ளி அமையச் செய்த பெருமை நமது பெரியார் அவர்களையே சாரும். அத்துடன் சென்னிமலையில் கொமரப்பா செங்குந்தர் உயர்நிலைப்பள்ளியை நிறுவுவதற்கு நாங்கள் மேற்கொண்ட முயற்சிகளுக்கு அவர் அளித்த உதவியை எங்கள் உள்ளம் என்றும் மறவாது.

கல்லூரிப் படிப்பை முடித்த அண்மையில் சில ஆண்டுகள் தேசீய இயக்கத்தில் ஈடுபட்டுக் கோவை மாவட்டக் காங்கிரசுச் செயலாளராகவும் பணியாற்றினார்.

அம்மட்டோ? தமிழ்நாட்டில் புகழ்மிக்க நகராட்சிகளுள் ஒன்றாகிய ஈரோடு நகராட்சி மன்றத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். தன்னேரில்லாத் தலைவர் திரு. மீனாட்சிசுந்தரனார், அக்காலை ஆற்றிய பணிகள் பலப்பல.

நாற்பத்தைந்தாண்டகவையைக் கடக்குமெல்லையில், நமது பெரியார் அவர்கள் உள்ளம், தமது சமூகத்தளவில் கட்டுப்பட்டு நில்லாமல் விரிந்து பரவலாயிற்று. பொதுவாகச் சமூகத்தில் பெண்ணினம் மிகவும் பிற்பட்ட நிலையிலிருப்பது பெரியார் அவர்கள் உள்ளத்தை மிகவும் உறுத்திற்று.

"கண்களிரண்டினி லொன்றைக் குத்திக்
காட்சி கெடுத்திடலாமோ
பெண்களறிவை வளர்த்தால் - வையம்
பேதையை யற்றிடுங் காணீர்"

என்னும் பாரதியாரின் பாடல் இதயத்தைத் துளைத்தது.

பல இரவுகள் சிந்தனைத் தொடரால் சீர்தூக்கியபின் "கலைமகள் கல்வி நிலையம்" மகளிர் கல்விக்கென 1945-இல் உருப்பெறலாயிற்று.

தொடக்கத்தில் சிறு குழந்தைகளுக்கு மேனாட்டு முறையிலான கல்விப் பயிற்சி தருவதற்கென்று இப்பள்ளி தொடங்கப்பட்டது. இப்பொழுது பல்வேறு கிளைகளாக விரிவடைந்து வளர்ந்துள்ளது. உயர்நிலைப்பள்ளி பூத்துக் குலுங்கும் பல்வண்ணப் பூஞ்சோலையாகக் கலைமகள் கல்வி நிலையம் இன்று பொலிவுற்றுத் திகழ்கின்றது.

இப்பூஞ்சோலையின் புரவலராகத் தமது எழுபத்திரண்டாண்டகவையில், உள்ளத்தால் நாற்பதாண்டிளைஞர் போன்று ஊக்கமுடன் பணியாற்றித் தொண்டுச் சுவையே தமது வாழ்க்கைச் சுவையாகக் கொண்டின்புறும் பெரியார், நூறாண்டின் மேலும் சீரோங்க வாழ்ந்து, மன்பதை இன்புறப் பணிபுரிய எல்லாம் வல்ல இறைவன் திருவருள் துணை நிற்குமாறு அவ்விறைவன் திருவடி மலர்களைச் சிந்தித்துப் போற்றுகின்றேன்.

வாழ்க மீனாட்சிசுந்தரனார்!
வளர்க அவர்தம் கல்வித் தொண்டு!

ஆயிரம் பிறை வானம்!

புலவர் தமிழன்பன், பி. ஏ.,
புதுக் கல்லூரி, சென்னை.

1

வேரோட்டம் கீழ்நி கழ்த்தி
விழை சுவைக் கனிகள், பூக்கள்
பாராட்டும் படிய ளித்துப்
பயன் நிழல் தந்து வக்கும்
ஈரோட்டுத் தருவே! மூட
இருட்டோட்டு நிலவே! கல்வித்
தேரோட்டும் உம்மைப் பாட்டுத்
தேனோட்டம் தனில்ந னைப்பேன்!

2

மணி வளர்க்கும் வாழ்க்கை எல்லா
மனிதர்க்கும் சொந்தம்! நீரோ
பணி வளர்க்கும் வாழ்க்கை யாலே
பழுத்தவர் ஆனீர்! தீய
பிணி வளர்க்கும் அறியா மைக்குப்
பெரியதோர் எதிரி யானீர்!
அணி வளர்க்கும் பாவுள் வெண்பா
அணையராய் முதன்மை பெற்றீர்!

3

பஞ்சுடல் குஞ்சு கட்குப்
பறக்கவான் பரப்பைக் காட்டித்
தஞ்சுகம் அதுவே என்று
தானுடன் பறக்கும் சோலை
அஞ்சுகம் நீர்! இடர்கள் கண்டே
அஞ்சகம் இலாத வர்நீர்!
வஞ்சகம் இன்றிக் கல்வி
வழங்கிடும் ஈர மேகம்!

4

பலகறை ஓசை தீந்தேன்
பாட்டெனப் புகழ மாட்டார்!
உலர்ந்துதிர் சருகைக் கோத்தே
ஒருவரும் அணிய மாட்டார்!
உலகினுக் கேதும் வாழ்வில்
ஒப்புர வாகச் செய்யார்
பலருண் டவரை நாடு
பாராட்டல் வழக்கம் இல்லை!

5

அச்சுமலர்ச் சிந்த னைத்தேன்
அருந்த வரும் வண்டி னத்தில்
நிச்சயமாய் மோனை யைப்போல்
நிற்பவர் நீர்! வாடாக் கல்விப்
பச்சயம் நீர்! உம்மைக் கொண்டே
பயனான தரச வாழ்க்கை
கச்சிதமாய்த் தயாரிக் கின்றார்
கணக்கிலா இளையோர் இங்கே!

6

கற்கண்டுக் கருத்தை யெல்லாம்
கார்காலம் செய்யும் நாக்கின்
சொற்கொண்டு பொழிய வல்லீர்!
சுவை கண்டு பெற்ற சேயாம்
புற்கொண்டு தந்தால் பேணிப்
புரந்ததை மாற்றித் "தஞ்சை
நெற்கொண்டு போங்கள்" என்றே
நீர் தந்தால் புகழார் உண்டா?

7

இரு பிறையை முகத்தில் மீசை
என நிறுத்திக் கொண்ட வர்நீர்!
வரு பிறைகள் ஆயி ரத்தை
வளர்க்கின்ற வான மானீர்!
ஒரு கோடிப் பிறைகள் கண்டே
உயர்தொண்டு வாழ்க்கை வாழத்
தருகின்ற வாழ்த்தை அன்புத்
தட்டினில் ஏந்த வாநான்?

An Inspiration from Erode

V. Iswarmurti,
M.A. (Visva Bharathi), M. A. (Oxon).,
M. L. C.

It is indeed a matter of pride for me to associate myself with the Silver Jubilee Celebrations of the well known 'Kalaimagal Kalvi Nilayam' at Erode. I can straight away say that this Institution has always been a source of inspiration and happiness for me and its founder and father-figure Thiru. S. Meenakshisundaram has rightly been the fountain-head of that inspiration. My admiration and affection for this gentleman have become so close and even intense to the extent of always visiting Erode on my way to Madras and Coimbatore. I had the privilege of meeting him and exchanging views on education when I was editing my—"International School monthly Newsletter". Through its columns, I was giving expression to several problems of Education in our State. I was also a strong advocate of change in several stages of our School and Collegiate Education. Indeed, I had the audacity of stating some extreme views on reforming the curriculum and examination systems in our High Schools. Always I found Thiru S. Meenakshisundaram an instant supporter of my views. It is a matter of surprise that the grand old man at the age of 72 should have complete identity of views with an young man—I hope I can claim—who is in his early thirties. I remember, once I had published an article with the title of "Immoral Education", condemning the practice of taking seriously all the governmental rules governing our examination systems. Immediately I found an encouraging reply from Erode. This had emboldened me when I decided to contest in the Election for a Membership to the Legislative Council from the Graduates Constituency. As many know, this election had generated enough controversy and heat in the midst of which I found myself almost without any political and otherwise any influential support. All that was left to me was the goodwill and affection I had created through my writings and through the experiments that I conducted in my school. To my utter surprise but great solace I found a team of allies who proved a better match to all the political forces that were ranged

against me in the election. If my election had proved anything, I think, it proved decisively that ideas well-expressed and politically well-articulated had a definite say in our public life. I once had the opportunity of giving expression to my views on education in the beautiful surroundings of the "Kalaimagal Kalvi Nilayam". I just narrated all the "Irregularities" and "Novelties" that I adopted in running my School in Pichanoor. I just explained how we tried to improve the examination system by allowing the students to use the textbooks in the examination hall. That instantly evoked derisive laughter in the audience. But in all seriousness I explained how the use of textbooks in the examination hall, if used under proper change in the questions, can do away with the fear of the students to face the examination. By a radical approach to eliminate fear from our examination system only can we hope to expose our students to self-confidence and creative thinking. After a few months, I read in a popular weekly of Tamil Nadu that the 'Kalaimagal Kalvi Nilayam', Erode had adopted revolutionary methods in examinations and I immediately wrote back to the Editor stating that I was the author of this scheme. My speech that evening in Erode must have left an impression on the mind of the 'youthful' grand old gentleman of Erode and they had the courage to adopt this bold experiment in their school. This instance gives an idea of the measure of the man Thiru S. Meenakshisundaram, who is known for his passion for education. In his Institution he had an able team of about hundred odd teachers under the dynamic and equally inspiring leadership of the Headmistress Miss. Muthiah. Miss Muthiah is the ideal partner of this great Institution. She had successively established a record of cent percent success for the students of her School in final Examination. This is no mean achievement when we consider the problems of teachers and unsatisfactory conditions in which our teachers have to live and work and inspite of several odds against maintaining a good educational atmosphere in our society. I am not exaggerating when I say that this premier idealist Institution of Coimbatore District has set a pace for many other High Schools in our State. I claim that Thiru S. Meenakshisundaram's inspiration has given me courage and enterprise to pursue more radical paths both in education and in public affairs.

On this occasion of his completing seventy two years, I pay my humble tribute for his services and pray for his long life.

ஐயாவும் ஆசிரியர்களும்

கே. வி. மாரிமுத்து, பி. ஏ., எல். டி.

"ஐயா" என்று எல்லோராலும் அன்போடு அழைக்கப்படும் எனது பெருமதிப்பிற்குரிய ஆசிரியப் பெருந்தகை உயர்திரு. S. மீனாட்சிசுந்தரம் அவர்கள் கல்வித் துறைக்குச் செய்துவரும் பணிகளைப் போற்றும் வகையில் வெளியிடப்படும் சிறப்பு மலரில் "ஐயாவும் ஆசிரியர்களும்" என்ற தலைப்பில் எழுதும்படியான பேற்றினை, யான்பெற்ற இன்பமாகக் கருதி அதனை வையகமும் பெறுதற்காகக் கட்டுரை வடிவில் எழுதியுள்ளேன்.

கருவில் திருவுடைய கல்விக்காசன் :

ஐயா அவர்கள் ஆசிரியத் தொழிலுக்கெனவே பிறந்தவராவர் (a born teacher). 1924 முதல் 1926 வரை பயிற்சி பெறாத ஆசிரியராக ஈரோடு மாசன உயர்நிலைப் பள்ளியில் பணியாற்றினார். அதுபோழ்து ஒன்பதாம் வகுப்பிற்கு ஆசிரியராக எனக்கு ஆங்கிலம், வரலாறு போன்ற பாடங்களைப் போதித்தார். மொழியினைக் கற்பிக்கும் கனிவும், வரலாற்றினைக் காலத்தோடு கலந்தூட்டிய செறிவும் மாணவர்களுக்கு ஊக்கத்தையும், உற்சாகத்தையும் ஊட்டியதோடு மாணவர்களின் மனதில் பசுமரத் தாணியெனப் பதிந்தது. 1927 முதல் 1932 வரை சிவகங்கை ராஜா உயர்நிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியராகவும், அதன்பின் ஈரோடு மாசன உயர்நிலைப்பள்ளியின் தலைமை ஆசிரியராகவும், பணியாற்றினார். 1942ல் அறுவை வாணிபத்தில் ஈடுபட்டுக் கொள்வதும் மிகை கொளாது கொடுப்பதும் குறைபடாத நிலையில் நின்றும், கருவில் திருவான ஐயாவின் கல்விப்பணி 1945-ல் கலைமகள் கல்வி நிலையத்தைத் தோற்றுவித்துத் தென்னகத்துச் சாந்திநிகேதனமாய் 3000க்கு மேற்பட்ட மாணாக்க மாணாக்கியர்களுக்கு அறியாமை என்ற இருளையகற்றி அறிவுப்பணியினையும், ஆன்மீகப் பணியினையும் ஒருங்கே அளித்து ஒப்பாரு மிக்காரு மின்றி ஒளிர்கின்றது.

கல்வித் தொண்டே கனிந்த தொண்டு :

தமிழகத்தில் ஐயா ஒரு தலைசிறந்த கல்வி அறிஞராக (Educationist) விளங்குகின்றார். 1944ல் செங்குந்தர் உயர்நிலைப் பள்ளியைத் தோற்றுவித்து தாம் கண்ட போதனா முறைகளால் நகரில் நடுநாயகப்பள்ளியாக்கிச் சீரிய முறையில் அது சிறந்து விளங்கச் செய்துள்ளார். 1955ல் அருள் நெறித்திருப்பணி மன்றத்தின் மூலம் ஆசிரியப் பயிற்சிப்பள்ளி, அனாதை இல்லம் ஆகியவற்றை நிறுவித் திறம்பட நடாத்தித்

தக்கார் பொறுப்பில் ஒப்படைத்துள்ளார். மேலும் நகரத்திலுள்ள ஆசிரியப் பயிற்சிப் பள்ளி, தொடக்கநிலை, நடுநிலை, உயர்நிலைப் பள்ளிகள் அனைத்தையும் ஐக்கியப்படுத்தி "ஆசிரிய ஐக்கிய சங்கத்தைத்" தோற்றுவித்துள்ளார்.

கலைபல வளரும் கல்வி நிலையம் :

கலைமகள் கல்வி நிலையத்தின் சார்பில் இளைஞர் ஆதாரப்பள்ளி, மாண்டிசோரிப்பள்ளி, பிரப்பரேட்டரிப் பள்ளி, பெண்கள் உயர்நிலைப் பள்ளி, மாணக்கியர் இல்லம் எனப் பல பிரிவுகளைத் தோற்றுவித்து வளர்த்து வருகின்றார். ஐயாவின் தோற்றப் பொலிவும், நிர்வாகத் தன்மையும், தூய பணியும் தரமான கல்வியைக் கற்கும் ஆர்வமுடைய சுற்றுப்புறங்களிலுள்ள சிறுவர் சிறுமியர்களையும் தன்பால் ஈர்க்கும் தன்மைபெற்று விளங்குகின்றது. 72 வயது நிறம்பியும் ஐயா குழந்தைகளோடு குழந்தையாய் ஒன்றி அவர்களின் மனமறிந்து கல்வி புகட்டும் அவரது கனிவினைக் காணாதார் காணாதாரேயாவர்.

காட்சியில் கனிந்த கனி :

"ஆட்டுவித்தால் யாரொருவர் ஆடாதாரே, கூட்டுவித்தால் யாரொருவர் கூடாதாரே" என்ற அப்பரடிகளின் வாக்கிற்கேற்ப ஐயாவின் சிறந்த நிர்வாகத் தன்மையும், (administration) அவருடைய சக்திகளும் நிலையத்தில் பணியாற்றும் தலைமையாசிரியை ஆசிரியைகள் மூலம் வெளிப்படுகின்றன. ஆசிரியைகள் இல்லாத காலங்களில் வகுப்புகளுக்குச் சென்று பாடங்களைத் தாமே புகட்டுகின்றார். நிலையத்தைச் சூழ்ந்துள்ள நிழல்களில் மாணவிகளோடு மாணவியாய் அமர்ந்து பாடம் கற்பிக்கும் முறையில் பண்டைக்காலக் குருகுல முறையையும், தற்காலச் செய்முறைக் கல்வியின் சிறப்பையும் ஒருசேரக்காணலாம். இது ஐயாவிற்கே உரிய தனிப்பாணி எனக் கூறலாம். மேலும் ஆசிரியர்களின் பணியைத்தக்க சமயங்களில் உற்சாகமூட்டும் இனிய வார்த்தைகளாலும், போற்றுதலாலும் ஆசிரியர்கள் அதிசயமான காரியங்களைச் செய்யக்கூடும் என்ற ரகசியத்தை உணர்ந்த ஐயா அவ்வாறே நிலைய ஆசிரியைகளை ஊக்குவித்து வருகின்றார். இதன் காரணமாகக் கடந்த ஏழு ஆண்டுகளாக S. S. L. C. தேர்வில் நிலைய மாணவிகள் நூற்றுக்கு நூறு விழுக்காட்டுடன் தேர்ச்சி பெற்று நிலையத்திற்கு அழியாப் புகழைத்தந்துள்ளார்கள்.

தன்கடன் பணி செய்துகிடப்பதே :

காந்தியடிகளின் நாட்டுப்பணிக்குத் தன்னையே அர்ப்பணித்துக் கொண்ட நேருஜி போன்று கல்விப்பணியில் ஐயாவிற்கோர் உறுதுணையாய் இருப்பவர் நிலையத்தின் தலைமையாசிரியை செல்வி முத்தையா அவர்களேயாகும். காந்திய நெறியாகிய அகிம்சை, சத்தியம், எளிமை, அன்பு எனும் கொள்கைகளைப் பின்பற்றி ஆசிரியைகளிடம் தானோர் தலைமை ஆசிரியை என்ற தருக்கின்றி நன்கு பழகி அவர்களது தேவைகளையும், கஷ்டங்களையும் உணர்ந்து அவற்றை அவ்வப்போது நீக்கி நிலையத்தில் பணியாற்றும் நூற்றுக்குமேலுள்ள ஆசிரியைகளை ஓர் குடும்பமெனப் பேணிக் கட்டிக் காத்து வருகின்றார். நிலையத்திலும் மாணக்கியர் இல்லத்திலும் உள்ள

சிறு குழந்தைகள், மாணவிகள் அனைவரின் தேவைகளைப் பால் நினைந்தூட்டும் தாய் போல் பூர்த்தி செய்து அவர்களைப் பேணிக் காத்துவரும் அம்மையாரின் சேவையும் பண்பும் போற்றுதற்குரியதாகும். சுருங்கச் சொன்னால் குழந்தைகளின் கல்விக்காகவும், கலைமகள் கல்வி நிலையத்தின் முன்னேற்றத்திற்காகவும் தனது வாழ்வையே அர்ப் பணித்துக் கொண்ட மங்கையர்க்கரசி எனக்கூறலாம்.

ஆசிரியப் பணியே அறப்பணி :

ஐயாவின் உள்ளமும் உணர்வும், சொல்லும் செயலும் அறியாமையை அகற்றி அறிவை வளர்த்தற்குரிய வழிகளையே நாடுகிறது என்பதை உணர்ந்த தமிழக ஆசிரியர்கள் 1947 ல் அவரைத் தமிழ்நாடு ஆசிரியர்களின் சம்மேளனத் தலைவராக்கி ஆசிரியர்களின் உரிமைகளுக்காகப் போராடச் செய்தனர். உயர்திரு. அவிநாசிலிங்கம் செட்டியார் அவர்கள் கல்வி அமைச்சராயிருந்தபோது அவரிடம் தூது சென்று சம்பளக் கமிஷன் ஏற்படுத்தி ஆசிரியர்களின் ஊதிய உயர்வுக்கு ஐயா வழிவகுத்தார். மேலும் தமிழக அரசு 1955 ல் டாக்டர் அழகப்பச் செட்டியார் அவர்கள் தலைமையில் அமைத்த ஆரம்பக் கல்வி சீர்திருத்தக் குழுவில் ஐயா அவர்களை ஓர் உறுப்பின ராக்கிற்று. இதன்மூலம் ஆரம்ப ஆசிரியர்களின் நலனுக்காகவும், ஆரம்பக் கல்வியின் முன்னேற்றத்திற்காகவும் 64 சிபாரிசுகளை அரசுக்கு அனுப்பிய பெருமை ஐயாவிற்கு உண்டு. இன்று தமிழக ஆட்சியிலுள்ள திராவிட முன்னேற்றக் கழக அரசு தனியார் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களின் குறைகளை ஆயும் குழுவில் ஓர் உறுப்பின ராக்கியுள்ளது. இப்பணிகளை எண்ணும்போது ஆசிரியப்பணி அறப்பணி என்ப தனையும், அதற்கு ஐயா தன்னையே அர்ப்பணித்துள்ள பாங்கினையும் அறிந்து மகிழ்வோமாக.

ஆசிரிய ஐக்கிய சங்கத்தின் ஆணிவேர் :

ஆசிரியர்களின் நிலையையும் வேலைத்திறத்தையும் உயர்த்தல், நகர மக்களுக்குக் கல்வியின்பால் உள்ள அக்கறையை அதிகரிக்கச் செய்தல், நவீன முறைக் கல்வியின் சிறந்த அம்சங்களைப் போதனை முறையில் புகுத்த வழிவகைகள் செய்தல் ஆகிய இவற்றை நோக்கங்களாகக் கொண்ட "ஈரோடு ஆசிரிய ஐக்கிய சங்கத்தை" 1928-ல் நிறுவிய பெருமை ஐயா அவர்களையே சாரும். அன்றுமுதல் இன்றுவரை இச்சங்கம் நல்ல முறையில் பணியாற்ற உறுதுணையாக இருந்துவருகிறார். இச்சங்கத்தின் ஆதரவில் பல கருத்தரங்குகள், ஆய்வு அரங்குகள் நடத்த இடவசதியும், பணவசதியும் அளித்து ஆசிரியர்களை ஊக்குவித்துள்ளார். சங்கத்திற்கு நிலையான கட்டிடம் ஒன்று தேவை என்பதை உணர்ந்து ஐயா அவர்கள் திருநகர் காலனியில் 4720 ச. அடி பரப்புள்ள நிலத்தை மிகக் குறைந்த விலைக்கு (ச. அடி. 25 காசு) வாங்கி உதவியதோடு தமது முதிர்ந்த வயதையும் பொருட்படுத்தாது கட்டிட வேலையைத் தாமே மேற்பார்வை செய்தும், சுமார் ரூ. 3,500/- தன் சொந்தப் பணத்தை முன்பணமாகக் கொடுத்தும் 3 மாத காலத்தில் கட்டிடத்தைப் பூர்த்தி செய்து கொடுத்துள்ளார். இக்கட்டிடத்தி லிருந்து சங்கத்திற்கு மாதம் ரூ. 120 வாடகை வருகின்றது. மேலும் இந்நகரில் "ஆசிரியர் குடியிருப்பை" அமைத்ததில் ஐயா அவர்களின் சேவையும் பணியும் பெரிதும் போற்று

தற்குரியதாகும். நகரிலுள்ள இருபால் ஆரம்ப ஆசிரியர்கள், உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கள், ஆசிரியப் பயிற்சிப் பள்ளி ஆசிரியர்கள் அனைவரும் கருத்து வேறுபாடின்றி, ஒற்றுமை உணர்ச்சியுடன் அடிக்கடிகூடி தங்களது கல்விப் பிரச்சனைகளை ஆராய்ந்து தீர்வுகாண இச்சங்கம் பெரிதும் பயன்படுகின்றது. அனைத்து ஆசிரியர்களுக்கும் உற்ற நண்பராகவும், ஆலோசகராகவும், வழிகாட்டியாகவும் இருந்து தென்னிந்தியாவிலேயே இதற்கு இணையில்லை எனச் சிறந்த முறையில் இச்சங்கம் பணியாற்றத் தோன்றாத் துணையாய் விளங்குகின்றார். இப்பேருதவியை அளித்த கருணை வள்ளல் ஐயா அவர்களுக்கு இந்நகர ஆசிரியப் பெருமக்கள் என்றென்றும் நன்றி உடையவர்கள் ஆவர்.

குணமென்னும் குன்றேறி நின்றார் :

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு இவற்றைத் தன் ஆசிரிய வாழ்க்கையின் ஆரம்பத்திலிருந்து இன்றுவரை கடைப்பிடித்துவரும் கர்மவீரர். "தெய்வத்தானாகா தெனினும் முயற்சி தன் மெய்வருத்தக் கூலிதரும்" என்னும் வள்ளுவர் வாக்கின் வாய்மையை மெய்ப்பித்துத் தனது உழைப்பால் உயர்ந்த உத்தமர். இவரது சளைக்காத உழைப்பின் பயன் நம்நகர் பெற்றுள்ள கலைமகள் கல்வி நிலையம் என்னும் கலைக்கோயிலாகும். தன்னலமற்ற சேவையே வாழ்க்கையின் இலட்சியமாகக் கொண்டு தனது வாழ்க்கை முழுவதையும் கல்விப் பணிக்கும், ஆசிரியர் பணிக்கும் அர்ப்பணித்த செம்மல். முதிர்ந்த வயதை அடைந்தவராயினும் இளமை துள்ளும் உள்ளத்தை உடையகாளை. ஒழுக்கத்தில் கண்டிப்பும், உள்ளத்தில் அன்பும் கருணையும் ஒருங்கே உடையவர். இவற்றிற்கும் மேலாக தெய்வ வழிபாட்டிலும் ஆன்மீகத் துறையிலும் அதிக ஈடுபாடு உடையவர். ஆங்கிலத்திலும், தமிழிலும் புலமை பெற்று "இருமொழிச் சொற்கொண்டல்" என்ற பெருமையைப்பெற்ற பெருமகன். ஈரோடு நகராட்சியின் தலைவராய் விளங்கித் தகவுடைய செயல்கள் பலவற்றைச் செய்துள்ளார். அரசியல் மேடையில் சொலல்வல்லன் சோர்விலன் இகல்வெல்லல் யார்க்கும் அரியராய் விளங்குவதோடு சமயச் சொற்பொழிவிலும் கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும் வேட்பமொழியும் திறமையும் பெற்றுப் பொலிகின்றார். தமிழக அருள் நெறித் திருக்கூட்டத்தின் பொதுச் செயலாளராக நின்று சமயப் பொறுமைக்கு அணிகலனாய்த் திகழ்ந்துள்ளார். 1921 முதல் 1923 வரை விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு நாட்டிற்குப் பணியாற்றிய நல்லதொரு தேசபக்தர். அதுபோது "விடுதலை, விடுதலை" என்ற பாரதியின் பாடலை வீரம் ததும்பப் பாடியது இன்னும் எனது நினைவில் நீங்கா இடம்பெற்றுள்ளது. இவ்வாறு கல்விப்பணி, ஆசிரியப்பணி, சமயப்பணி, அரசியல்பணி முதலியவற்றில் ஈடுபட்டுவரும் ஐயா அவர்களின் ஒன்றா உலகின் உயர்ந்த புகழ் இவ்வுலகில் என்றும் நின்று நிலவுமாக.

அன்பின் உருவாய்ப் பண்பின்
புயனாய் அறிவின் செறிவாய்
என்பெலா முருக்கி எங்கள்
இதயங் கவர்ந்து உயர்ந்த
தன்னிகரற்ற ஐயனே!
இருமொழிக் கொண்டலே வாழிநீ!
தென்றல் தவழும் தேன்மதுர
மீனாட்சிசுந்தர நீ வாழியவே!!

Ayya as a Friend

V. R. Kuttiappa Gounder, B. A., L. T.,
Retd. District Board, Educational Officer, Bhavani

I am beholden to the felicitation committee for having given me on opportunity to associate myself with the pleasant function got up in honour of Mr. S. Meenakshisundara Mudaliar. In these days when a teacher has no place in the social heirarchy, when money speaks and truth is silent and when the bank balance alone matters and makes the leviation of society it is an agreeable surprise that a teacher is being honoured and admired to-day. It augurs well for us and for our country and will encourage the teacher to wake up and strive for great things in life. It is the teaching fraternity that makes and shapes the future "senators, statesmen, and saviours of society" and so it must be allowed to take its rightful place in society. The success of education is linked up with the status of the teacher and public opinion should be focussed on this issue.

Mr. Mudaliar is an eminent teacher of a higher order and stands as a model to the present day teachers. He has a rare genius for friendship and has acquired a good number of friends. I am fortunate enough to be one of his old friends, enjoying his constant counsel and confidence. Age, it is said, is recommendation in four things: Old wood to burn, old wine to drink, old books to read, and old friends to trust. And true to the saying we have developed between us great trust and admiration. And to-day when my friend is honoured I feel called upon by the small voice in me to say something about him as a friend.

As a friend Mr. Mudaliar leaves nothing to be desired. He has ever been useful and graceful to his friends. Unlike the fair weather friends he is not a waverer who basks when it shines and soaks when it rains. He has not left any of his friends in the lurch. His friends can bank upon him at all times under all circumstances. He shares their joys and sorrows in fraternal sincerity. He is kind to them but not blind to their faults. He never brooks any lapse on the part of his friends and hauls them up whenever he notices any unsavoury utterance or action. Ever cheerful himself he radiates that rare and precious

commodity. "The Knightly growth" fringing his lips is not an evidence of his rough exterior but serves only as a cloak covering his tender heart. Though on the shady side of seventy he wears his years well and asks his friends also to keep themselves fit to face the fever and fret of life. Senility is alien to him and age instead of contracting has served to mellow and ripen his nature. Having been seasoned to the ingrained evils of life he has developed that mental poise longed for, by our great thinkers.

Mr. Mudaliar is found in his elements in the company of his Teacher-Friends. Having been a teacher for a considerable length of time and having gone through the Mill he is best fitted to be their, "friend, philosopher and guide". He studies all their problems and takes pains to solve them by discourse and discussion. He feels distressed at the manifold maladies that mar the temples of learning in these days. He is very much exercised over the student's unrest and violence operating as a bar to the smooth working of schools and colleges. He asks every teacher to be a hero in the strife and not to be a dumb driven animal. Above all he exhorts the teachers to keep themselves abreast of their time and not to live in cloistered seclusion detached from life and all its pursuits. Having a voracious appetite for hard work and reading, he expects every teacher to be a student throughout his life. Society is suffering from a spiritual gangrene and he requests every teacher to kindle the spark of life in his ward and do his best for the interests committed to his charge. He lives for teachers and works for a FAIR DEAL to them with a view to bring on a NEW DEAL in Education.

My acquaintance with Mr. Mudaliar began in my school days during 1914 to 1922. Though Mr. Mudaliar was my senior in the school I scraped acquaintance with him for his pleasant manners. After my schooling I lost touch with him for many years and providence brought us together in 1942. I was the Headmaster of the Board High School, Erode when he was at the helm of affairs of The Mahajana High School, Erode. That year was a critical year when the National Movement had gained momentum and was causing headache to the Government. With the arrest of all the National Leaders including Mahathma Gandhi violence and disorder broke out and caused havoc all over the country. Arson and murder became rampant and there was tension everywhere. This wave of hysteria was about to invade the portals of schools and colleges and their heads were at their wits end to meet the situation. I had a tough time when the explosive nature and possibilities of the pupils came to be exploited by the rebel leaders. I rushed at-once to Mr. Mudaliar for advice. He was in his school ably controlling his restless boys. He was calm and collected and ...

me immediately valuable suggestions as to how to meet the impending evil. I followed them and successfully got over the nasty situation to the satisfaction of the public and the pupils. I shall ever remember him for his timely advice. I am in constant touch with him even after my retirement and consult him on many things. Being the managing committee member of a girls' high school here, I very often go to him for "tips" to run my school on right lines. And he makes his rich harvest of experience on the administrative side and academic side always available for my guidence and adoption.

As a friend of the POOR "The Lonely and the Lost" he has earned their everlasting gratitude by his sincere service and friendliness to them irrespective of caste colour or creed. I know he is allergic to the poisonous fangs of communalism and possesses friends of all communities at all levels of Society. They seek his advice whenever they are under a cloud. Here is a case in point. A graduate Tamil Vidwan — a Brahmin — having a wife and four children was *jobless* and was parading the streets of Erode for an appointment. No appointment could be had and none came to his help. Finally he approached Mr. Mudaliar and explained his case. Mr. Mudaliar, tender hearted as he is, was visibly moved at the sight of this man — a poor man and a teacher — and took him to Gurusamipalayam in Salem District and fixed him up in the local High School. And when his temporary appointment ceased Mr. Mudaliar continued his help. He contacted me and asked me to provide his friend with a job. He was gladly obliged and the poor man was appointed in my school to the joy of Mr. Mudaliar. This is an eloquent instance of Mr. Mudaliar's solicitude for the poor. Both the rich and the poor claim him as their friend and the sporadic wave of enthusiasm of the masses and the periodic fits of philonthraphy of the classes have been properly utilised for the execution of positive plans. The princely benefactions of private munificence which the Kalaimagal Kalvi Nilayam enjoys is an evidence of the esteem in which Mr. Mudaliar is held.

Now as a friend of the school children he is striving without weariness on his brows and weakness in his heart to prepare them as Good and Glorious citizens of our Country. He is convinced that children are the true wealth of a Nation and that they are made or marred for life only in our school. He is therefore interested in the proper and harmonious growth of each child under him and tries all means and methods to develop the best in them according to their aptitude. He loves them as a father and licks them into shape. He has a partiality for girls and knowing that they are the symbols of Sakthi prepares them with meticulous care for brightening the Home and lightening the load of their partners in life.

Finally as a friend of mankind Mr. Mudaliar is doing his best to bring peace on earth and goodwill towards men. By his religious talks and other public speeches he vehemently urges his audience to respect and cultivate higher values of life. He points out to them that man does not live by bread alone and should remember his Maker gratefully and become worthy of His love. Periodically he visits the far — flung villages and inspires and improves the villagers with his soul-stirring speeches. As a result, there is a wide awakening and greater awareness among the rural population.

The standing monument for the silent and tireless services of Mr. Mudaliar for the cause of education and welfare of mankind is the inspiring, "Kalaimagal Kalvi Nilayam" at Erode. It will proclaim to posterity, perennially, the services of a Great Teacher to Humanity. May the Almighty bestow on him His choicest blessings of long life, health and strength and enable him to fulfil his mission in life!

Headmaster of Headmasters

John Sundararaj, B. A., B. T.,
Headmaster & Correspondent, C. S. I. High School, Erode.

Erode is fortunate to have Thiru S. Meenakshisundaram B. A., L. T., (S. M) as a citizen in whom it has found a never-failing friend, a well balanced politician, a humble social worker, an outstanding scholar, an eminent educationist, respecter of all religions and a firm believer of God.

At Erode and elsewhere Thiru "S. M." is popularly and affectionately known as 'Iyya'. Though he is advancing in age, his passion for sound and liberal education is ever-increasing. As a teacher he still love to be with children guiding and counselling them.

At the State Convention of Headmasters held at Coimbatore, it was proclaimed that 'Iyya' is fit to be called as Headmaster of Headmasters considering his ripe age, vast experience and untiring service to the cause of Education.

Of course, 'Iyya' belongs to the Victorian Era. He is a rare specimen. His physical features combined with various qulities make him rather unparallel.

He possesses faculties that compel the admiration of the present generation of Headmasters.

May God bestow upon 'Iyya' His daily grace for many years of life and joy, peace and fruitful service.

விளையாட்டு அரங்கில் ஐயா

ஈ. எஸ். ஆறுமுகம்
உடற்கலை ஆசிரியர், ஈரோடு

'தோன்றில் புகழொடு தோன்றுக' என்பது திருவள்ளுவர் வாக்கு. உலகத்திற்குத் தந்து புகழ் பெறுகிறவர்களில் இரு சாரார் உண்டு. அரசியலில் புகழ் பெறுவோர் ஒரு சாரார். கலையாலும், அறத்தாலும் புகழ் பெறுவோர் மற்றொரு சாரார். அந்த முறையில் மதிப்பிற்குரிய மீனாட்சிசுந்தரம் அவர்கள் விளையாட்டுக் கலைத் துறையில் பெரும் பங்கு கொண்டு, அதில் ஊக்கமும், உற்சாகமும், விடா முயற்சியும் கொண்டு "தாம் இன்புறுவது உலகு இன்புறக்கண்டு காமுறுவர் கற்றறிந்தார்" என்பதற்கு இலக்கணமாக வாழ்ந்தவர். விளையாட்டுக் கலையைப் பேணி வளர்க்கும் உயரிய குணம் கொண்டவர். ஐயா அவர்கள் ஈரோடு இலண்டன் மிஷன் உயர்பள்ளியில் கல்வி கற்கும் பொழுது, பூப்பந்து, ஹாக்கி, கால் பந்து முதலிய விளையாட்டுகளில் நன்கு தேர்ச்சி பெற்ற வல்லுநர் போல் சிறந்த முறையில் விளையாடினர்.

1922-ஆம் ஆண்டு வரையில் உயர்நிலைப்பள்ளிகளுக்கு ஆங்கிலேயர்களே மாவட்டக் கல்வி அதிகாரிகளாக இருந்தார்கள். ஒரு சமயம் பள்ளி ஆய்வு முடிந்து, ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் ஒரு கால் பந்து விளையாட்டுப் போட்டி நடை பெற்றது. அதில் மாவட்டக் கல்வி அதிகாரியும் கலந்து கொண்டு ஆசிரியர் கட்சியில் சென்டர் பார்வேடாக விளையாடினர். ஐயா அவர்கள் மாணவர் கட்சியில் விளையாடினர். விளையாடும்போது கல்வி அலுவலர் ஒரு பந்தை ஆசிரியர் ஒருவரிடம் தள்ளி Take it, take it என்று கூறினர். ஆசிரியர் சற்று நிதானித்தார். அலுவலர் அவர்கள் Take the ball என்று உரத்த குரலில் கூறினர். ஆசிரியர் பந்தை உடனே கையில் எடுத்துக் கொண்டார். இந்த நிகழ்ச்சியைக் கண்ட பார்வையாளர்கள் கொல் என்று சிரித்து விட்டார்கள். இச்செய்தியை ஐயா அவர்கள் கலந்து கொள்ளுகின்ற கூட்டங்களில் எல்லாம் நகைச் சுவையாகக் குறிப்பிடுவார்கள்.

அவர் ஈரோடு உயர்நிலைப் பள்ளியில் நன்கு, திறமையாக விளையாடிய காரணத்தால் அவருடைய விளையாட்டுக் கலை ஆர்வத்தைக் கேள்வியுற்ற மதுரை அமெரிக்கன் கல்லூரி முதல்வர், அவருக்குக் கல்லூரியில் முதல் இடம் கிடைக்கும் நல்வாய்ப்பை ஏற்படுத்தித்தந்தார். விளையாட்டுத் திறமையால் அவர், கல்லூரியில் படித்து முடிக்கும்வரை கால்பந்து, பூப்பந்து, ஹாக்கி முதலிய விளையாட்டிற்குக் குழுத் தலைவராக இருந்து, பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் கல்லூரிக் குழுவே வெற்றிபெறச் செய்து கல்லூரிக்குப் பெருமை தேடித்தந்தார். எல். டி. படிக்கும்

பொழுதும் விளையாட்டுக் குழுத் தலைவராக இருந்து பல விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி கண்டு நற்பெயரை நிலைநாட்டினர்.

ஐயா அவர்கள் 1931 ஆம் ஆண்டு ஈரோடு மாசன உயர்நிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியராக நியமிக்கப்பட்டார். அவர் அப்பள்ளிக்கு வந்தபோது, விளையாட்டு நிகழ்ச்சிகள் மிகவும் பிற்போக்கான நிலையில் இருந்தது. அந்நிலையை மாற்றி முன்னேற்றம் அடையச் செய்த பெருமை அவருக்கே உரியது எனலாம்.

இராஜா ஆப் இராமனட் அவர்கள் உயர்நிலைப் பள்ளிக்கு விளையாட்டில் ஆர்வம் உள்ள ஒரு தலைமையாசிரியர் தேவைப்பட்டது. ஐயா அவர்களின் விளையாட்டுத் திறமையைக் கேள்வியுற்ற இராஜா அவர்கள், ஐயா அவர்களை நேரில் அழைத்து, தன்னுடன் இருக்கச் செய்து, அவர் விளையாடும் டென்னிசு, கால்பந்து, பூப்பந்து, ஹாக்கி முதலிய விளையாட்டுக்களை விளையாடச் செய்து, அவரின் திறமையைக் கண்டு மகிழ்ந்து தலைமை ஆசிரியராக ஏற்றுக் கொண்டார். அன்ருடம் இராஜா ஆப் இராமனட் அவர்களுடன் டென்னிசும், மாணவர்களுடன் பிற விளையாட்டுகளையும் விளையாடிப் பள்ளிக்கு நற்பெயரையும் புகழையும் பெற்றுத்தந்தார்.

ஈரோட்டில் அவரது நெருங்கிய நண்பர்களும், பிரமுகர்களும், ஐயா அவர்களை எவ்விதத்திலாவது ஈரோட்டிற்குக் கொண்டு வரவேண்டும் என்று முயற்சி செய்து, அவரை ஈரோடு மாசன உயர்பள்ளியில் தலைமை ஆசிரியராக அமர்த்தினர்கள். இராஜா ஆப் இராமனட் அவர்கள் மீனட்சிசுந்தரத்தைப் பிரியா விடை பெற்று வழி அனுப்பி வைத்தார்.

1933 ஆம் ஆண்டு சென்னை சைதாப்பேட்டை உடற்கலை சீனியர் இன்ஸ்பெக்டர் உயர்திரு. ஜி. எப். ஆண்ருசு பி. ஏ., எல். டி., பிஎச்டி, அவர்களின் தூண்டுகோலின் பேரில், ஈரோட்டிலுள்ள எல்லாப் பள்ளிகளிலுமுள்ள இருபால் மாணவ, மாணவிகளை ஒன்று சேர்த்துப் பயிற்சிதந்து, விளையாட்டு விழாவினை வெற்றிபெறச் செய்தார். அவ்விளையாட்டு விழா நிகழ்ந்த முறையைக் கண்டு, தலைமை தாங்கிய ஆண்ருசு அவர்கள் வியந்து, விளையாட்டு விழாவினை புதுமையாக நடத்திக் காட்டியதற்குப் புகழ்ந்து பேசினர். அத்தகைய விளையாட்டு விழாக்கள் இன்றும் ஈரோட்டில் சிறப்பான விழா நாட்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

ஐயா அவர்கள், நீண்ட நாட்களாகவே தனியாகப் பெண்கள் உயர்நிலைப்பள்ளி ஒன்று நடத்த வேண்டும் எனக் கருதியிருந்ததால், அவ்விளையாட்டு விழா முடிந்தபின், தலைமை ஆசிரியர் பதவியை ராஜினமா செய்து விட்டு, ஈரோட்டில் சில ஆண்டுகள் ஊமைப் பள்ளியாக நடைபெற்று, பின் நடத்த இயலாமல் இருந்த அப்பள்ளிக் கட்டடத்தை விலைக்கு வாங்கிக் 'கலைமகள் கல்வி நிலயம்' என்ற நிறுவனத்தைத் தொடங்கினர்.

1924 ஆம் ஆண்டு சேலத்தில் எக்ஸ்செல்சியர் மாநிலக் கால்பந்துப் போட்டி ஒன்று நடைபெற்றது. அவ்விளையாட்டுப் போட்டிக்குப் பல்வேறு இடங்களிலிருந்து புகழ்பெற்ற குழுக்கள் வந்து கலந்து கொண்டன. ஈரோட்டிலிருந்தும் ஒரு குழு கலந்து

கொண்டது. அக்குழுவில் திருவாளர்கள் 1. எம். வீராசாமி, 2. கே. ஆர். கிருஷ்ணமூர்த்தி, 3. ஈ. எஸ். ஆறுமுகம், 4. இராமச்சந்திரன், 5. மீனுட்சிசுந்தரம் 6. இ. டி. சாம்பசிவம், 7. மாரிமுத்து, 8. வரதப்பன், 9. வெங்கட்டராயன், 10. டி. என். சிங்காரம், 11. டி. என். துரைசாமி முதலியோர். இவர்களில் மீனுட்சி சுந்தரம் அவர்கள், இ. டி. சாம்பசிவம், கே. ஆர். கிருஷ்ணமூர்த்தி ஆகிய மூவரைத் தவிர, மற்றவர்கள் எல்லாம் வயதிலும், உயரத்திலும் சிறியவர்கள். நாங்கள் முதல் நாள் விளையாட்டில் மிகப் பெரிய குழுவை எதிர்த்து விளையாட வேண்டியிருந்தது. விளையாட்டு அரங்கத்தில் இறங்கியவுடன் பார்வையாளர்கள் எங்களைப் பார்த்து வியந்து, ஈரோட்டுக் குழுவினர் மிகச் சிறியவர்களாக இருக்கிறுர்கள் எனக் குறைத்து மதிப்பிட்டார்கள். ஐயா அவர்கள் சென்டர் ஆப்பில் விளையாடினுர். அவரைக் கடந்துவரும் பந்தெல்லாம் யாரும் குறுக்கிடாத பந்தாகவே இருக்கும். கோலுக்கு முன்னுல் புல் பேக்கு ஆடுகிற நானும், கே. ஆர். கிருஷ்ணமூர்த்தியும் பந்தை நிறுத்தாமல் அடித்து விடுவோம். பந்து ஐந்தடி உயரத்திற்குள் வந்தாலும், ஐயா இடது, வலது காலால் அடித்து முன் விளையாட்டாளர்களுக்குத் தள்ளிவிடுவார். பந்தைத் தலையில் முட்டித் தள்ளுவதில் மீனுட்சிசுந்தரம் மிகத் திறமையானவர். புல் பேக்கில் நிற்பவர்களுக்கு வரும் பந்து பெரும்பாலும் பிரீ பாலாகவே கிடைக்கும். இவ்வாறு திறமையாக விளையாடி ஒரு குழுவிற்கு மூன்று கோல் அடித்துத் தோற்கடித்து விட்டோம். மறு நாளும் ஒரு குழுவை மிகச் சுலபமாக வெற்றி பெற்றோம். இவற்றைக் கண்ட பொதுமக்கள், ஐயா அவர்கள் விளையாடும் திறமையைக் கண்டு, எங்கள் குழுவிற்கு ஐயா அவர்கள் முதுகெலும்பு போன்றவர் என்று வெகுவாகப் பாராட்டினுர்கள்.

அக்காலத்தில் சென்னை மாநிலத்தில், கால் பந்து விளையாட்டில் புகழ்பெற்ற குழுக்கள் இரண்டு. சென்னை முகமதியர் ஸ்போர்டிங் கிளப் மற்றொன்று சென்னை டெலிகிராப் ரெக்கிரியேஷன் கிளப். இதில் உள்ள அனைவரும் ஆங்கில இந்தியர்கள். இவர்கள் இறுதி ஆட்டத்திற்குத் தகுதி பெற்று, மேல் வட்டத்தில் இருந்தார்கள். நாங்கள் கீழ் வட்டத்தில் சென்னை முகமதியர் ஸ்போர்டிங் கிளப்பை அரைக்கட்ட ஆட்டத்தில் சந்தித்தோம். இரண்டு நாட்கள் விளையாடியும் விளையாட்டு சமன் நிலையில் முடிந்தது. மூன்ரும் நாள் காலையில் 8 மணிக்குத் தொடங்கி 9 மணிவரை விளையாடி அன்றும் சமனுகி விட்டது. நீட்டிப்புக் காலம் பத்துப் பத்து நிமிடங்கள் விளையாடியும் கோல் அடிக்க முடியவில்லை. இரண்டாவது நீட்டிப்புக் காலம் ஐந்தைந்து நிமிடங்கள் கொடுக்கப்பட்டன. இறுதியில் மூன்று நிமிடங்கள் இருக்கும்பொழுது சென்னைக் கட்சி எங்கள் குழுமீது ஒரு கோல் போட்டு விட்டது. அவ்வமயம் ஐயா அவர்கள், உரத்த குரலில் "Come on boys" நமக்கு இன்னும் மூன்று நிமிடங்கள் உள்ளன என்று உற்சாகமும் ஊக்கமும் தந்தார். நடுவில் வைத்த பந்தை நாங்கள் எடுத்துச் சென்று, அரை நிமிடத்தில் ஒரு கோல் போட்டுச்சரி செய்து விட்டோம்.

இறுதி ஆட்டத்திற்குத் தகுதி பெற்ற சென்னை டெலிகிராப் ரெக்கிரியேஷன் கிளப்பில் விளையாடிய அனைவரும் கிறிஸ்தவர்களாக இருந்ததால், அவர்கள் 24-ஆம் நாள் இரவு கிறித்துமசுக்குச் சென்னை செல்ல வேண்டியிருந்தது. அதனுல்

எங்கள் இரு கட்சிகளையும் மாலை மூன்றரை மணிமுதல் நாலரை மணிவரை விளையாட வேண்டும் என்றும், வெற்றிபெற்ற கட்சி நாலரை மணிமுதல் ஐந்தரை மணிவரை இறுதி ஆட்டத்தையும் விளையாட வேண்டும் என்றும் ஆணை பிறப்பித்தார்கள். அவ்வாணையை நாங்கள் இரு கட்சிகளும் மறுக்கவே, எங்கள் இரு கட்சிகளையும் விளையாட்டிலிருந்து விலக்கிவிட்டு, சென்னை டெலிகிராப் ரெக்கிரியேஷன் கிளப் வெற்றிபெற்றதாகக் கொண்டு, வெற்றிப் பரிசுகளை வழங்கி விட்டார்கள். நாங்கள் சிறுவர்களாக இருந்தமையால் மிகவும் வருந்தினோம் ஐயா அவர்கள் எங்களுக்கு அன்புடன் ஆறுதல் கூறினார். அதன்பின் நாங்கள் மகிழ்ச்சியுடன் ஊர் திரும்பினோம். ஆனால் எங்கள் விளையாட்டைப் பற்றி இன்றும் சேலத்தில் பாராட்டிப் புகழ்ந்து பேசுவார்கள்.

ஈரோட்டில் பல ஆண்டுகளாக மாவட்டம், கல்லூரி, உயர்நிலைப் பள்ளிகளுக்கென்று போட்டிப் பந்தயங்கள் நடத்துவதற்கு 400 மீட்டர் விளையாட்டு அரங்கின்றி தொல்லைப்பட்டுக் கொண்டிருந்தோம். ஐயா அவர்கள் ஈரோடு நகராட்சி மன்றத் தலைவராக வந்த பிறகு, முதன் முதலில் அந்தச் செயலை நிறைவேற்றித் தருமுறையில் சிதம்பரனார் பூங்காவை அருமையான விளையாட்டு அரங்கமாக அமைத்துத் தந்தார். ஆனால், அவ்விளையாட்டு அரங்கத்தை இப்பொழுது கண்காணிப்பில்லாமல் விட்டு விட்டது வருந்தத்தக்கது.

ஐயா அவர்கள் ஒரு திறமையான டென்னிஸ் ஆட்டக்காரர். அவர் ஈரோடு டென்னிஸ் கிளப்பில் பல ஆண்டுகள் தலைவராகப் பணியாற்றியிருக்கிறார். திறமையான நல்ல இளைஞர்களை டென்னிஸ் கிளப் உறுப்பினர்களாகச் சேர்த்து, டென்னிஸ் விளையாட்டிற்கு ஊக்கமும், ஆக்கமும் தந்தார். அவர் தந்த ஊக்கத்தினால், அக்கிளப்பில் பலர் டென்னிஸ் வீரர்களாக விளங்கினார்கள். குறிப்பாக, வி. ஆர். பாலசுப்பிரமணியம் அவர்கள், இந்தியாவில் ஆறும் எண் ஆட்டக்காரராகவும், சென்னை இரண்டாம் எண் ஆட்டக்காரராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஐயா அவர்கள் தலைவராக இருந்து செயல்பட்ட காரணத்தால், ஈரோடு டென்னிசு கிளப்பிற்குப் பெயரும் புகழும் கிடைத்தது.

ஆண்டு தோறும் கொள்ளேகால், தாராபுரம், திண்டுக்கல் முதலான இடங்களில் நிகழும் டென்னிசுப் போட்டிகளில் ஈரோட்டுக் கிளப்பும் கலந்து கொள்ளும். ஐயா அவர்களுடன் டீம் செல்லும் பொழுது பேருந்தில் அல்லது பெட்டி உந்தில் (வேன்) பயணம் செய்யும் பொழுது, இராமாயணம், திருக்குறள், மகாபாரதம் முதலிய நூல்களிலிருந்து அரிய கருத்துக்களை உரையாடி, எங்களுக்கு அறிவுரை வழங்குவார். அவருடைய பேச்சின் இனிமையால் எங்களுக்குப் பயணச் சலிப்பே தோன்றாது. நாங்கள் தங்கும் விடுதியிலும், ஓய்வு நேரங்களிலும் பல செய்திகளை உரையாடுவார். அச்செய்திகள் எங்கள் வாழ்க்கைக்குப் பயனுள்ளதாக இருக்கும்.

அவர் கலந்து கொண்ட டென்னிசுப் போட்டியில் முதல் செட்டை மிகத் திறமையாக விளையாடி வெற்றி பெறுவார். அடுத்த செட்டின் மத்தியில் அவருடைய கணுக்கால் சுளுக்கிக் கொள்ளும். நொண்டிக் கொண்டே விளையாடிவிட்டு வெளியில் வருவார்.

ஒரு சமயம் கொள்ளேகால் விளையாட்டுக்குச் செல்லும் பொழுது காட்டுப் பாதையில் செல்ல வேண்டியதாயிற்று. அதனால் துப்பாக்கியுடன் சில வேட்டைக் காரர்களை அழைத்துச் சென்றோம். ஒரு சமயம் ஐயா அவர்கள், ஒரு அழகான பறவையைச் சுட்டுவிட்டார். அப்பறவையைக் கையில் எடுக்கும் பொழுது, பறவை துடிதுடித்து இறந்து விட்டது. காரணம் இல்லாமல், வீணுகப் பறவையைக் கொன்று விட்டேனே எனக் கண் கலங்கி, வருந்தி இனிமேல் துப்பாக்கியைக் கையால் தொடுவதில்லை என்று உறுதி செய்து கொண்டார். அவ்வுறுதியை இன்றுவரை காப்பாற்றி வருகிறுர்.

1965, 69 ஆம் ஆண்டுகளில் சி. டி. எஸ். எஸ். ஜி. ஏ. ஏ. போட்டிப் பந்தய விளையாட்டுக்களை நடத்துவதற்குக் கலைமகள் கல்வி நிலையத்திற்குப் பொறுப்புத் தரப் பட்டது. இரண்டு ஆண்டுகளிலும் போட்டிகளை நடத்த ஐயா அவர்கள் எடுத்துக் கொண்ட தொல்லைகள் கொஞ்சநஞ்சமல்ல. அப்போட்டிகளில் கலந்து கொண்டு, பங்கு பெற்ற பள்ளிகள் அனைத்தும், ஐயா அவர்கள் ஏற்று நடத்திய விழாவில், எத்தகைய குறைபாடுகளும் இல்லாது நடத்தி, வெற்றி முரசு கொட்டிட ஊன்று கோலாக இருந்த அவர்களைப் பாராட்டிப் பேசினர்.

இத்தகைய அரிய பெரிய செயல்களைத் தன்கடமையெனக் கருதி, ஒல்லும் வகையான் பணிபுரிந்து, நாட்டுக்கும், கலைக்கும் தொண்டு செய்த ஐயா அவர்களைக் கலை உலகம் என்றும் மறவாது, மறக்கக் கூடாது. 'செயற்கரிய செய்வார் பெரியர்' என்ற வள்ளுவர் கூறிய கருத்தை வாழ்க்கையில் ஒழுகி மகிழ்ந்தவர். மேலும் அவர் தொண்டு நிறைவேற அவர் நடத்திவரும் 'கலைமகள் கல்வி நிலையம்' நீடு வாழ்ந்து அதன் பொறுப்பினை நிறைவேற்றும் என்று உறுதியாக நம்பலாம்.

வாழ்க மீனுட்சிசுந்தரம்! வாழ்க அவர் தொண்டு!
வாழ்க கலை உலகு!

வாழி! வாழி!

திருவருளைத் தந்திடுமின் தேன்மழலைக் குரல்வாழி!
தேன்மழலைக் குரல்கூட்டும் திருநிலையத் தெழில்வாழி!
திருநிலையத் தாசிரியர் திறல்பணியும் உடன்வாழி!
திருவாட்டி முத்தையா திருப்பணியும் தினம் வாழி!
திருநோக்கி லறஞ்சிந்தும் திருச்செல்வர் மீனுட்சி
சுந்தரனுர்ச் சொல்லழகும் செயலழகும் நனிவாழி!
ஒருநோக்கி லருள்கொட்டும் உத்தமர்சூழ் நிலையத்தை
உருவாக்கு முயரீரோட் டாரெல்லாம் நனிவாழி!

என நன்னூலார் கூறிய ஆசிரியர் இலக்கணத்திற்கு இலக்கியமாய், கால் நூற்றுண்டு காலம், செம்புலப் பெயல் நீராம் தன்மையுடைய மாணவப் பருவத்தை, கல்லின் தரம் கண்டு அழகிய சிலை வடிக்கும் சிற்பியாய், களிமண்ணின் தன்மையை தன்கையின் வன்மைக் கேற்பப் பதப்படுத்திப் பார்ப்பவரைக் கவரும் வண்ணம் பாண்டங்கள் செய்திடும் குயவனுய், உரிய காலத்தில் உழுது, விதை விதைத்து எருவிட்டு, களை யெடுத்து விளைவைப் பெருக்கும் உழவனுய், வெள்ளியராம் தன்மையுடைய மாணவரின் அகத்தில், அறிவைப் படைக்கும் நான்முகனுய், சூழ்நிலைக் கேற்பச் சுழலும் பாங்குடைய மாணவருள்ளத்தை ஒரு நிலைப் படுத்திக் கற்றோரும், மற்றோரும் போற்றிப் புகழும் வண்ணம் அறிவை வளர்ப்பதில் அயனுய், பாலருடைய உள்ளத்தில் படியும் அழுக்கினைப் பாங்குடன் போக்கிடும் அரியாய் நின்று ஆசிரியர் அனைவருக்கும் கலங்கரை விளக்க மாய்த் திகழும் வித்தகர் எம் ஐயா.

நடமாடும் நூல் நிலையம் :

“ இயற்றலும், ஈட்டலும், காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லதரசு ”

எனப் பகன்ற பொய்யா மொழிக் கேற்ப, எண்ணற்ற ஆன்றோர் பலரின் பொற் பேழைகளாகத் திகழும் நூல்களைக் கசடறக் கற்று அறிவை ஈட்டி, அவ்வாறு ஈட்டிய வற்றை மறதி என்னும் குருவி கொத்திச் செல்லாமல் பாதுகாத்து, அவ்வாறு பாது காத்தவற்றை, மாணவச் செல்வங்கள் ஏற்றுக் கொள்ளும் வகையில் வகுப்பவர் ஐயா. நூற்செல்வங்களை இளமை முதல் அறிவுப் பசியோடு சலியாமல், மடி கொள்ளாமல் படித்துப் படித்துப் பன்னருங்கலையிலும் பகலவனைத் திகழ்கிருர் எனக் கூறின் மிகை யாகாது. சில நூல் பயின்றவுடன் எல்லாவற்றையும் கற்று விட்டோம் எனத் தருக் காமல், பல நூல்களைக் கற்றும் தன்னடக்கமுடையவராய் அன்பும், பண்பும், பணிவும், அருளும், நிறைந்த குணக்குன்ருய், குடத்துள் விளக்காய்த் திகழ்கிருர் என்பதைச் சொல்லித் தெரிய வேண்டுவதில்லை.

எளிமையின் இருப்பிடம் :

பார்த்த இடமெல்லாம் பட்டொளி வீசிப் பறந்திடும் கலைக் கோயிலை உருவாக்கிய ஒரு தந்தை, மார்தட்டி ‘நான் தான் இப்பள்ளியின் ராஜா’ எனக் கூறிக் கட்டளையிட்டு ஆளாமல் அகல் விளக்காய் ஒளிவிடுகிருர். உடையில் எளிமை, உணவில் எளிமை, உருவத்திலும் எளிமை நிறைந்த பெருமையுடையவர். காட்சிக்கு எளிய வராய் மாணவச் செல்வங்கள் அனைவருக்கும் அன்னையாய், அறிவூட்டும் தந்தையாய்த் திகழும் தன்மை வாய்ந்தவர்.

உயர்ந்த உழைப்பாளி :

“ குடியென்னும் குன்ருவிளக்கம் மடியென்னும்
மாசூர மாய்ந்து கெடும் ”

என முப்பால் கூறிய மடியை ஒழித்து உழைப்பையே தன் உயிராகக் கொண்டு உழைத்து,

ஐயா ஓர் பல்கலைக் கழகம்

புலவர் மங்கையர்க்கரசி

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலில் தோன்றாமை நன்று "

என நவின்று சென்றார் வள்ளுவப் பெருந்தகையார். புலர்கின்ற பொழுதிலே மலராய் மலர்ந்து மடியும் மணமிக்க மலர்கள் போல் வாழ்ந்து அழியும் இவ்வுயிர் வாழ்க்கையின் பயன் பொன்றாப் புகழை நிலைநிறுத்திச் செல்வதாம். அவ்வாறு வாழ்வாங்கு வாழ்ந்து வையத்துள் சிறப்புற்று ஒளிரும் சிறந்தோர் சிலருள், குன்றின் மேலிட்ட விளக்காய்த் திகழ்பவர் எந்தையும் ஒருவராம்.

எந்தை என இயம்ப ஏனிந்த கலக்கம்? வாருங்கள் கலைமகளாம் கல்விக் கூடத்திற்குச் சென்று கண்டு வரலாம் எம் தந்தையை.

அன்பினால் விளைந்த குழைவு! அறிவால் அடைந்த அடக்கம்! இனிமையோடு இணைந்த எளிமை! நெடிதுயர்ந்த தோற்றம் கண்டவரைக் கவர்ந்திழுக்கும் அறிவொளி பரப்பிடும் கண்கள், பெருமிதம் தவழும் வளைந்த அழகிய வெண்மையான மீசை இவைதான் எம் தந்தை

எளிய குடும்பத்தில் பிறந்து தந்தையின் இறுதி ஆசையை அகமதில் கொண்டு, அன்னையின் துணையொடு அயராத உழைப்பால் அறிவொளி வீசும் அறிவுச் சுடராகப் பிரகாசிப்பவர் ஐயா.

"தாமின்புறுவது உலகின்புறக் கண்டு
காமுறுவர் கற்றறிந் தோர்"

எனத் தெள்ளுத் தமிழில் தெளிவுறக் கூறிய குறளின் பொருள் போல், சொல்லைச் செயலாக்கி, தொட்டிலை ஆட்டுங்கை தொல்லுலகையும் ஆளுந்திறம் பெற்றது என எல்லோரும் உணரும் வண்ணம் பெண் கல்விக்குப் பெருமையளித்தார்.

தந்தை ஒரு நல்லாசிரியர் :

" குலனருள் தெய்வம் கொள்கை மேன்மை
கலைபயில் தெளிவு கட்டுரை வன்மை
நிலம் மலை நிறைகோல் மலர்நிகர் மாட்சியோடு
அமைபவன் நூலாசிரியன் மனனே "

"ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழாது உஞற்று பவர்."

என்ற அதே முப்பாலுக்கோர் எடுத்துக் காட்டாய்த் திகழ்பவர் ஐயா. அவர் ஓய்வாக இருப்பதையே காண்பது அரிது. எதையாவது செய்து கொண்டே இருப்பார். எந்தச் செயலைச் செய்வதற்கும் கௌரவம் என்ற கவசத்தைப் போட்டுக் கொண்டு வாளா இருக்க மாட்டார். தோட்ட வேலையையும் சரி, துப்புரவைக் கவனிப்பதிலும் சரி, அவையெல்லாம் தன் கடமையாகக் கொண்டே செயலாற்றுவார். தளர்வுறும் வயதடைந்தும் தன்னுடைய கடமைகளிலும், அக்கடமையை உரிய நேரத்தில் செய்வதற்கும் தவறுவதில்லை என்றால் வியப்பாக உள்ளதல்லவா?

கொடை வள்ளல் :

கடையேழு வள்ளல்களையும், செத்தும் கொடுத்த சீதக்காதியையும் கற்பனையில் கண்டுள்ளோமே அன்றி நேரில் கண்டதில்லை. அவர்களெல்லாம் ஒருருக் கொண்டு எழுந்தவரோ என ஐயுறும் வண்ணம் கொடைத் தன்மை நிறைந்தவர். "வலது கை செய்வது இடது கைக்குத் தெரியக் கூடாது" எனக் கூறுவதுபோல் பிறரறியா வண்ணம் எத்தனையோ மாணவியருக்கும், மாணக்கருக்கும் உதவியளித்து வாழ்வில் உயரவழி செய்பவர் என்பது மறுக்க முடியாத உண்மை. மிகவும் கருணை உள்ளம் படைத்தவர். புறவிற்காகத் தன் உயிரையே தியாகம் செய்த சிபி, மயிலின் நடுக்கங்கண்டு தன்போர்வை ஈந்த பேகன், முல்லைக் கொடியின் வாட்டங் கண்டு தன் தேரை வழங்கிய பாரி ஆகியவர்களின் வழித் தோன்றல் என்பதைத் தன் செயலால் நிரூபிக்கும் தன்மையர் ஐயா.

சொல்லின் செல்வன் :

நடமாடும் நூல் நிலையமாக அருங்கலைகளை ஐயமறக் கற்றுச் சொலல் வல்லனாகத் திகழ்பவர் ஐயா. தன் சொல்லாற்றலால் கேட்டாரைப் பிணிக்கும் பெற்றி வாய்ந்தவர்.

"சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லுஞ் சொல்இன்மை அறிந்து"

எனப் பொய்யா மொழியார் புகன்றதற்கேற்பச் சொல் வளமிக்கு "இருமொழிச் சொற்கொண்டல்" எனக் கற்றோரும் மற்றோரும் போற்றும் சொல்லின் செல்வராகத் தாய்மொழியிலும், அந்நிய மொழி ஆங்கிலத்திலும் புலமை மிக்குத் திகழ்கிறார். ஐயா அவர்களின் பேச்சைக் கேட்கக் கேட்கத் தெவிட்டாத இன்பம் தரும். ஐயா அவர்களின் பேச்சு ஆற்றொழுக்குப் போல் பொருள் வளமிக்கு கேட்டோர் அனைவருக்கும் பொருள் புரியும் வண்ணம் எளிமையுடன் மிளிரும், கேட்டாரைப் பிணிக்கும் தன்மையதாய் அமைந்திருக்கும்.

அண்ணலின் வழியில் ஐயா :

அண்ணல் காந்தியின் அறவழியே தன் வழியாகக் கொண்டு ஒழுகுபவர். அண்ணல் எவ்வாறு செயல் வீரராகத் திகழ்ந்தாரோ அதேபோல் செயல் வீரராகத்



ஐயாவின் சமயத் திருத்தொண்டு

சித்தாந்தச் செம்மல்
அ. ஞானசம்பந்தம், ஈரோடு.

ஐயா அவர்கள் கல்வித்துறை முதலாகப் பலத் துறைகளிற் சிறந்த தொண்டாற்றியிருப்பது போலவே, சமயத்துறையிலும் அவர்களாற்றியுள்ள திருத் தொண்டு ஈடிணையில்லாத தொன்றாகும். பல சந்தர்ப்பங்களில் அவர்கள் சமயத் திருத்தொண்டில் அவர்கள் தலைமையின் கீழ் நின்று பங்குகொள்ளும் பேறுபெற்ற போதெல்லாம் அவர்களுக்குச் சமயத் துறையிலுள்ள ஆழ்ந்த அநுபவத்தினையும், பற்றினையும் நிதரிசனமாகக் கண்டு வியப்படைந்திருக்கிறேன். சமயத்துறையில் அவர்களாற்றியுள்ள திருத் தொண்டு ஆடம்பரமும் ஆரவாரமுமற்றதும், ஆழ்ந்தகன்று நுண்ணியதும் பயனுடையதுமாகும். சமய வழிபாட்டிலே ஈடுபடும்போது தன்னிலை மறந்து தன்னையேமறந்து ஒன்றிய மனமுடையராகக் கண் கண்ணீர் மல்க நின்று பண்போடு வழிபடுங்காட்சி, கண்டாரை மெய்சிலிர்க்கச் செய்யும். சமய சம்பந்தப்பட்ட முன்னோர்களின் அருணூல்களிடத்தும், அதனையருளிச் செய்த நூலாசிரியர்களிடத்தும் பேரன்பும் பெருமதிப்புங் கொண்டவர்கள். சமய சம்பந்தமான கூட்டங்களிலே பேசும்போது சமய நெறி எங்கும் பரவ வேண்டுமென்ற ஆர்வத்துடன் கருத்துக்களைத் திட்டவட்டமாகவும், ஐயவிபரீதங்களுக்கிடனின்றி ஆணித்தரமாகவும், நயமாகவும், தர்க்க நியாயங்கள் காட்டியும், பிரபலப் பிரமாணங்களோடு மேனாட்டு நல்லறிஞர்களது கருத்துக்களையும் புணர்த்து அழகுபெற எடுத்துக்காட்டிக் கேட்டார்ப் பிணிக்குந்தகையவாய்க் கேளாரும் வேட்பமொழிகின்ற ஆற்றல் பெரிதுமுடையவர்கள். அவர்கள் எவ்வளவு உயர்ந்த பெரிய விடயங்கள் பற்றிப் பேசினாலுங்கூடக் குழந்தைகட்கும் பாமரர்கட்குங்கூடப் புரியும்படியாக அருமையிலெளிய அழகும் இனிமையும் பொருந்தியதாக அமையும். சமயத்துறையிலே வீண் ஆடம்பரங்களையும், வெற்று ஆரவாரங்களையும், வெறுஞ்சொற்களையும் அறவே விரும்பாதவர்கள், சமயத்தில் உண்மையான அன்பினையும், நம்பிக்கையினையும், செயலினையுமே உயிரினும் பெரிதாக மதிப்பவர்கள். சமயத்துக்குப் புறம்பானக் கருத்துக்களையும், செயல்களையும் அஞ்சாநெஞ்சோடு கண்டிக்கும் சுபாவமுடையவர்கள். எந்தச் சமயத்தினரையும் குறைத்துக் கூறாது, அந்தந்தச் சமயத்தினர் தங்கள் தங்கள் சமயத்திற் கொண்டுள்ள உறுதிப் பாட்டினையும், அவரவர்களின் நற்பண்புகளையும், அவர்கள் செய்யும் நல்ல பயனுள்ள செயல்களையும் வெகுவாகப் பாராட்டி எடுத்துக்காட்டி ஒவ்வொரு சமயத்தினரும் தாங்கள் உண்மையாகப் பற்றியுள்ள சமயத்தில் உறுதிப்

திகழ்கிறார். சத்தியம், அஹிம்சை, புலால் மறுத்தல், எளிமை, உழைப்பு இக்குணங்களி லெல்லாம் எவ்வாறு உறுதியாக நின்று ஒழுகினரோ அதேபோல் அமைதியையே ஆயுதமாகக் கொண்டு உறுதி பூண்டு சத்திய சீலராக, அஹிம்சை வீரராக, அனைத் துயிர்களின் நண்பராகத் திகழ்கிறார் ஐயா.


வள்ளுவரின் பொய்யா மொழிக் கெடுத்துக்காட்டு:

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் மானிடர்களுக்கு ஏற்ற அருங்குணங் களை அரிதியிட்டு, பகுதி, பகுதியாகப் பகுத்து சென்றார் வள்ளுவர். முத்து முத்தாக மூன்று படியளந்து கொடுத்த வாய்மொழி இன்று உலகப் பொது மறையாகத் திகழ் கிறது. இத்தகைய ஏற்றமுடைய குறள் ஒவ்வொன்றிற்கும் எடுத்துக் காட்டாக விளங்குபவர் ஐயா. அன்புடமை, ஒழுக்கமுடமை, பண்புடமை என்றெல்லாம் பத்துப் பத்துக் குறளாகப் பகர்ந்து சென்ற வள்ளுவர் இன்றிருந்து எம் ஐயா அவர்களைக் கண்டால் இறும்பூதெய்தியிருப்பார். தான் வகுத்த இலக்கணத்திற்கோர் இலக்கி யத்தைக் கண்டு இயம்பொணா மகிழ்வெய்தியிருப்பார் என்பதில் ஐயமுண்டோ?

கலைமகள் கல்வி நிலையத்தில் பணிபுரியும் ஆசிரியைகளாகிய நாங்கள் பெரும் பேறு பெற்றவர்களே ஆகும். எங்கள் பணியைச் செவ்வனே செயலாற்ற ஐயா அவர் களும், அன்னை அவர்களும் சிறந்த வழிகாட்டிகளாக உள்ளார்கள். எங்களுக்குப் பள்ளியில் பணத்திற்காகப் பணிபுரிகிறோம் என்ற எண்ணமே உள்ளத்தில் ஊறுவ தில்லை. இல்லத்தில் இருந்து அவரவர்களுக்குரிய கடமையை செய்வது போன்றே உள்ளது. காலையில் ஐயா அவர்களின் மலர்ந்த முகம் எங்களை அன்புடன் வரவேற்கும். எங்கள் உள்ளத்தில் துயரமோ, உடலில் துன்பமோ இருந்திருந்தால் ஐயா அவர்களின் முகங் கண்டவுடன் சொல்லாமல் விடைபெற்று உற்சாகத்தையும், மகிழ்ச்சியையும் அனுப்பிவைக்கும்.

கண்டோரைப் பணிய வைக்கும் வண்ணம் காட்சிதரும் ஐயா அவர்கள் தோற்றத்திலே அகல் விளக்கு; தூய தொண்டிலே மெழுகுவர்த்தி, ஆற்றலிலே மின் விளக்கு, அன்போடும், பண்போடும் யாவரையும் அரவணைத்துப் பிறரைவிட எல்லா வகையிலும் உயர்ந்து வழிகாட்டும் பெற்றிலே கலங்கரை விளக்கம்.

ஐயாவின் உள்ளம் ஒரு சிறந்த பல்கலைக் கழகம் எனக் கூறின் மிகையாகாது. ஐயாவின் பெருமையைக் கூற இவ்வையகமே ஏடாயினும் பற்றாது. தொகுப்பின் விரியும், விரிப்பின் பெருகும்.



பாட்டுடன் நின்று, தங்கள் சமய நற்பண்புகளை விடாதுபேணி, நல்ல பயனுள்ள செய்திகளைச் செய்து, எவர்பாலுங்காழ்ப்பின்றி எல்லோரையும் மனதார நேசித்து வைத்து வாழ்வாங்கு சமயவாழ்வு வாழவேண்டுமென்பதனை வெகு இதமாக எடுத்துச் சொல்லும் இனிய இயல்புடைவர்கள்.

ஐயா அவர்கள், எங்கும் சமய நெறி பரவவேண்டும், எல்லா மக்களும் சமயவுணர்வு பெறவேண்டும், தெய்வ நம்பிக்கையும் தெய்வ வழிபாடும் வளர வேண்டும், எல்லா மக்களும் இன்புற்று இனிது வாழவேண்டும் என்று தமது உள்ளத்திற்கொண்டிருந்த அளவற்ற ஆசைப் பெருக்கினாலே சில ஆண்டுகள் தொடர்ந்து மாதமொருமுறை நாள் வகுத்துக் கொண்டு சமயத் துறையில் ஈடுபாடு கொண்டுள்ள அன்பர்களின் பெருங்கூட்டத்துடன் எனது இனிய நண்பரும் நல்லறிஞருமாகிய உயர்திரு. இரா. ப. தங்கவேலனாரவர்களையும் எளியனையும் தம் மோடணைத்துக் கொண்டு தாம் தலைமை தாங்கியிருந்து பல சிற்றூர்கள் பேரூர்களுக்குச் சென்று அங்கங்குள்ள நன் மக்களையும் அரவணைத்து அங்கங்குள்ள ஆலயங்களில் முறையாக, அமைதியாக வழிபாடு செய்து சமய போதனைகள் செய்து அங்கங்குள்ள நன் மக்களிற் பலரும் சமய நெறியில் நிலைபேறுக ஈடுபடுதற்குரிய சமயத் திருத் தொண்டினை அயராது செய்துவந்த பெருஞ்சிறப்பினராவார்கள். இன்னும், அவர்களாற்றிய சமயத் திருத் தொண்டுகள் பல தமிழ்நாடெங்கணுமுள்ள சமயத் தொடர்புடைய சபைகளில் அவ்வப்போது சென்று அவர்களாற்றிய சொற்பொழிவுகளெண்ணிலடங்கா. உள்ளூரிலும், சமயத் தொடர்புடையக் கூட்டங்களிலும், மார்கழி மாதத்தில் ஒவ்வோராண்டிலும் தொடர்ந்து பல நாட்கள் நிகழும் நிகழ்ச்சிகளிலும் ஐயா அவர்கள் ஆர்வத்துடன் கலந்துகொண்டு ஆற்றிய பொருள்பொதிந்த சமயச் சொற்பொழிவுகள் பொன்னேட்டிற் பொறித்து வைத்துப் போற்றுதற்குரியதொன்றும். "விஞ்ஞானமும் மெஞ்ஞானமும்" என்ற தலைப்புவைத்து விஞ்ஞான அறிவின் விசேடத்தை எடுத்துக் காட்டி, மெஞ்ஞானத்தின் அருமைப் பெருமைகளையும் இன்றியமையாமையினையும் பயனையும் அவர்கள் விளங்கவைக்கும் பெற்றி, பெரும் பண்டிதர்களும் அதிசயிக்கத்தக்க பெருமையுடையதாக இருக்கும். விதிக்கும் வினைக்கும் கண்கூடான உதாரணங்களைக்கொண்டு அவர்கள் தரும் விளக்கங்கள் வியந்து பாராட்டுதற்குரியனவாகும். எல்லாவற்றிற்கும் சிகரமாக அவர்களுக்குத் திருவாசகஞானத் திருமுறையில் உள்ள பற்றும் பயிற்சியும் அனுபவமும் சொல்லிலடங்காததாம். திருவாசகம் பற்றி அவர்கள் பேசும்போதும், மற்றவர் பேசக் கேட்கும்போதும் ஐயா அவர்கள் உலகை மறந்து உள்ளுணர்வுந்த உண்மையன்பினைத் தலைக்கூடி மெய்யரும்பி விதிர்விதிர்த்து ஆனந்த அருவிநீர் சொரிய இருந்து பேசும் கேட்கும் நிலையினின்ற காட்சி எம்போன்றூர் பலரும் பல காலும் கண்ணாரக்கண்டு வியந்ததொன்றாகும்.

எங்கும் நிறைந்த இறைவன், அன்பர்க்கு இன்பமயமான அருளமுதை ஊட்டுங்குறிப்புத் தோன்றுமாறு அடையாளமாலை அணிந்திருத்தலின், யான் ஆற்றன் மிக்க அன்பால் அழையாத நிலையிலும், மெய்யன்புடையாரைக் கூவி அழைத்துப் பணி கொள்ளுதல்போல, என்னையும் பணி கொள்ளுவானோ? என்ற திரண்ட கருத்தமைந்த,

கொள்ளுங் கில்லெனை யன்பரிற் கூய்ப்பணி
கள்ளும் வண்டும் அறாமலர்க் கொன்றையான்
நள்ளுங் கீழுளும் மேலுளும் யாவுளும்
எள்ளும் எண்ணெயும் போல்நின்ற எந்தையே

என்ற திருவாசக ஞானத்திருப்பாடலை ஐயா அவர்கள் பல சந்தர்ப்பங்களில் எடுத்துக் கூறி இறைவனிலக்கணத்தைப் பலபட விளக்கிக் காட்டுந்திறன் பெருமைக்குரியதொன்றாம்.

பணியுமா மென்றும் பெருமை சிறுமை
யணியுமாந் தன்னை வியந்து

என்னுந் தெய்வப் புலமைத் திருவள்ளுவருரைத்த மெய்வைத்த சொல்லுக்கிலக்காக ஐயா அவர்கள் சிறிதுந்தருக்கின்றிப் பணிவுடன் அமைந்தொழுகி ஆற்றிய சமயத் திருத் தொண்டுகள் அளவிலவாயினும் விரிவஞ்சி விடுத்தனம்.

இத்தகைய சமயத் திருத் தொண்டிலே மேம்பட்டு விளங்கும் மாண்பு மிக்க ஐயா அவர்கள், அரோக திடகாத்திரர்களாய் பூரணாயுளுடன் எக்குறையுமின்றி இன்பப் பெருவாழ்வெய்தி, இன்னுமின்னும் சமயத் திருத்தொண்டுகள் பலப்பல செய்திடவும் அதனால் யாவரும் ஆன்ம லாபமடையவும் பெருங்கருணை பாலித்தருளுமாறு அகண்டாகார நித்தவியாபக சச்சிதானந்தப் பிழம்பாகிய சிவசங்கர நாமத் தனி முதல்வன்றிருவடிக் கமலமெமதொரு முடிக்கமலமாகக் கொண்டு முப்போதும் முக்கரணங்களானும் மூவித வழிபாடுஞ் செய்கின்றாம்.

நெடுஞ்சுவரும் பாடும்!

தேர்வென்று வைத்தவர்கள் திகைப்பின்றித் தேர்ந்திடவே
பேர்வென்று பெற்றபுகழ்க் கொடியுயரப் பறந்தாட,
ஊர்வென்று மேன்மேலும் இடம்வென்று நாட்டிலுயர்
ஊக்கத்தை ஊட்டிவர, உலகெங்கும் நிலையத்தின்
பேர்நின்று கேட்டாலே பெருமகிழ்வுக் கூத்தாடப்
பெறுகின்ற நலத்தாலே பெருநன்றி நின்றாட,
யார்நின்று வளர்த்தாரோ அவர்பேரைப் போற்றிடவே
நீள்கின்ற நிலையமிதன் நெடுஞ்சுவரும் பாடாதோ!

An old student Identifies his teacher After 45 years

K. V. Subbuswamy
Calcutta

It was sometime in April 1969. There appeared in Ananda Vikatan an account of a school in Erode which celebrated an annual function of Kuthuvi-lakku. Being a nature of Erode, naturally I was keen to read the article. It was Kalaimagal Kalvi Nilayam. The name was new to me. But then I found the Founder was Mr. S. Meenakshisundaram. Immediately I wondered whether he could be the same Mr. Meenakshisundaram, who was my teacher in Erode. When I turned to the next page, there was the photograph of the Kuthuvilakku ceremony of the year. The Founder was handing over a small Kuthuvilakku to a young girl student. Sure as anything I recognised the long, though now somewhat drooping (but when he was my teacher, very awe inspiring) moustache of my old teacher. The same smile on his face, the acquiline nose, standing erect like a giant, which he was then and even now continues to be in his 72nd year.


I immediately wrote to Selvi Muthiah, Headmistress, whether the Founder could be my old teacher of whom I gave a brief account. I was surprised to get a cover by return of post. When I cut it open, I found a letter to me from — not from the Headmistress (her letter came a day later) — but from my old teacher himself in his own hand, which also remains to be as steady as it was 45 years ago. He was very happy indeed to know that his old student was able to identify him in his photo after 45 years. He sent me his blessings.

My memory goes back to 1924-25, the year in which the Cauvery was in her highest spate. Mr. Meenakshisundaram was an untrained teacher in Mahajana High School, Erode. He was handling History for Forms IV & V, Geography for Form IV. I had joined the school in the year in Form IV.

I was the youngest boy, barely 12 years in age, very thinly built and the shortest too. Naturally I was given a seat on the first bench, almost near



உலகச் செய்தியில்
ஊன்றிய கவனம்



அறிவியல் நூலொன்றை
ஆழ்ந்து ஆய்கின்றார்

the elbow of the teacher. Mr. Meenakshisundaram was the only teacher who had a moustache then. He used to wear a blue Khaddar long coat down to his Knee, a spotlessly clean Khaddar dhotie, and a still more spotlessly clean white turban. He wore a round sandalpaste mark on his broad forehead. He had a habit of brushing by his hand his moustache every few minutes. One could very well imagine how awe inspiring he was then — atleast to me the most timid and youngest boy of the class. I used to be sitting, almost always praying that he should not turn round to put questions to me, sitting almost touching his elbow. When however he did put questions, I could see in his eyes a benign grace and love, on account of which his moustache would disappear from my vision for the moment. I could get courage to answer.

Though he was an untrained teacher then, he commanded more respect from the student than his conferous who were more experienced. As he entered the class there would be an instantaneous hush. He had a remarkable way of giving importance to dates and events in history. He never used to make the class tiresome and boring. He used to keep an eye always on students sitting on the last bench, who were above 18, always ready for any mischief. The last bench also paid him respect!!

I am glad to know the school, founded by my old and respected teacher, is celebrating its Silver Jubilee, with an unique record of 100% success in examination for seven years in succession. I am also glad the citizens of my native place are getting up for a function to felicitate my teacher, who is now in prime 72.

I most earnestly and fervently pray to the Almighty to grant my teacher long life so that he could still do his best to Kalaimagal Nilayam and to the cause of education in general.

Amen!



வாடிய பயிரைக் கண்டாலும் வாடுவார்



நாட்டுக் கலை வளர்ப்பவரின் தோட்டக் கலை ஆர்வம்

நெஞ்சம் நிறைந்த நினைவில் ஐயா!



கவிஞர் ப. கோவிந்தராசு, ஈரோடு

மிஞ்சுபுகழ் பல்துறையில் **மீனாட்சி சுந்தரனார்**
கொஞ்சுதமிழ் தந்திட்ட கொண்டலவர் - விஞ்சுகலை
ஆங்கிலமும் செந்தமிழும் ஆயும் திறத்தாலே
ஓங்குபுகழ் பெற்றார் உயர்ந்து.

சிந்தனைப் பெட்டகத்தில் சேரறிவுப் பொன்னெடுத்து
வந்தவர்க்குத் தந்துவக்கும் வள்ளலிவர் - முந்துதமிழ்
மீனாட்சி சுந்தரனார் மேவுகலை **நன்மகளின்**
தேனாட்சி என்றே தெளி.

"தோன்றிற் புகழொடு தோன்றுக" என்னும்
ஆன்ற குறளுக்குச் சான்றாய்த் திகழ்வோய்!
பூந்தமிழ்ச் சிவபாதன் பொன்னார் கருத்தை
மாந்திச் சுவைத்தநன் மாணவ மணியே!
காந்திஜி சேவா சங்கம் கண்ட
ஏந்து புகழின் இனிய தலைவ!
அருள்நெறித் திருப்பணி அருமை மன்றின்
திருப்பணிச் செயலராய்த் திகழ்ந்த பெரியீர்!
இந்திரா காந்திபால் ஈடிலாப் பரிசை
ஈட்டிய பள்ளியின், இனியநல் முதல்வ!
இதமுடன் சுதேசி இயக்கம் பரவிட
விதம்பல பணிகள் வினயமாய்க் கொண்டே
கள்ளினை யொழிக்கவும் கதர்த்துணி விற்கவும்
அல்லும் பகலும் அயரா துழைத்தோய்!
இருளில் இடரில் உழலும் மக்களை
அருள்நெறி வாழ்வில் ஆட்படச் செய்வோய்!
காட்டும் உறுதியில் கனிந்தநல் லன்பில்
நாட்டும் கொள்கையில் ஞானச் செல்வ!
மீட்டும் வீணையில் மிதந்தெழும் இன்னிசை
ஊட்டும் கல்வியில் உயர்தனிச் செம்மல்!
ஆங்கிலம் செந்தமிழ் ஆய கலைகளில்
பாங்குடன் மொழியும் பயன்சொல் நாவலர்

மீனாட்சி சுந்தரர் மேதகு சிறப்பை
நான்தமிழ்ப் பாவில் நவிலப் போமோ?
இருமொழிப் புலமையில் இணையிலாக் கொண்டல்
இந்நக ராட்சியின் தந்தையு மானோய்!
ஈரோடு பெற்ற ஈடிலாக் கோகலே!
சீர்மிகு ஆசான்! சிந்தனைச் சிற்பி!
இதயந் தன்னிலே இனிக்கும் செந்தமிழ்!
உதய ஞாயிறு! உலவுபூந் தென்றல்!
கொட்டும் அருவி! கட்டிக் கரும்பு!
சொட்டும் தேன்துளி! வட்டப் பால்நிலா!
எட்டும் அறிவினில் இணையிலா எம்மான்
பட்டப் படிப்புடன் பல்கலை வாணன்
பாடு படுதலே பயன்வாழ் வென்று
நாடே உவக்கும் நற்கல்வி கண்டோன்.
அன்பும் அருளும் அறமும் பண்பும்
மண்ணில் மக்கள் மகிழ்வுடன் கொண்டால்
கோயிலாய் இறைவன் குடியிருப் பானெனும்
நேயமாய் வாழும் நெறியினை மொழிவோய்!
ஒளிப்பும் மறைப்பும் உம்மிடம் இல்லை,
வெளிப்படை யாகநீ வினைகள் செய்வோய்!
தாயுளம் கொண்ட தகைசால் ஐயா,
ஆய்ந்திடும் போதில் அருமைசால் அறிஞர்!
ஒளிசேர் கண்களும் களிசேர் நகையும்
முறுக்கிய மீசையும் முகத்தில் பொலியுமே
பழைமைப் பண்பும் புதுமைத் திறனும்
இரண்டும் வாழ்வில் இருகண் களென்போய்!
காந்தி யென்னும் கற்பகக் கனியைச்
சிந்தையிற் கொண்ட சீர்சால் பெரியோய்!
அரசியல் வாதி, அருங்குணத் தொண்டர்
கரவிலா நெஞ்சினர், கவின்சொல் வளத்தர்;
அஞ்ஞா னத்திலே ஆழ்ந்திடும் மக்களை
மெஞ்ஞா னம்பெற விஞ்ஞா னத்துடன்
தக்கமேற் கோள்களால் தகவுறச் சொல்லும்
பக்குவம் கொண்ட பகுத்தறி வாளர்!
ஆற்றுநற் சமயம் அருந்துணை என்போய்
வேற்றுச் சமயமும் விருப்புடன் கற்போய்.
"தென்னா டுடைய சிவனே போற்றி
எந்நாட் டவர்க்கும் இறையென வாழ்த்தி;
யாதும் ஊராய், யாவரும் உறவாய்
தீதிலா உணர்வை சிறக்கநீ மொழிவோய்!

தேசத் தொண்டில் தெய்வம் கண்டோய்!
தெய்வப் பணியில் தீந்தமிழ் உண்டோய்!
நேசம் நிறைய ஆசான் மீதும்
பாசம் பயில்வோர் பாலும் கொண்டோய்!
கலைமகள் கல்வி நிலையம் தழைக்க
வித்தை ஊன்றினர் வியன்பா லாம்பாள்!
ஊன்றிய விதைக்கு உரமும் நீரும்
இட்டு வளர்த்தார் இனியமுத் தையா!
வளரும் பயிர்க்கு வேலியாய் நின்று
கண்ணெனக் காத்தார் கவின்சேர் ஐயா!
ஆலயம் நாட்டல், அணைகள் கட்டல்,
சாலைகள் வளர்த்தல் சத்திரம் வைத்தல்
பண்டுநம் முன்னோர் பண்பார் தொண்டெலாம்
இன்றைய கலைமகள் இறைப்பணிக்கு ஒக்குமோ?
புகழ்சேர் தமிழும் புவிதிகழ் ஆங்கிலம்
தரமார் பல்கலை திறமுடன் பயிற்றும்;
கற்பவை கற்றுத் தெளிவுற யாண்டும்
பொற்புடைக் கலைமகள் பள்ளிபோல் வேண்டும்.
அள்ளும் பணிகள் அருமைதான் என்னே!
வெள்ளி விழாவினை விளம்பும் தரமோ?
அண்ணல் பெருமை அளவிடற் கரிதே
சொன்னால் இங்கே சுவைபட நீளும்,
என்றே கருதி இறையடி வணங்கி
நன்றே வேண்டுவம் வாழ்கபல் லாண்டே!

வள்ளுவரோ திருக்குறளைத் தந்த தாலே
வான்புகழைப் பெற்றார்ஐ யமில்லை; நெஞ்சை
அள்ளுகின்ற சிலம்பாலே கோவில் கொண்ட
அடிகளெனும் இளங்கோவும்; இராம காதை
தெள்ளுதமிழ்க் கவியமுதம் பொழிந்த கம்பர்
திசையெங்கும் புகழ்மணக்க வாழ்வா ராகின்,
வெள்ளிவிழாக் கலைமகளின் நிலையம் கண்ட
வியனுசான் அரும்பணியால் என்றும் வாழ்க!

நெஞ்சிருக்கும் வரையுன்றன் நினைவி ருக்கும்
நிறைகல்விக் கலைமகளின் நிலையம் வாழும்;
கொஞ்சுதமிழ் மொழிவளத்தின் இளமை போலக்
குன்றாத புகழ்ச்செல்வம் பலவும் கொண்டே
எஞ்சியுள்ள வாழ்வெல்லாம் மக்கட் தொண்டே
எனும்மீனாட் சிசுந்தரனார் இறைநோக் காலே
விஞ்சுபுகழ் கல்விக்கோர் வேந்தர் என்றே
வெற்றியுடன் எந்நாளும் வாழ்க நன்றே!

எம் தலைவர்

* எஸ். சகுந்தலா *

தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று — எனும்

வள்ளுவன் குறளுக்கு, மறைந்த மகாலட்சுமி திருமதி. செல்லம்மாவின் அரும்புதல்வன் திரு. மீனாட்சிசுந்தர முதலியார் அவர்களே உயிர் தந்துள்ளார் என்று நான் பெருமிதத்தோடு கூறிக்கொள்ள விரும்புகிறேன். இத்தகு நல்லாரையே யாங்கள் 'ஐயா' என அருமையாகவும் உள்ளத்தில் எழும் அளவிலடங்கா அன்பினாலும் அழைக்கின்றோம்.

பள்ளியில் படிக்கும் எண்ணற்ற மாணவ, மாணவிகளுக்கும், ஆசிரியர் பெருமக்களுக்கும் அன்பினுக்கு அன்பாய், பண்புக்கு ஓர் எடுத்துக் காட்டாய், பாசத்தின் கடலாய், எல்லாச் செயல்களுக்கும் ஓர் ஊன்று கோலாய் இருந்து வரும் தமிழகத்தின் தகைசான்ற தலைவரை, ஐயா அவர்களை, 'எங்கள் தந்தை' என உரிமையுடன் அழைப்பதில் எனக்கு அளவிலா ஆனந்தமே!

தொட்டனைத் தூறும் மணற்கேணி — என்பதைப் போல் மாணவர்களின் உள்ளத்தை மணற்கேணியாக்கி அதைத் தோண்டி அறிவுத்திறனை வெளிக் கொணர்ந்து கற்பிக்கும் நல் கல்விதனை ஊட்ட நாட்டம் கொண்டவர். காந்தியடிகளின் கொள்கைகளைப் பின்பற்றி, அதன்படி நடந்து, தன் மாணவ, ஆசிரிய மக்களையும் அதன் அடிச் சுவட்டில் நடக்க வழிவகுத்த வண்மை மிக்க நல் நெஞ்சத்தவர்.

மாணவர்கள் உடல், உள்ள, ஆன்ம வளர்ச்சியில் சிறந்து விளங்கவும், ஒழுக்கம், கடவுள் பற்று, நாட்டுப் பற்று, பெற்றோரிடத்தில் அன்பு, பெரியோரிடத்தில் மரியாதை, ஆசிரியரிடத்தில் மதிப்பு, சமூகத் தொண்டு, நன்னடத்தை, எவ்வுயிர்களிடத்தும் கருணை, பகைவனுக்கு உதவும் பண்பு ஆகிய — இதுபோன்ற பதினாறு நற்குணங்களிலும் சிறந்து விளங்கும் ஓர் இந்தியக் குடிமகனை உருவாக்கும் நன் முயற்சியில் ஈடுபட்டு அதைச் செவ்வனே நடாத்தும் செம்மலே நீர் வாழ்க!

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு — இம் மூன்றினையும் தம் தலையாய கடன்களாகக் கருதி முயற்சியே தொழிலாக, வெற்றியே அதன் பயனாக எண்ணும் தியாகியே எம்தந்தை! குன்றின் மேல் இட்ட விளக்குப் போல, ஊரின் நடுவில் பழுத்துள்ள பழமரத்தினை ஒப்ப எல்லோர்க்கும், எக்காலத்தும் நன்மை ஒன்றினையே செய்யக்கருதும் நல்லரசர் எம் தந்தை!

நெடிய உருவமும், வெற்றி நடையும், செம்பொன் போன்ற மேனியும், குறு குறுத்த பார்வையும், ஆண்மை அழகும், எதையும் தாங்கும் இதயமும், நற்சிந்தனையும் ஒருங்கே அமையப் பெற்ற எம் நிலையத் தலைவரே நீர் பல்லாண்டு காலம் வாழ்க! வாழ்க! எனக் கூறிக்கொள்கின்றேன். ◎



அருந்தமிழ் அறிவுரை
அரும்பி மலர்கிறது



சாரணர் முகாமில் ஐயா

'என்னை ஆட்கொண்ட ஐயா'



புலவர் செ. இராசு
சி. எஸ். ஐ. உயர்பள்ளி, ஈரோடு

காணற்கு இனியவரைக் கண்டேன்!


சுமார் 18 ஆண்டுகட்கு முன் ஒருநாள்! 1952 ஜூன் மாதம். இலண்டன் மிஷன் நடுநிலைப்பள்ளியில் மூன்றும் படிவம் (இன்றைய எட்டாம் வகுப்பு) தேர்ச்சி பெற்று செங்குந்தர் உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்தேன். ஒருநாள் பகல் 2 மணியளவில் மாணவர்கள் பேரொலி எழுப்பிக்கொண்டிருந்தனர் (நானும்தான்). அவர்களை அமைதிப்படுத்தப் பிரம்புடன் எதிரே இருந்த கலைமகள் கல்வி நிலையத்திலிருந்து ஒருவர் வந்தார். மிக அருகிலிருந்து அவரைக் கண்டேன். நம் ஐயாதான் அவர்.

உயர்ந்த தோற்றம்; உறுதிமிக்க நடை; கம்பீரமான பார்வை; ஆனல் கனிவான அன்பு மொழிகள். அவரைக் கண்டு 'தோள் கண்டார் தோளே கண்டார்' என்று கம்பர் கூறினரே அந்நிலையில் நான் ஆனேன். அவர் திரும்பிச் செல்லும்வரை அவரையே பார்த்துக் கொண்டிருந்தேன். அன்றே நான் அவர் வசப்பட்டு விட்டேன்! நல்லோர் தொடர்பு நாளும் வரிசை வரிசையாக வளரும் என்று ஒரு தமிழ்ச் சான்ருேர் கூறுகிருரே, அதுபோலவே அவருடன் என் தொடர்பு வளர்ந்தது.... வளர்ந்து கொண்டிருக்கிறது.


அறிவுத் தந்தை!

அன்று மாணவனுக அவரிடம் பழகிய நான் பின்னர் ஆசிரியனுக (ஐயா அவர்கள் செங்குந்தர் உயர்நிலைப் பள்ளியில் தலைமையாசிரியர் பொறுப்பில் இருந்த போது) செயலாளனுக (ஐயா அவர்கள் சாரண இயக்கத் தலைவராக இருந்தபோது) தொண்டனுக (காந்தி நூற்றுண்டு விழாக் கொண்டாட்டங்களின் போது) ஏன் நண்பனுகக்கூட (மன்னியுங்கள்... வரலாறு, கல்வெட்டு, இலக்கியம், சமயம், நாட்டு நடப்பு குறித்து ஐயா அவர்களுடன் நெருங்கிப் பழகி விவாதித்த...... விவாதிக்கின்ற உரிமைபற்றி இவ்வாறு எழுதிவிட்டேன்). பழகப் பெரும் வாய்ப்புக் கிடைத்துக் கொண்டிருக்கிறது. எனக்குக் கிடைத்த வாய்ப்புப் பிறருக்குக் கிடைக்குமா? என்பது சந்தேகந்தான்.

அவரைக் காணச் செல்லும் பொழுதெல்லாம் ஞாயிறுமலர், பிற விசேடமலர், வார மாத இதழ்களில் தான் படித்த ஆராய்ச்சிக் கட்டுரைகள் பற்றிக் கூறுவார்.



சாரணத் தந்தை - ஐயா



பிரதமரின் உரையை மொழி பெயர்க்கின்றார் ஐயா
(4—10—1969 கோவை)

சிலசமயம் அவரே கத்தரிக்கோல் தேடி வெட்டி அதனைத் தனியே வைத்திருந்து என்னைக் கண்டவுடன் கொடுப்பார். கைவசம் அது இல்லையாயின் குறிப்பிட்ட இதழ், செய்தியைக்கூறிப் 'படித்தாயா?' என்பார். இல்லையாயின் படிக்கத் தூண்டுவார்.

அண்மையில் எக்ஸ்பிரஸ் செய்தித்தாளில் வந்த குணவாயிர் (கட்டுரையாளர் தவறுகவே தலைப்புக் கொடுத்துவிட்டார். குணவாயில் என்பதே சரியானது) கட்டுரையை எனக்கு அளிக்க அவர் தேடிய விதம்...... பலரைத் தேடுமாறு பணித்து எனக்குத் தந்தார். என்ன ஆர்வம்! என்மீது என்னபற்று! ஆராய்ச்சித் துறையில் என்னை அவையத்து முந்தி இருக்குமாறு செய்த அறிவுத் தந்தை அவர்!

தாயினும் சாலப்பரிந்து!

ஒரு விழா நாள். துணைவேந்தர் சீருடை வழங்க 5-30 மணிக்குப் பள்ளிக்கு வருகின்றார். மாலை 3 மணியளவில் கலைமகளில் விழா வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தேன். ஐயா அவர்கள் வந்தார்கள். என்னைப் பார்த்து முதலில் கேட்ட கேள்வி 'இராசு சாப்பிட்டாயா?' என்பது தான். நான் இல்லை என்று பதில் சொல்லாமல் 'ஐயா போகிறேன்' என்று கூறினேன். ஐயா அன்பாகக் கோபம் கொண்டு 'என்னப்பா சாப்பிடாமல் வேலை செய்வதா? இங்கு சாப்பிடு; அல்லது உடன் வீடு சென்று சாப்பிட்டு வா' என்று கடுமையாக ஆணையிட்டார்கள்.

ஒருநாள் மாலை ஐயா அவர்களைக் காணச்சென்றேன். 'இராசு பொரி சாப்பிடுகிறாயா?' என்று கேட்டுப் பதிலை எதிர்பார்க்காமல் அவரே எடுத்துக் கொண்டுவந்து கொடுத்தார். தேவர் அமிர்தமென அதனை ஏற்றேன்.

4—10—1969 அன்று கோவையில் பிரதமர் இந்திராவின் ஆங்கிலப் பேச்சை ஐயா மொழிபெயர்த்தார்கள். அன்றே தலைமையாசிரியை அவர்கள் மதுரையில் பிரதமரிடம் பரிசுபெறச் சென்றார்கள். முதல்நாள் நான் கலைமகளுக்குச் சென்றேன். இராசு! மதுரைக்கு அம்மாவுடன் போகிறாயா? கோவை வருகிறாயா? இரண்டு காரிலும் உனக்கு இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. உன் விருப்பம்போல் செய்' என்றார். நல்ல வாய்ப்பு ஒன்றை நான் இழக்கக் கூடாது என்ற விருப்பம் அவருக்கு!

25—12—1969 ஐயாவின் பிறந்த நாள். ஐயா வேலூர் மருத்துவ மனையில் இருந்தார்கள். நான் ஐயாவைக் காணச் சென்றேன். ஐயா அவர்கள் நர்சுகளுக்காக அதிகாலையில் "ஹேப்பி கிறிஸ்துமஸ்" வாழ்த்து எழுதிக் கொண்டிருந்தார். மலர்ச் செண்டுகளுடன் பிறந்த நாள் வாழ்த்துக் கூறினேன். என்னை வரவேற்ற ஐயா எழுந்தார்கள். ஒரு பைக்குள் இருந்த 'கேக்' ஒன்றை எடுத்து அன்போடு எனக்கு அளித்தார்கள். பல நர்சுகள் வந்து ஐயாவுக்குப் பிறந்த நாள் வாழ்த்தும் கிறிஸ்துமஸ் வாழ்த்தும் கூறிச் சென்றார்கள். உடன் ஐயா "ஆறுமுகம்! இராசுவை டிபன் சாப்பிடச் சொல்லு நேரமாகிறது" என்றார் ஒரு தந்தையின் பாசத்துடன்!

இதைப் போலப் பலப்பல சந்தர்ப்பங்கள். அப்பொழுதுதான் 'தாயினும் சாலப்பரிந்து' என்று கூறிய சான்றோர் உரையின் உண்மைப் பொருளை நான் அறிந்தேன்.

... உறவினர்களுக்குள் சண்டை, சச்சரவு, கட்சிபேதம் காரணமாக ஈரோடு வந்தனர் முன்னோர். இங்கு வந்து மண்டிக்கடை, ஜவுளிக்கடை வைத்து வாழ்வாங்கு வாழ்ந்து வந்தனர்.

தந்தையின் ஆவல்!

செல்லம்மாவுக்கு மூத்த குழந்தை மீனாட்சிசுந்தரம். தந்தை சீரங்க முதலியார் படித்தது நான்காம் வகுப்புத்தான். இருப்பினும் மகன் மீனாட்சிசுந்தரத்தை நன்கு படிக்கவைக்க வேண்டுமென்று விரும்பினர். ஆனால் காலன் அவரை விட்டால் தானே! ஐயா அவர்கள் ஏழாம் வகுப்புப் படிக்கும் பொழுதே தந்தை நோய்வாய்ப் பட்டார்கள். உயிர் பிரியுமுன் செல்லம்மாவை அழைத்து 'எப்படியாவது மகனை நன்கு படிக்க வைக்க வேண்டும்' என்று கூறினர். செல்லம்மாவும் அப்படியே செய்வதாக வாக்குறுதி கொடுத்தார். தந்தை சீரங்க முதலியார் காலமானபின் அம்மா அவர்கள் கடுந்துன்பப்பட்டு உழைத்து உருக்குலைந்த நிலையிலும் ஐயாவைப் படிக்க வைத்தார்கள்.

இளமையில்...!

ஈரோட்டில் கொங்கிலம்மன் கோயில் அருகே இருந்த திண்ணைப் பள்ளிக் கூடத்தில்தான் ஐயா நான்காம் வகுப்புவரை படித்தார்கள். மாதச் சம்பளம் ஆசிரியருக்கு ஒரு ரூபாய் கொடுக்கவேண்டும். ஓடையிலிருந்து மணல் கொண்டுவந்து போட்டு எழுதிப் பழகுவார்களாம். அப்பொழுதெல்லாம் டிப்டி இன்ஸ்பெக்டர் வந்துதான் மாணவர்களைச் சோதித்து மேல் வகுப்புக்கு அனுப்புவார். ஐயா அவர்கள் ஆரம்பப் பள்ளியிலும் உயர்நிலைக் கல்வியிலும் சிறந்த மாணவராக விளங்கினர்.

சரசுவதி பூஜை வந்துவிட்டால் மாணவர்களுக்கெல்லாம் ஒரே கொண்டாட்டம்தான். ஆசிரியருடன் எல்லா மாணவர்களும் ஒன்ருகச் சேர்ந்துகொண்டு கோலாட்டம், கும்மி அடித்துக் கொண்டு மாணவர் வீடுகளுக்குச் செல்வார்கள். மக்கள் துணிகள், தானியம், பொரிகடலை, பணம் இவற்றையெல்லாம் அன்பளிப்பாக ஆசிரியர்க்குத் தருவார்கள். இதனல் ஆசிரியர்க்கும் சமூகத்திற்கும் நல்ல தொடர்பு இருந்தது.

திண்ணைப் பள்ளியில் பயிலும்போது ஆறுமுகம் என்ற நாவிதர் வீட்டுப் பையன் ஐயாவுடன் படித்தான். ஆனல் ஆசிரியர் அவனை மற்ற மாணவர்களுடன் உட்கார வைக்காமல் தனியாக வெளியே உட்கார வைப்பாராம். அப்போதே ஐயாவுக்கு இந் நிகழ்ச்சி மனத்தை உறுத்தும்.

கொங்கிலம்மன் கோயில் எதிரே ஒரு கிறித்தவ மதகுரு வாழ்ந்துவந்தார். வியாழன் மாலையில் ஐயாவுக்குத் தின்பண்டம் வாங்குவதற்காக 3 காசுகள் கிடைக்கும். எல்லாக் குழந்தைகளும் ஓடிப்போய் ஆவலுடன் தின்பண்டம் வாங்கி உண்டு தங்கள் வயிற்றுப் பசியை அடக்கிக் கொள்ளுவர். ஆனல் நம் ஐயாவோ நேராக அந்தக் கிறித்தவ மத குருவிடம் சென்று **'நல்ல பையன் கதை' 'மாம்பழக் கதை'** போன்ற சிறு சிறு நூல்களை ஒவ்வொரு காசுக்கு வாங்கிப் படித்துத் தம் அறிவுப் பசியைத் தீர்க்க முற்பட்டார். அப்போது ஏற்பட்ட அந்த நற்பழக்கம்தான் இன்றும்

எனக்குத் தூண்டுகோல்!

1961 ல் சிலமாதம் செங்குந்தர் உயர்நிலைப் பள்ளியில் தலைமையாசிரியராக ஐயா இருந்தார்கள். ஒருநாள் என்னை அழைத்தார். நான் செய்துவரும் வரலாற்றுப் பணிகளைப் பாராட்டினார். 'சிதம்பரனார் பூங்காவில் ஒரு பாறையில் கல்வெட்டு இருக்கிறது பார்த்து என்னவென்று சொல்' என்றார். பார்த்துப் பின்னர் பத்திரிக்கைகளிலும் வெளியிட்டோம்.

மற்றோர் நாள் 'M. & C. பிரிண்டிங் மில்லுக்குச் செல்லும் வழியில் இரண்டு கற்களில் பெரிய உருவம் இருக்கிறது பார்த்துவா' என்றார்கள். மிகச் சிறந்த நடுகல் அது. மகிமாலீசுவரம் கோயில் பற்றி ஆர்வத்துடன் கேட்டார்கள். ஈரோடு சுழற் குழுக் கூட்டங்களில் பலமுறை கல்வெட்டு, வரலாறு பற்றிப் பேசும் வாய்ப்பினை ஐயா ஏற்படுத்தித் தந்தார்கள். வெளியிடங்களுக்கு உடன் செல்லும் போது எவ்வளவோ கருத்துக்களைக் கூறுவார்கள். அவர் அனுபவம் நமக்கு மிகவும் வழிகாட்டியாக இருக்கும்.

கலைமகளில் நான்!

கலைமகள் எனக்கு நிழல் தரும் சோலை; தாகம் தீர்க்கும் குளிர்நீர்; நான் வணங்கும் அறிவாலயம்; என் நினைவில் நீங்கா இடம் பெறும் பசுமை நினைவு; ஆம் அது என் சொந்த வீடு!

நூலகத்தைப் பயன்படுத்துவேன். மாணவிகட்கு இலக்கிய வரலாற்றுணர்வைத் தூண்டச் செல்லுவேன். கண்காட்சி, கல்வித்துறை விழாக்களுக்குச் செல்லுவேன். அவர்களின் கல்வி தொடர்பான ஆய்வுக்கு உதவுவேன். எல்லாவற்றிற்கும் மேலாக அங்கு என்னைப் பணிகொள்ளும் என் மூத்த சகோதரியார் இருக்கின்றார். தலைமையாசிரியை அவர்கள்தான்! என்னைத் 'தம்பி' என்று உரிமையோடு பலரிடம் அறிமுகப்படுத்திக் கூறியதுண்டு. ஒரு கூட்டத்தில் மேடையிலேயே "கலைமகளின் செல்லப் பிள்ளை ஒருவர் உண்டு......" என்று கூறி என்னைக் குறிப்பிட்டார்கள். நான் பெற்ற பெரும்பேறு!

பலர் வெளியூரில் என்னைக் கலைமகள் கல்வி நிலையத்தில் பணிபுரிவதாக எண்ணிக் கேட்பதுண்டு. இன்னும் சிலர் கலைமகள் முகவரிக்கே எனக்குக் கடிதமும் கூட எழுதி விடுகின்றனர். (எங்கள் தலைமையாசிரியரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்கின்றேன்)

புகழ்பெறத் தோன்றினர்!

25—12—1898 அதாவது விளம்பி ஆண்டு, மாதங்களில் சிறந்த மார்கழியில் ந. சீரங்க முதலியாருக்கும் செல்லம்மாள் என்னும் அம்மையாருக்கும் நன்மகவாய் ஐயா தோன்றினர். ஐயா அவர்கள் தோன்றிய பொழுது சீரங்க முதலியார் குடும்பம் கோட்டை ஈஸ்வரன் கோயில் வீதியில் வாழ்ந்து வந்தது என்றாலும் அவர்கள் பூர்வீகம், தேசபக்தர்கள் பலரை ஈன்றெடுத்த சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த உஞ்சனை கவுண்டம்பாளையம் ஆகும்.

நல்லாசிரியர் தொடர்பு!

ஒருவரை இன்னர் என்று கூறும் கூற்று இனத்தால் ஏற்படுகிறது என்கின்ருர் வள்ளுவர். உயர்நிலைப் பள்ளியில் பயிலுங்கால் பல நல்லாசிரியர் தொடர்பு ஐயா அவர்கட்குக் கிடைத்தது.

H. A. பாப்லி வாரம் ஒருமுறை பைபிள் வகுப்பு எடுத்து நல்லுரை கூறியதையும், ஆசிரியர் சிதம்பரம்பிள்ளை மாணக்கர்களை மிகுந்த அக்கறையோடு கவனித்ததையும், தலைமையாசிரியர் விசுவாசம் அவர்களின் திறமைபற்றியும் பலமுறை ஐயா அவர்கள் புகழ்ந்து கூறியுள்ளார்.

தமிழாசிரியர் ந. சிவபாத இருதயம்பிள்ளை ஐயா அவர்கள் வீட்டில் அருகே இருந்தார். ஐயா ஏழெட்டு வயதுச் சிறுவராக இருந்தபோதே அவர் தொடர்பு ஏற்பட்டது. ஐயாவை அவர் வெள்ளிக்கிழமைகளிலும், பிற விசேட நாட்களிலும் கோயிலுக்கு அழைத்துச் செல்லுவார். திருவுருவங்களைப் பற்றி ஐயாவுக்கு விளக்கிக் கூறுவார். நாயன்மார் வரலாறுகளைப் படிக்கத் தூண்டுவார். தேவாரப் பாடல்களைக் கற்றுத் தருவார். 'அவரால் நான் பெற்ற நன்மை அனந்தம்' என்று ஐயா அவர்களே பலமுறை கூறியுள்ளார்கள்.

பிள்ளையவர்கள் ஐயாவைக் காவிரிக்கரை, கருமார்த்திக் கருப்பணன் கோயில் முதலிய பல சுற்றுவட்டார இடங்களுக்கு அடிக்கடி அழைத்துச் செல்லுவார். இன்று ஈரோடும் கருங்கல்பாளையமும் இணைந்த நகரமாகிவிட்டது. அந் நாளில் கருங்கல்பாளையம் ஒரு தனிக் கிராமம். அங்கு பெரும்பாலும் இளைஞர்கள் கூட்டத்தில் ஞாயிறுதோறும் பிள்ளையவர்கள் இராமாயணம், பெரியபுராணம் ஆகியவைகளைப் பாடம் சொல்லுவார். உடன் ஐயாவும் தவருமல் செல்லுவார். அதுமட்டுமல்ல. ஆசிரியர் புத்தகங்கள் நம் ஐயாவின் தோள்மீதுதான் ஏறிச் செல்லும்.

அக்காலத்தில் மக்களின் பொழுதுபோக்கே சமய நிகழ்ச்சிதான். ஈரோடு நகரின் பல இடங்களில் கதாகாலட்சேபங்களும், சமய சொற்பொழிவுகளும் நடக்கும். வாணியத்தெருவில் அடிக்கடி பிள்ளையவர்கள் பேசுவார்கள். மூலபாடத்தை ஐயா அவர்கள் படிக்க ஆசிரியர் அதற்கு விளக்கம் கூறுவார். அரிச்சந்திர நாடகம், இரணியன் நாடகம், தெருக்கூத்து முதலியன சிவாலயத்தின்முன் நடைபெறும். ஐயா அதனையெல்லாம் தவருமல் காண்பார்.

கூடல்மா நகரில்!

ஈரோட்டில் **'செங்குந்தர் சங்கம்'** என ஒன்று இருந்தது. ஐம்பை அப்பாவு முதலியார் என்பவர் இரவு நேரங்களில் வகுப்புக்கள் நடத்திவந்தார். அவருடன் ஐயாவும் பாடம் நடத்துவார். அதன் மூலம் சிறு தொகை கிடைத்தது. தாயார் தன் துன்பத்தையும் பொருட்படுத்தாமல் சிறு வீட்டுக்குத் தான் குடி சென்று விட்டு வீட்டு வாடகையாக வந்த ரூபாய் 18ஐயும் அப்படியே ஐயாவுக்குக் கொடுத்தார். இதனுல் ஐயா மதுரை சென்று அமெரிக்கன் கல்லூரியில் தன் உயர்கல்வியைத் தொடர்ந்தார். சகோதரியார் உதவிய பான்மையும் என்றும் நினைவு கூரத் தக்கது.

தொடர்ந்து இருப்பதைக் காணலாம். ஐயாவைக் காண்பவர்கள் எப்பொழுதும் ஒரு நல்ல நூலுடன்தான் காணமுடியுமே தவிரத் தனியாகக் காண இயலாது.

சமய, சமூக நிகழ்ச்சிகளை ஊன்றிக் கவனிப்பதில் இளமையில் ஐயா மிகுந்த ஊக்கம் காட்டினர். அக்காலங்களில் நடைபெற்ற பல்வேறு சம்பவங்களை நேரில் பலமுறை என்னிடம் விவரித்துக் கூறியதுண்டு. சரஸ்வதி பூஜை சந்தர்ப்பத்தில் முத்துக்குமாரசாமி கோயில் அருகே பாவடி மைதானத்தில் 'படைக்கலம் எடுத்தல்' சடங்கு நடைபெறும். கத்தி, ஈட்டி முதலிய படைக்கலங்களை (ஆயுதங்களை) எடுத்துக் கொண்டு ஊர்வலமாக வருவர். மூங்கில், காகிதங்கள் மூலம் தேர்செய்து பெரியவர்கள் அலகுகுத்தி இழுத்துவருவர். வருடாவருடம் இது நடைபெறும். சிறுவர்களுக்கு 'உரவறுத்தான்' (உடல் அறுத்தான்) சடங்கு நடைபெறும். கையை அறுத்து அறுத்த இடத்தில் விபூதியைத் தேய்த்து விடுவர். 5 வயது சிறுவர்களுக்குக் கூட இது நடக்கும். பிற்காலத்தில் பெரிய வீரர்களாக விளங்க இது அடிப்படைப் பயிற்சி. (கல்வெட்டுக்களில் செங்குந்தப் பெரும்படை, கைக்கோளப்படை, தெரிஞ்ச கைக்கோளப் பெரும்படை போன்ற தொடர்களை நான் கண்டிருக்கிறேன். இதுபோன்ற இளமைப் பயிற்சி மூலம் தான் பிற்காலத்தில் அவர்கள் சிறந்த வீரர்களாக முடிகிறது போலும்) இதுபோன்ற விழாக்களில் ஒட்டக்கூத்தர் பாடிய 'ஈட்டியெழுபது', 'செங்குந்தர் மெய்க் கீர்த்தி' இவைகளைப் படிப்பர். ஐயாவுக்கு இளமையிலேயே இவை நல்ல பாடம்!

அக்காலத்தில் கூடிய 'ஊர்க்கூட்டம்' பற்றியும் ஐயா கூறியிருக்கிறார்கள். 21 வயதுக்கு மேற்பட்ட செங்குந்தர் குல ஆண்மக்கள் மட்டும் இதில் கூடுவார்கள். பெரும்பாலும் வழக்குத் தீர்த்து நீதி செலுத்த இது கூட்டப்பட்டது. காரியக்காரர், பெரியதனக்காரர், நாட்டாண்மைக்காரர், சங்கோதி (கூப்பிடுபவன்) இருப்பர்.

இவர்கள் கம்பளி ஒன்று விரித்து அதன் மீது அமர்ந்தால் பொய் பேசலாகாது என்பது மரபு. எவராலும் ஊர்க் கூட்டம் போட்டு முடிவு செய்ததை ஏற்றுக் கொள்ளவேண்டும். 'அபராதம்' போடுவார்கள். பாதிக்கப் பட்டவன் 'ஆண்டவன் மாரே என்னால் தாங்காது' என்று சொல்லிக்கொண்டே வருவான். பெரும்பாலும் 'குத்தம்' (அபராதம்) $1\frac{1}{4}$ ரூபாய் இருக்கும். செலுத்த மறுப்பவனை 'சாதிக்கட்டு' செய்வார்கள். பாவடியில் அவன் பாவோடக் கூடாது. இங்கு நீதி கிடைக்கவில்லை என்றால் அக்கரையில் (திருச்செங்கோடு) ஊர்க்கூட்டம் கூட்டலாம். அங்கும் நீதி கிடைக்காவிட்டால் 'தலைநாடு' காஞ்சிபுரம் சென்று '18 நாடு' கூட்ட வேண்டும். அதுதான் அவர்கள் உயர் நீதிமன்றம் ஆகும்! இம் முறை இருந்தபோது மக்கள் ஒழுக்கமாகப் பயந்து வாழ்க்கை நடத்தினர்கள். ஐயா அவர்கள் இளமையில் நடந்த இதுபோன்ற நிகழ்ச்சிகளை இப்போது நடைபெறும் நிகழ்ச்சிகளுடன் அடிக்கடி ஒப்பிட்டுக் கூறுவார்கள்.

திண்ணைப் பள்ளிக்குப் பின்னர் லண்டன் மிஷன் பள்ளியில் தன் உயர் கல்வியை ஐயா தொடர்ந்தார்.

காங்கிரஸ் கட்சியின் கோவை மாவட்டச் செயலாளராகவும், ஈரோடு நகரக் காங்கிரசின் தலைவராக இரண்டுமுறையும் ஐயா இருந்திருக்கின்றார்கள். அம் முறையில் ஐயா, மோதிலால் நேரு, சரோஜினி தேவி, C. F. ஆண்ரூசு, நேருஜி போன்ற தேசியத் தலைவர்கள் பலருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பினைப் பெற்றார். அனைத்துத் தலைவர்களுடனும் தொடர்பு உண்டு. சுதந்திரப் போர்க் காலத்தில் சிறை செல்லும் வாய்ப்புத் தனக்குக் கிடைக்கவில்லையே என்று ஐயா பெருங்குறையாகக் கூறுகின்றார்கள்.

அருள்நெறித் திருப்பணி இயக்கம்!

பெரியாரின் பிள்ளையார் உடைப்பு இயக்கம், கடவுள் மறுப்பு இயக்கம் இரண்டும் நாட்டில் எப்படிக் குழப்பத்தை ஏற்படுத்தும் என்பதை எடுத்துக்காட்டி பக்தி உணர்ச்சியை ஊட்டி சமய வளர்ச்சிக்குத் துணைபுரிய அருள்நெறி இயக்கத்தைத் தமிழ்நாட்டில் தோற்றுவித்தவர்களுள் ஐயாவும் ஒருவர். தவத்திரு. குன்றக்குடி அடிகளாரைத் தலைவராகக் கொண்டு ஏற்படுத்தப்பட்ட அந்த இயக்கத்தின் மாநிலப் பொதுச் செயலாளராக திரு. சா. கணேசன் அவர்களுடன் இணைந்து பணி புரிந்தார்கள். தமிழ்நாடெங்கும் பல கிளைகள் தோற்றுவிக்கப்பட்டன. உயர்நிலைப் பள்ளிகள், பயிற்சிப் பள்ளிகள், புண்ணிய இல்லங்கள் பல தொடங்கப்பட்டன. ஈரோட்டில் உள்ள அருள்நெறித் திருப்பணி மன்றப் பயிற்சிப் பள்ளியும், புண்ணிய இல்லமும் அப்பொழுது ஏற்படுத்தப்பட்டவைகளே.

எழுத்துத் துறையில்!

பள்ளி மாணவர்கட்குப் பயனுள்ள பாடநூல்கள் பல ஐயா எழுதியுள்ளார்கள். சமயம், அறிவுரைக் கட்டுரைகள் ஐயா எழுதியவை பல. கற்றோர் சிலர் கோயிலுக்குப் போகாமலேயே கடவுளை வணங்க முடியாதா? கோயிலில்தானா கடவுள் இருக்கிறார் என்று கேட்ட கேள்விகட்கு விடையாக 1964-ல் 'கோயிலுக்குப் போக வேண்டுமா?' என்ற சிறு ஆராய்ச்சி நூலை எழுதினார். ஈரோடு நகர மக்களுக்கு நல்ல கருத்துக்களை எடுத்தியம்ப அவர்களை நகரின் நற்குடி மக்களாக்க 'நகரமித்திரன்' என்ற வார இதழைத் தொடங்கினார். மாணவ, மாணவிகள் மொழி, சமயம், பண்பாடு, நன்னெறி இவைகளை அறியவேண்டி குறள், திருமந்திரம், புறநானூறு போன்ற பற்பல நூல்களிலிருந்து அவர்களுக்குப் புரியும்வண்ணம் எளிமையானவற்றைத் திரட்டித் தொகுத்து வெளியிட வேண்டும் என்னும் பேரவாவினை ஐயா அவர்கள் கொண்டுள்ளார்கள். திருமந்திரம் இரண்டுமுறை கலைமகள் கல்வி நிலைய வெளியீடாக வந்துள்ளது. அதில் இரண்டாம் பதிப்பைக் குறிப்புரையுடன் தொகுத்துப் பதிப்பிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. காந்தி நூற்றாண்டு விழாவின் போது பள்ளி மாணவ, மாணவிகட்கு எளிய முறையில் அடிப்படையான காந்தீயத் தத்துவங்களை ஊட்டச் சிறுசிறு வெளியீடுகள் பல வெளியிட்டார்கள். மாணவர் அதனை ஆர்வத்துடன் ஏற்றுப் படித்துப் பயன்பெற்றார்கள் என்பதனை நேரிலேயே நான் அறிவேன்.

நகராட்சித் தலைவராக!

ஐயா அவர்கள் ஒன்பதாம் வட்ட நகர்மன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு ஈரோடு நகராட்சித் தலைவராகவும் மூன்றாண்டுகள் (1952-55) இருந்துள்ளார்.

கல்லூரியில் விடுதிக் கட்டணம் மாதம் 12 ரூபாய். கல்லூரிச் சம்பளம் 5 ரூபாய்; மீதி ஒரு ரூபாய்தான் ஐயாவின் செலவுக்கு! விடுதியில் சைவப் பகுதியில் ஐயா இருந்தார்கள். இளமையில் புலால் உணவை நீக்குவதாகத் தன் ஆசிரியரிடம் சபதம் செய்து அதனை வாழ்நாள் முழுவதும் கடைப்பிடித்து வருகின்றார். விடுதியில் ஏற்பட்ட பல்வேறு தொல்லைகட்கிடையேயும் 1921-ல் பி. ஏ. தேர்ச்சி பெற்றார்கள்.

ஆசிரியப் பணி!

ஐயா, பயிற்சி பெறாத ஆசிரியராக மூன்றாண்டுக் காலம் மாசன உயர்நிலைப் பள்ளியில் பணிபுரிந்தார். பின் 1927-ல் எல். டி. பட்டம் பெற்று 1928 முதல் 1931 வரை சிவகங்கை அரசர் உயர்பள்ளியில் தலைமையாசிரியராகப் பணி புரிந்தார். இக்காலத்தில் தான் அருமைத் தாயார் காலமானார்கள். சிவகங்கையிலிருந்து ஈரோடு வந்து மாசன உயர்நிலைப் பள்ளியின் தலைமைப் பொறுப்பினை ஏற்றார்கள்.

வணிகத் துறையில்!

1942-ல் ஐயா அவர்கள் நூல், ஜவுளி வாணிகத்தை மேற்கொண்டார். ஈரோட்டிலும் புதுக்கோட்டையிலும் கடைகளைத் தொடங்கினர். 15 ஆண்டுகள் சீருடனும் சிறப்புடனும் நடத்தினர். நூல், ஜவுளி கட்டுப்பாடு இருந்த காலத்தில் அரசாங்கத்தாரால் நூல் வழங்குவதற்குப் பொறுப்பாளராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார் (State Nominee for Yarn). வளம் பலவும் தந்த வணிகத் துறையைக் கல்வி வளர்ச்சியின் பொருட்டுக் கைவிட்டார்கள்.

சுதந்திரப் போரில்!

ஐயா அவர்கள் அமெரிக்கன் கல்லூரியில் படிக்கும்போதே பரலி சு. நெல்லையப்பர் வெளியிட்ட 'தேசீய கீதம்', 'முரசுப் பாட்டு' ஆகியவைகளை வாங்கிப் படிப்பதில் மிக ஈடுபாடு கொண்டார். மாணவர்கள் கல்லூரி விடுதியில் தேசீயப் பாடல்களை உரக்கப் பாடுவார்கள். விடுதிக் காப்பாளருக்கு இது தெரியவே தடை உத்தரவு போட்டாராம். ஆனால் பாடுவோம் என்று ஐயா தலைமையில் மாணவர் கூடிப் பாடுவார்கள். சில பேராசிரியர்களும் மாணவர் எழுச்சிக்குத் துணை நின்றனர்.

1921-ல் பி. ஏ. பட்டம் பெற்று ஈரோடு வந்ததும் ஐயாவை நம்பித்தான் குடும்பம் இருக்கிறது என்ற நிலை தெரிந்தும் சுதந்திரப் போரில் குதித்தார். தேடி வந்த அரசாங்கப் பணியைக்கூட உதறித்தள்ளினர். அப்போது பெரியார் ஈ. வெ. இராமசாமி அவர்கள் தலைமையில் பெருந்தொகை போட்டுக் கதர்த் தொழில் நடைபெற்று வந்தது. பெரியார் சிறை செல்லவே அப்பெரும் பொறுப்பு ஐயாவிடம் ஒப்படைக்கப்பட்டது. பின்னர் கதர் இயக்கம், கள்ளுக் கடை மறியல், அந்நிய நாட்டுத் துணி எரிப்பு முதலியவைகளில் ஐயா பங்கு கொண்டார்.

1921-ல் பாரதியார் ஈரோடு வந்த காலத்தில் அவருடன் நெருங்கிப் பழகி இருக்கிறார். சுதந்திர இயக்க காலத்தில் மகாத்மா காந்தியடிகளோடு ஈரோட்டிலிருந்து திருச்செங்கோடு போய் அவருக்குப் பணிவிடை செய்யும் பேற்றினை ஐயா பெற்றுள்ளார்கள்.

ஐயா காலத்தில்தான் நகரில் குடிநீர், சாலை வசதிகள் மிகப் பெருகின. கோட்டை, கைக்கோளன் தோட்டம், பட்டக்காரர் தோட்டம் ஆகிய பகுதிகளில் ரூபாய் 1,98,000 செலவில் குடிநீர் வழங்கப் பிரிவுக் குழாய்களை அமைத்தார்கள். குடிநீர் இறைப்பு நிலையத்தில் திறன் குறைவாக இருந்த பல கருவிகளை நகராட்சி நிதியிலிருந்து புதுப் பித்தார்கள். 20-2-1955 அன்று முன்னாள் அமைச்சர் திரு. எஸ். எஸ். இராமசாமிப் படையாச்சி அவர்களைக் கொண்டு திறப்பு விழாவும் செய்தார்கள். 1000 புதிய குழாய் கள் அமைக்கப்பட்டன. 15 ஆண்டுகளாக நாள்தோறும் வழங்கும் நகரின் நீர் அளவு 5 லட்சம் காலனை இருந்துவந்தது. ஐயா அவர்களின் மூன்றாண்டு நிர்வாகத்தில் முறையே அது 6 லட்சம் காலனைவும் பின் 7 லட்சம் காலனைவும் உயர்த்தப்பட்ட பெருமையும் சாதனையும் பாராட்டத்தக்கவை. சாலைகளில் மரங்கள் வைக்கப்பட்டன. பிரசவ விடுதி கட்டப்பட்டது. நகரசுத்தி ஊழியர்கட்குக் குடியிருப்பு ஏற்படுத்தப் பட்டது. பல ஆண்டுகள் நகராட்சி நிர்வாகம் எடுத்துக் கொள்ளாத 30 புதிய தெருக்களை எடுத்துப் புதிதாக அமைத்தனர்.

பொதுப்பணியில் ஆர்வம்!

ஈரோடு திருநகர் குடியிருப்பின் தலைவராக 9 ஆண்டுகள் இருந்துள்ளார்கள். அதன் வளர்ச்சிக்குப் பெருந்துணை புரிந்தார்கள். ஐயா அவர்கள் காலத்தில்தான், சாலை, விளக்கு, குழந்தைகள் விளையாடுமிடம் அமைக்கப்பட்டன.

ஈரோடு சுழற்குழு தொடங்கியதிலிருந்து 15 ஆண்டுகள் உறுப்பினராகவும் ஒருமுறை தலைவராகவும் இருந்துள்ளார். சுழற்குழு சார்பில் குழந்தைகள் விளையாட்டு அரங்கினை போலீஸ் குடியிருப்பில் ஏற்படுத்தக் காரணமாக இருந்தார்கள். சிவகங் கையில் இருந்த பொழுதும் பல பொதுப்பணிகளில் ஈடுபட்டார்கள். SPCA தலைவ ராகவும், கூட்டுறவு அர்பன் பாங்குத் தலைவராகவும், பெஞ்சு கோர்ட் தலைவராகவும் இருந்துள்ளார்கள். இன்றும் ஈரோட்டு நற்காரியங்கள் அனைத்திற்கும் ஐயா அவர்கள் பெருந்துணை செய்து வருகிறார்கள்.

கல்வித்துறை நிபுணர்!

டாக்டர் அழகப்ப செட்டியார் தலைமையில் நிறுவப்பட்ட ஆரம்பக் கல்வி சீர்திருத்தக் குழுவின் 6 உறுப்பினர்களில் ஐயாவும் ஒருவர். அதன் சார்பில் இந்தியா முழுவதும் சென்று டாக்டர் ஜாகீர் உசேன், காகா கலேல்கர், அரிய நாயகம் ஆகியோருடன் கருத்துப் பரிமாற்றம் செய்து கொண்டுள்ளார். நகரில் சாரண இயக்கம் நன்கு வளர்ச்சிபெற ஐயா அவர்கள் பேருதவி புரிந்துள்ளார். முகாமா, கூட்டமா, மாநாடா, கருத்தரங்கா, ராலியா, நடத்துவதற்குப் பள்ளியையும் கொடுப்பார்! பொருள் உதவியும் செய்வார்.

பாகிஸ்தான் படையெடுப்பின் போது கிராமம் கிராமமாகச் சென்று நாட்டு நிலை பற்றிப் பேசியும், மாணவர்களைக் கொண்டு பல நிகழ்ச்சிகளை நடத்தியும் மக்களுக்கு நாட்டுப்பற்று ஏற்படுத்தியதோடமையாமல் யுத்தநிதிக்கும் ஏராளமாக மக்களை உதவுமாறு செய்தார். பலமுறை கிராமங்களுக்கு உடன் செல்லும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

ஈரோட்டில் செங்குந்தர் உயர்நிலைப் பள்ளியைத் தொடங்கிய பெருமை ஐயா அவர்களையே சாரும். பல ஆண்டுகள் அதன் புரவலராகவும் இருந்துள்ளார்கள். சென்னிமலை, குருசாமிபாளையம் போன்ற ஊர்களில் செங்குந்தர் உயர்நிலைப் பள்ளி தோன்ற மூல காரணமாக இருந்துள்ளார்கள்.

கலைமகளின் தந்தை!

தம்மை ஆளாக்கிய தாயாரும் தங்கையும் செய்த தியாகத்தினை எண்ணிப் பார்த்த ஐயா அவர்களுக்குச் செய்யும் கைமாருகப் பெண் குலத்தின் நன்மைக்காகக் கலைமகள் கல்வி நிலையத்தினை உருவாக்கினர். *1945* ஆம் ஆண்டு ஜுலையில் *77* குழந்தைகளையும் இரண்டு ஆசிரியைகளையும் கொண்டு இந் நிலையத்தை ஆரம்பித்தார். *1957* ல் முதல் முறையாக S. S. L. C. தேர்வுக்குப் பெண்கள் சென்றனர். இன்றோ *3,401* குழந்தைகள் நற்கல்வி பெறுகின்றனர். அவர்களில் *289* பேர் விடுதியில் தங்கியுள்ளனர். *104* ஆசிரியைகள் கற்பிக்கும் திருத்தொண்டில் ஈடுபட்டுள்ளனர்.

கலைமகள் வாழ்க!

அறிஞர் பெருமக்கள் பலர் **'அறிவாலயம்'** என்றும், **'கலைக்கோயில்'** என்றும், **'மாதிரிப் பள்ளி'** என்றும், **'முத்திரை தாங்கிய பள்ளி'** **'தென்னகத்துச் சாந்திநிகேதன்'**, என்றெல்லாம் புகழ்கின்றனர். ஆம்! கலைமகள் கல்விக்கு அரசிபோல், இப்பள்ளியும் 'கலைமகள்' பெயரைப்பெற்று ஓங்கியுயர்ந்து அரசிபோல நிற்கின்றது. கலைமகள் ஒரு நந்தா தீபம்! அதன் ஒளி அறியாமை இருளை நீக்கி அறிவொளியைப் பரவச் செய்கிறது! என்றும் அது சுடர்விட்டு ஓங்க எல்லாம் வல்ல இறையருளை வேண்டுகின்றேன்.

ஐயாவின் அறிவுரை!

'நாட்டுப்பற்று இன்றைய மாணவ மாணவிகளிடம் அதிகம் காணப்படவில்லை. கடுமையான தேக உழைப்பில் ஆர்வம் இல்லை. ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை என்பதை உள்ளத்தில் கொண்டொழுக வேண்டும்' என்று மாணவ, மாணவிகட்கு அறிவுரை கூறுகிருர் ஐயா.

'ஆசிரியர்கள் கடவுளால் அந்தத் தொழிலுக்கு அழைக்கப்பட்டவர்கள். எத்தகைய மாணவர்களையும் திருத்த முடியும். தாங்கள் ஒரு இலட்சியத்தைக் கைக்கொண்டு அதன்படி நடக்கவேண்டும். 'நிஷ்காம்ய கர்ம' யோகிகளாக இருக்க வேண்டும், என்பது ஆசிரியர்க்கு ஐயாவின் உரை. 'பிறக்கும்போது நீ அழுதாய் மற்றவர்கள் சிரித்தார்கள். இறக்கும்போது நீ சிரி மற்றவர்கள் அழட்டும்' என்பதே ஐயாவின் லட்சியம்.

'குணம் என்னும் குன்றேறி நிற்கும்' ஐயா அவர்களை வாழ்த்தும் வயது எனக்கு இல்லை. ஆனல் அவர் இன்னும் நீண்ட நெடுங்காலம் வாழ்ந்திருந்து இந்நகர்க்கும், நாட்டுக்கும் தன் நற்றொண்டைத் தொடர்ந்து செய்ய இறைவன் அவருக்கு உடல் நலத்தையும், வலிமையையும் அளிக்கவேண்டும்என்ற என் பணிவான வேண்டுகோளை இறைவன் முன்னிலையில் சமர்ப்பித்துக் கொள்கின்றேன்.

வீட்டில் சமைக்கவும், குளிக்கவும், சாப்பிடவும், தூங்கவும் தனித்தனி அறைகள் இருப்பன போலவும், நகரத்தில் சாமான்கள் வாங்கவும், நாடகம், சினிமாக்கள் பார்க்கவும், வழக்காடவும், தனித்தனி இடங்கள் அமைந்திருப்பன போலவும், இறைவனை மக்கள் வழிபடக் கோவில்கள் இன்றியமையாதவைகளாய் இருக்கின்றன. அந்தந்த இடங்களுக்குப் போகும் போது நமது மனமும், செயலும் அந்தந்த வேலையில் ஈடுபடுகின்றன. கோவிலைத் தவிர உள்ள மற்ற இடங்கள் எல்லாம் மனம் ஒருமைப்பட்டு இறைவனை வழிபடுவதற்கு ஏற்ற இடமாக இருப்பதில்லை. உலகப் பற்றினின்றும், கவலையினின்றும் நீங்கிச் சிறிது நேரமாவது நாம் பரம்பொருளினிடம் மனதைச் செலுத்துமிடம் கோவிலேயன்றி வேறு யாதுளது? வீட்டிலே கடவுள் வழிபாட்டிற்குத் தனி இடமும், தனி நேரமும் ஒதுக்கிவைக்க எல்லோராலும் முடியுமா?

*"மனம், வாக்கு, காயங்களுக்கு எட்டாத இறைவனை, இம்மூன்றின் துணை கொண்டே அடைய வேண்டும். எனவே தான் இறைவன் ஆலயத்துள் நம் பொருட்டு எழுந்தருளியுள்ளான்.

பூகோளம் கற்பதற்குத் தேசப்படம் எவ்வளவு இன்றியமையாததோ, அன்பர்களுக்கு ஆலய வழிபாடும் அவ்வளவு இன்றியமையாதது. ஊர்களும், ஆறுகளும், மலைகளும் எங்கெங்கே எப்படியமைந்திருக்கின்றனவென்று, தேசப் படத்தின் துணை கொண்டு தெரிந்து கொள்ளுகிறோம். பின்பு நாம் அவ்விடங்களுக்குச் சென்று நேரில் பார்க்கும் போது அவைகளை உள்ளபடி காண்கிறோம். நட்சத்திர மண்டலங்களைப் படங்கள் காட்டுகின்றன. ஆனால் அகண்டாகாரத்தில் விரிந்தோடும் நட்சத்திர மண்டலங்கள் படங்களில் அடங்குபவையல்ல; நாம் நட்சத்திர மண்டலங்களுக்குப் போகவும் முடியாது. ஆலய வழிபாட்டைப் பற்றிய உண்மையும் அப்படித் தான். நம் சிற்றறிவைக் கொண்டு கடவுளை ஒரு சிறிது அறிந்துகொள்ளலாம். ஆனால் தெரியாத பகுதியோ எல்லையில் அடங்காதது. பரமனை எண்ண எண்ண, அறிய அறிய மனது அகண்டாகாரத்தில் விரிந்தோடி பரத்தின்பால் கலந்து விடும். தேசத்தின் படமும், வானத்தின் படமும் நம் பொருட்டு அமைக்கப் பெற்றவை. ஆலயத்தினுள் மூர்த்தியாகத் தெய்வம் எழுந்தருளியிருப்பதும் நம் பொருட்டே".

சைவ சமயத்திற்குப் புத்துயிர் கொடுத்த திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நான்கு மகான்களும் இறைவனைக் கண்ணாரக் கண்டவர்கள், இறைவன் திருவருள் கைவரப் பெற்றவர்கள். இறைவனது அருள் ஒளியில் கலந்தவர்கள். அவர்கள் இறைவனை அல்லும் பகலும் தம் உள்ளக் கோவிலில் வைத்து வழிபட்டு வந்தவர்களென்பதை, அவர்கள் அருளிய அருள் வாக்குகளே நமக்கு நன்றாகக் காட்டுகின்றன. 'இமைப் பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான்' என்கிறார் மணிவாசகப் பெருந்தகை. 'நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன் நினையாதொருபோதுமிருந்தறியேன்' என்று பாடுகின்றார் திருநாவுக்கரசர். 'எத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்து உன்னை' என்று அருளுகின்றார் சுந்தரர். 'உள்ளம் கவர்கள்வன்' என்கின்றார் திருஞானசம்பந்தர்.

* தவத்திரு. சித்பவானந்த சுவாமிகள்

சிறப்புக் கட்டுரை

கோவிலுக்குப் போக வேண்டுமா?

திரு. சீ. மீனாட்சிசுந்தரனார் அவர்கள்

அறிவிற் சிறந்த ஔவையார் 'ஆலயந்தொழுவது சாலவும் நன்று' என்று அருளிச்செய்தது எக்காரணம் பற்றி? அதனைச் சிறிது அறிதல் வேண்டும். கோவில் என்ற சொல்லுக்கு இறைவன் இருப்பிடம் என்பது பொருள். ஆலயம் என்பதற்கு கடவுளின் திருவடிகளில் உயிர்கள் பொருந்தியிருப்பதற்கு ஏற்ற இடம் என்பது பொருள். ஊர்கள்தோறும் கோவில்கள் வேண்டும். கோவில்கள் இல்லாத ஊர் சிறப்பில்லாத ஊர். 'கோவிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்பது நமது பண்டைப் பழமொழி. எங்கும் நிறைந்துவிளங்கும் கடவுளுக்கு கோவில் எதற்கு? என்று சிலர் கேட்கின்றனர்.

வானொலி நிலையத்திலிருந்து பாடும்போது வெளி வரும் மின்சாரக் காந்த அலைகள் ஒரு விநாடிக்கு 1,86,000 மைல் வேகத்தில் வானில் பரந்து பாய்ந்தாலும், ஒலி வாங்கியின் உதவியின்றி அப்பாடலை நாம் அறிந்துகொள்ளவோ, அனுபவிக்கவோ, முடிகின்றதா? பூமிக்கடியில் நீர் எங்கும் வியாபித்திருந்தாலும் கிணறு தோண்டித்தானே அதை நாம் வெளியே கொண்டு வந்து பயன் படுத்துகிறோம். மின்சாரம் ஆகாயம் முழுவதும் வியாபித்திருந்தபோதிலும் அதனை ஒரு மின்சார நிலையத்தின் மூலமாகத்தானே மக்கள் பயன் படுத்தவேண்டி இருக்கிறது? பசுவின் உடல் முழுவதிலும் பால்சத்து வியாபித்து இருந்தாலும் அதன் மடியின் வழியாகத்தானே அப்பசு பால் சுரக்கின்றது. அதுபோலத் தான், கடவுள் அங்கு இங்கு எனாதபடி எங்கும் பிரகாசமாக வியாபித்து இருந்தபோதிலும் கோவிலுள் தான் சிறப்பாக வெளிப்பட்டு நின்று மக்களுக்கு அருள் புரிகின்றார். ஆதலினாலே தான் 'ஆலயந்தொழுவது சாலவும் நன்று' என்று ஔவைப் பிராட்டியார் அருளிச் செய்துள்ளார்.

▶ ஐயா அவர்களின் பாராட்டு விழா மலரில் அவர் எழுத்தோவியம் ஒன்று இடம் பெற வேண்டும் என்றுவிரும்பி இதனை அவர் அனுமதியுடன் சேர்த்துள்ளோம்.

இறைவனை அகத்தும் புறத்தும் கண்ட இவர்கள், தங்கள் மண்ணுலக வாழ்வை எல்லாம் திருத்தலங்களுக்குச் சென்று, கோவில்களில் இறைவனை வழி பட்டுப் பாடுவதிலேயே கழித்தனர் என்பது பொய்யா? சிவனடியார் திருக் கூட்டத்தோடு தமிழ் நாடு முழுவதும் நடந்து சென்று தமிழகத்தைச் சிவலோக மாக்கியது ஆலய வழிபாட்டின் வாயிலாகத்தானே. திருக் கோவில்களிலே இறைவன் திருமுன்பு நின்று அருளிச் செய்த பாடல்கள் தாமே தேவார திருவாசகங்கள். சிவசோதியிலே கலக்கும் பெரும் பேறு பெற்ற நால்வர் பெருமக்களே கோவில் வழிபாட்டின் பெருமையை உணர்ந்து நமக்கு வழிகாட்டியிருக்கும்போது, நாம் அவர்கள் சென்ற வழியிற் செல்வதே நமக்கு அறிவுடைமையாகும். இது பற்றியே 'நாலுபேர் நடந்த வழி நட' என்ற பழமொழியும் எழுந்தது.

'சார்ந்ததன் வண்ணமாகும் உயிர்' என்பது அன்றும் இன்றும் யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மை. சதாகாலமும் சீட்டாடுவோர் அதே பைத்தியமாக இருப்பதையும், சினிமாப் பித்தர்கள் 'க்யூ' வரிசையில் மணிக் கணக்காக நிற்பதையும், நடை உடை பேச்சு சிரிப்பு முதலியவற்றில் சினிமா நட்சத்திரங்களைப் பின்பற்று வதையும், தாழ்ந்த குணத்தினரோடு பழகுவோரும், தகாத நூல்களைப் படிப்போரும் பாழாவதையும் நாம் எங்கும் பார்க்கின்றோம். அவ்வாறே தூய உள்ளத்தோடு கோவி லுக்குச் சென்று இறைவனை வழிபடுவோர் அன்பும், அருளும் நிறைந்து விளங்குவர் என்பதில் ஐயமுண்டோ?

ஒவ்வொரு எண்ணத்திற்கும் நிறமுண்டு, வடிவமுண்டு, பேராற்றலுண்டு என்று இன்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர். அகக்கண் காட்சியுடையோர் இது குறித்து எழுதிவைத்துள்ள நூல்களில் (Thought Forms by C. W. Leadbeater) பக்திக்கு நீல நிறமும், அறிவுக்கு மஞ்சள் நிறமும், அன்புக்கு ரோஸ் நிறமும், கோபத் திற்கு இரத்தச் சிவப்பும், வெறுப்புக்கும் பொறாமைக்கும் கருமை நிறமும் நுண் ணிடம்பிலிருந்து வெளிப்படுவதாகக் கூறுகின்றனர்.

> "தீயாரைக் காண்பதுவும் தீதே, திருவற்ற
> தீயார்சொற் கேட்பதுவுந் தீதே"
>
> "நல்லோரைக் காண்பதுவும் நன்றே, நலமிக்க
> நல்லோர்சொற் கேட்பதுவும் நன்றே"

என்பன நன்கு சிந்திக்கத்தக்க அறிவுரைகள். ஆலய வழிபாட்டிற்கு வரும் அடியார் களின் தூய எண்ண அலைகள் நம் நுண்ணுடம்புகளைத் தொட்டு, அவைகளைத் தூய்மை யாக்கும். மகான்களின் மன உடம்பு பல மைல் தூரம் வியாபகம் உடையதாக இருக்கும் என அகக்கண் திறக்கப் பட்டோர் கூறுகின்றனர். மணிவாசகர் "அடி யார் நடுவுள் நானிருக்கும் அருளைப் புரியாய்" என்று இறைவனை வேண்டுகின்றார். 'தொண்டரோடு கூட்டு கண்டாய்' என்று தாயுமானவர் பாடுகின்றார். நம்நாட்டில் வெளியேகூடும் கூட்டம் எல்லாம் தெருக்கூட்டமாகவும், திருக்கோவிலில் கூடும் கூட்டமே திருக்கூட்டமாகவும் கருதப்பட்டு வருகின்றது.

பூமியின் ஈர்ப்புச்சக்தி (Gravity) யைக்காட்டிலும் அதிக சக்தி வாய்ந்தது மனத்தின் ஆற்றல் என்பதை ஜெ. பி. ரைன் (Reaches of mind by J. B. Rhyn) என்பவர் 'மன ஆற்றலின் எல்லை' என்ற நூலில் காட்டியுள்ளார். ஜடசக்திகளைவிட மனோசக்தி அதிக வலிமையுடையது என்பதை ட்யூக் பல்கலைக் கழகத்தினர் (Duke University) ஆராய்ச்சியின் மூலம் நிரூபித்துள்ளார்கள். எனவே நம் மனம் தூய்மைப்பட வேண்டுமானல் அதனைத் தூய்மை மனமுடையோர் கூடும் கோவிலிலன்றி வேறு எங்கு பெறமுடியும்?

மண வீட்டின் மங்கல ஒலி மனத்தில் மகிழ்ச்சியையும், இழவு வீட்டின் அழுகையொலி சோகத்தையும் ஊட்டுவது நமது அனுபவம். ஒரு சினிமாக் கொட்டகையில் புறத் தூய்மையையோ அகத் தூய்மையையோ எதிர்பார்க்க முடியாது. புகை பிடிக்கும் நாற்றமும், நூற்றுக்கணக்கான பேர் விடும் நச்சு மூச்சும் உடலைக் கெடுக்க, காமக்காட்சிகளும், இழிந்த பாடல்களும் உள்ளத்தைக் கெடுக்கின்றன. கோவிலிலோ அன்பர்கள் இறைவனை வாழ்த்தும் வாழ்த்தொலியும், கற்பூரம், ஊதுபத்தி, நறுமலர் ஆகிய இவைகளின் நறுமணமும், மூர்த்திகளின் திருவுருவப்பொலிவும் நம்மைப் பரவசப் படுத்துகின்றன. திரிகரண சுத்தமும் ஏற்படுகின்றது.

டாக்டர் ப்ருன்லர் (Dr. Brunler) என்ற பிரெஞ்சு தேசத்து விஞ்ஞானி ஆல்பஸ் மலையிலிருந்தும், இமயத்திலிருந்தும் ஒரே தன்மையை உடைய இரண்டு கற்களைத் தனது பயாமீட்டர் (Biometer) என்ற கருவியில் வைத்துச் சோதித்துப் பார்த்து இமயத்தின் கல் ஆல்பஸின் கல்லைவிட 300 மடங்கு அதிகச் சக்தி வாய்ந்தது எனக்கண்டார். ஒவ்வொரு பொருளும் தனக்கு இயற்கையாய் உள்ள அலைகளை (Radiation) தன்னைச் சுற்றி ஓயாது பரப்பிக் கொண்டேயிருக்கும். எனவே இமயத்திலிருந்து பாய்ந்து வரும் அலைகள் இந்தியா முழுவதிலும் வியாபிக்கின்றது என்று கூறுகிறார். பார்வைக்கும், புற ஆராய்ச்சிக்கும் ஒரே மாதிரியுள்ள இரண்டு கற்கள் அகச் சக்தியிலே 300 மடங்கு வித்தியாசமுடையனவாக இருப்பதை 1948-ல் இந்தியாவுக்கு வந்த டாக்டர் ப்ருன்லர் தம் கருவியின் மூலம் காட்டினரெனில், ஆகம விதிப்படி திருக்கோயில்களில் எழுந்தருளப் பண்ணியுள்ள மூர்த்தங்கள் சிலர் எண்ணுவது போல வெறும் கற்களல்ல; அவை பெரிய மின்சார டைனமோக்கள். யந்திர ஸ்தாபனமும், பிராணப் பிரதிஷ்டையும், செய்யப்பட்டுள்ள மூர்த்தங்கள் தங்கள் அனுக்கிரக சக்தியை இடைவிடாமல் பரப்பிக் கொண்டேயிருக்கின்றன. அவை வேண்டுவோர் வேண்டியவற்றை வேண்டியபடியே ஈயவல்ல ஆற்றல் வாய்ந்தவை.

ஆலயங்களில் நடைபெறும் பூஜைகள் இந்த பேட்டரிகளினின்றும் (திருவுருவங்கள்) வந்தோடும் ஆற்றலை ஈடுகட்டுகின்றன. எனவே மாசு மறுவற்ற சிந்தையோடும், அருள் வேட்கையோடும் திருக்கோவில்களுக்குச் செல்லுவோர் இம்மை, மறுமைப்பேறுகளை எளிதில் பெறலாம் என்பதில் சிறிதும் சந்தேகம் கொள்ள வேண்டியதில்லை. கோவிலில் ஈஸ்வர நாமசங்கீர்த்தனம் நடைபெறும்போது அங்கு அற்புதமான வர்ணங்களோடு பற்பல வடிவங்கள் உண்டாகின்றன. இவைகள்

கூடியுள்ள அன்பர்களின் சூட்சும உடல்களைத் தூய்மைப்படுத்துகின்றன. மனதிற்குச் சாந்தியையும் அளிக்கின்றன

ஆலயங்கள் அருள் நிலையங்களாக இருப்பதோடு கூட, கலைக் கூடங்களாகவும் காட்சியளிக்கின்றன மதுரை, இராமேஸ்வரம், காஞ்சி, தஞ்சை, சுசீந்திரம் முதலிய ஸ்தலங்களில் உள்ள கோவில்கள் கலைக்கருவூலங்கள். அங்குள்ள சிற்பக்கலைக்கு ஈடு உலகில் வேறு எங்கேனும் உண்டா? வானளாவிய கோபுரங்களின் வனப்புத்தான் என்னே! நடராஜ மூர்த்ததைச் சிருஷ்டித்த பெருமை தமிழனுக்கல்லவா உண்டு?

ஓவியமும், காவியமும், நாடகமும், நாட்டியமும், இசையும், சிற்பமும் எழுந்ததும், வளர்ந்ததும் நம்முடைய கோவில்களில் அல்லவா? நம் நாட்டைக் காணவரும் அயல்நாட்டு அறிஞர்கள் நம் கோவில்களைக் கண்டு மெய்மறந்து நிற்கின்றனர். எத்தனை அரசர்கள், எத்தனை கலைஞர்கள், எத்தனை அன்பர்கள், எத்தனை ஆண்டுகள் கோவில் திருப்பணியில் ஈடுபட்டிருந்திருப்பார்கள்! சிந்தித்துப் பாருங்கள். மூவேந்தர்களின் அரண்மனைகள் மண்ணோடு மண்ணாய்ப் போயின. ஆனால் அவர்கள் எடுத்த திருக்கோவில்கள் நம் நாட்டை அலங்கரிப்பதோடு, சிறந்த அருள் நிலையங்களாகவும் விளங்குகின்றன. எகிப்து, ரோம், கிரீஸ், பாபிலோன் முதலிய பழம் பெருமை படைத்த நாட்டின் கோவில்கள் இன்று பாழாகி விட்டன. அங்கு வழிபாடு நடப்பதில்லை. அக்காலத்திய மக்கள் வழிபட்ட உருவங்கள் இன்று கண்காட்சி சாலையில் வைக்கப்பட்டுவிட்டன. ஆனால் நம் நாட்டில் கோவில்கள் இறைவன் உறைவிடமாகவும், மனம் இறைவனிடத்தில் லயிக்கும் இடமாகவும், பக்தியோடு வழிபாடு செலுத்தும் அருள் நிலையங்களாகவும் இருப்பதை எண்ணியெண்ணி இறும்பூதெய்த வேண்டும். கோவில்களைக் கட்ட நம்மால் முடியாவிடினும், நம் முன்னோர்கள் கட்டி நமக்குக் கொடுத்துள்ள கோவில்களைப் பராமரிக்கவாவது வேண்டாமா? திருக்கோவிலுக்குச் செல்லுவோர் கோவிலை இறைவன் இருப்பிடமாகவும், அங்குள்ள திருவுருவங்களை இறைவனின் அருளுருவ அடையாளங்களாகவும் நினைந்து வழிபடவேண்டும்.

திருக்கோயில் உள்ளிருக்கும் திருமேனி தன்னைச்
சிவனெனவே கண்டவர்க்குச் சிவன்உறைவன் அங்கே.

திருக்கோவில்களும், ஆங்குள்ள திருவுருவங்களும் நமக்கு இறை உணர்ச்சியை வளர்ப்பதற்காக நமது முன்னோர்கள் அன்போடு செய்துவைத்த அரும்பெருஞ் செயல்களின் அருள் தோற்றங்களாக விளங்குபவைகளே.


குறிகளும் அடையாளமும் கோயிலும்
நெறிகளும்அவர் நின்றதோர் நேர்மையும்
அறியஆயிரம் ஆரணம் ஓதிலும்
பொறியிலீர்மனம் என்கொல் புகாததே!

என்ற திருநாவுக்கரசர் தேவாரம், கோவில் வழிபாடு மிகவும் அவசியம் என்பதை நமக்கு நன்கு விளக்குகின்றது.

நமது முன்னோர்கள் கோவிலினுள் உள்ள திருவுருவத்தை ஏதோ கற்சிலையென எண்ணவில்லை; ஆங்கு கடவுளையே கண்டார்கள். அவரோடு பேசினார்கள். 'ஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே' என்றும், 'சிந்தையே கோவிலாகக் கொண்ட எம்பெருமான் திருப்பெருந்துறையுறை சிவனே' யென்றும் 'விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக் கண்ணாரமுதமுமாய் நின்றான்' என்றும் இறைவனது உண்மைத் தன்மைகள் பலவற்றையும் அனுபவித்துப் பாடினார்கள். கோவிலில் ஒரு சிறு உருவத்தின் முன்பு நின்று பாடும்போதும் அவர்கள் அங்கு கல்லாலான ஒரு வடிவத்தைக் காணவில்லை; கடவுளையே கண்டார்கள். அன்போடு, உருகி அகங் குழைந்து பாடினார்கள். கண்ணப்பர் காளத்தீஸ்வரர் கோவிலிலுள்ளது ஒரு கற்சிலை என்று எண்ணியிருப்பாரானால் அவருக்கு மாமிச உணவூட்டியிருப்பாரா? தன் கண்ணைத்தோண்டிக் கற்சிலையில் அப்பியிருப்பாரா? அவர் கடவுளையே கண்டார். பொய்யர்க்குப் பொய்யனாகவும், மெய்யர்க்கு மெய்யனாகவும் உள்ளவர் கடவுள். கோவிலில் உள்ள திருவுருவத்தைக் கல்லாகக் காண்போருக்குக் கல்லாகவும், கடவுளாகக் காண்போருக்குக் கடவுளாகவும் நின்று காட்சியளிக்கின்றான் ஈசன். இராமகிருஷ்ணர் ஆலய வழிபாட்டின் மகிமையை சமீப காலத்தில் நமக்கு உணர்த்திவிட்டு மறைந்தார். தாம் பூசை செய்து வந்த காளியின் திருவுருவத்தோடு அவர் பேசினார்; காளியும் பேசினாள். தான் வழிபடும் அம்பிகையின் திருவுருவத்திற்கு உயிருண்டா இல்லையா என்று பஞ்சை அதன் மூக்கின் முன் வைத்துப் பரிசோதித்துப் பார்த்து அத்திருவுருவத்திற்கு உயிருண்டு என்று துணிந்தார்.

பிற சமயத்தோர் கோவிலுக்குப் போவதைத் தங்கள் கடமையாகக் கருதுகின்றனர். வாரம் ஒருமுறை, இருமுறை கிறிஸ்தவ சகோதரர்கள் தங்கள் தேவாலயங்களுக்குப் போகின்றனர். இஸ்லாமிய சகோதரர்கள் தினம் தினம் மசூதிக்குச் செல்லுகின்றனர். தினம் 5 வேளை மசூதிக்குப் போகும் முஸ்லிம் சகோதரர்கள் அனேகர் உண்டு. ஆனால் நம்மில் பலர் கோவிலுக்குப் போகும் கடமையை மறந்துவிட்டோம். படித்தவர்களில் பெரும்பாலோர் ஆலய வழிபாட்டை அறவே கைவிட்டுவிட்டனர். ஏதோ பாமர மக்களுக்கும், பெண்களுக்கும்தான் கோவில்கள் என்று எண்ணவும் செய்கிறார்கள். கோவிலுக்குப் போவதைக் கண்டால் பிறர் ஏளனம் செய்வார்களோ என்று எண்ணும் சகோதரர்களும் உண்டு. இந்துக்களாகிய நாம் ஒவ்வொருவரும் இனியாவது இத்தவறான கருத்துக்களை விட்டொழித்து வாரம் ஒரு முறையாவது தவறாது கோவிலுக்குக் குடும்பத்தோடு சென்று வழிபாடு செய்யும் நியதியை மேற்கொள்வோமாக! அப்படிப் போகும்போது அடக்க ஒடுக்கத்துடன் அமைதியாகச் சென்று சிந்தையை இறைவன்பால் செலுத்தி பக்தியோடு வழிபட்டு உய்வோமாக.





“காந்திய வழியொன்றே
காசினியை உயர்த்துமென்று
சாந்தமாம் நெறியில்சன்
மார்க்கவழி யுரைப்பார்ஜயா”

"ஒவ்வொரு ஆணும் பெண்ணும் அவர்களுடைய வாழ்க்கைக்காக உழைக்க வேண்டும். அதாவது ஒவ்வொரு தனி மனிதனும் அவனுடைய அடிப்படைத் தேவைக்காக உழைத்தாக வேண்டும். அவனுடைய அறிவையும், திறமைகளையும், சொந்த லாபத்திற்காகப் பயன்படுத்தாமல், மனித குலத்தின் சேவைக்காகப் பயன்படுத்த வேண்டும்."

— காந்தியடிகள்

அச்சிட்டோர் :

கலைமணி பிரிண்டிங் இண்டஸ்ட்ரீஸ்
26/65, இராச வீதி, கோயமுத்தூர்-1
போன் : 27360